# உதயன்




www.onlineuthayan.com

34 பக்கங்கள் சுடர் 28 கதிர் 019 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 30 சனிக்கிழமை (15/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# மாணவரை உடன் விடுவிக்க பாதுகாப்புச் செயலாளர் மறுப்பு

## 'கவுன்ஸிலிங்' கொடுக்க வேண்டும் என்கிறார்

கொழும்பு, டிசெம்பர். 15

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களை விடுவிப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நேற்று மேற்கொண்ட முயற்சிகள் சாதகமான பயனைத் தரவில்லை என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்களை உடனடியாக விடுவிக்க முடியாது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையிலான குழுவினரிடம் நேரில் தெரிவித்துவிட்டார் என்று நம்பகரமான வட்டாரங்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தன.

எனினும் "சில நாள்கள் வைத்து உளவளத் துணை [கவுன்ஸிலிங்] கொடுக்கப்பட்ட பின்னரே மாணவர்கள் விடுவிக்கப்படுவார்கள்" என்று பல்கலைக்கழக குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டது என்று முகாமைத்துவ மற்றும் வணிக பீடாதிபதி க.வேல்நம்பி நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார். பாதுகாப்புச் செயலரைச் சந்தித்த குழுவில் அவரும் இடம்பெற்றிருந்தார். மேலதிக விவரங்கள் எவற்றையும் தெரிவிக்கவில்லை.

மாணவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்தி யாழ். பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரும் முயற்சியாக துணைவேந்தர் தலைமையிலான குழுவினர் நேற்று பாதுகாப்புச் செயலரைச் சந்தித்துப் பேசினர். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பீடாதிபதிகள் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர். நேற்றுப் பிற்பகலில் சந்திப்பு இடம்பெற்றது.

மாணவர்களின் கைதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் அனைத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து குழுவினர் எடுத்துரைத்தனர். மாணவர்களை உடனடியாக விடுவித்து பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்ப உதவுமாறு அவர்கள் விடுத்த கோரிக்கையை நிராகரித்த பாதுகாப்புச் செயலர், "மாணவர்கள் உடனடியாக விடுவிக்கப்படமாட்டார்கள். நீங்கள் பல்கலைக்கழகத்தை இயக்க நடவடிக்கை எடுங்கள்"

பார்க்க பக்கம் 4

## தாவடி இளைஞன் இணுவிலில் கடத்தல்

யாழ்ப்பாணம், டிசெ.15

இணுவில் சந்திப் பகுதியில் ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த இளைஞர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் இந்தச் சம்பவம்

பார்க்க பக்கம் 4

## வவுனியாவில் நேற்று விடுவிப்புப் போராட்டம்

கொழும்பு, டிசெ. 15

பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கந்தவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிறைச்சாலைகளில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோரின் விடுதலையை வலியுறுத்தியும், வடக்கு, கிழக்கில் அரசு மேற்கொள்ளும் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்தும் வவுனியாவில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை விடுவிப்பதற்கான கூட்டமைப்பின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 11மணி முதல் நண்பகல் 12 மணிவரை வவுனியா இலுப்பையடியில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன்,

பார்க்க பக்கம் 4



வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது..

# ஒரு லட்சம் தமிழர்களை போரின் பின் 'காணோம்'

## பி.பி.ஸியின் முன்னாள் செய்தியாளர் விவரிப்பு

கொழும்பு, டிசெ. 15

இலங்கையில் நடந்த இறுதிப் போரின் பின்னர் ஒரு லட்சத்து 6 ஆயிரம் பேர் காணாமல் போய்விட்டார்கள் என்று தெரிவித்திருக்கிறார் பி.பி.ஸியின் முன்னாள் செய்தியாளர் பிரான்ஸிஸ் ஹரிஸன்.

இப்படிக் காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது என்று தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

போரின்போது காணாமல் போனவர்கள் குறித்த தனது புள்ளிவிவரங்களுக்கு ஆதாரமாக உலக வங்கி வெளியிட்டுள்ள இலங்கையின் சனத்தொகை தொடர்பான அறிக்கைகளை அவர் முன்வைக்கிறார்.

பிரான்ஸிஸ் ஹரிஸன், இலங்கையில் பி.பி.ஸியின் செய்தியாளராக 2000ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை பணியாற்றி இருந்தார். 'இன்னும் எண்ணப்பட்டு வரும் சாவுகள்' என்ற புத்தகத்தை அவர் அண்மையில் வெளியிட்டிருந்தார்.

போரின் போதும் போரின்

பார்க்க பக்கம் 4

## இப்படித்தான் தூற்றினார்கள்

### சபாநாயகருக்கு பிரதம நீதியரசர் கடிதம்

கொழும்பு, டிசெ. 15

"பைத்தியக்காரப் பெண்மணி", "நீதிமன்றில் நாடகமாடுபவள்" என்றெல்லாம் தன்னை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினர் விசாரணையின் போது தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள் என்று பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க சபாநாயகருக்கு கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார். பிரதம நீதியரசரின் சட்ட விவகாரங்களைக் கையாளும் சட்ட நிறுவனம் மூலமே இந்தக் கடிதம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ள நீலகண்டன் அன்ட் நீலகண்டன் சட்ட நிறுவனம் இது தொடர்பில் ஆராய்ந்து உரிய

பார்க்க பக்கம் 4

# பிரிவினைவாதம் எழுந்ததற்கு தெற்கு இனவாதிகளே காரணம்

## உண்மையை ஒப்புக்கொண்டார் அமைச்சர் ராஜித

யாழ்ப்பாணம், டிசெ. 15

விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை எழுப்புவதற்கு தெற்கு இனவாதிகளின் செயற்பாடுகளே காரணம் என்று நேற்று யாழ்ப்பாணத்தில் உண்மையை உடைத்தார் கடல் தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன.

குருநகரில் புதிய 'ஐஸ்' கட்டித் தொழிற்சாலை மற்றும் கடலுணவு பதனிடும் தொழிற்சாலை ஆகியவை நேற்று திறந்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தொழிற்சாலைகளை திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர் தெரிவித்ததாவது-

வடக்கில் வீதிகளை அமைப்பதாலோ, குளங்களைப் புனரமைப்பதாலோ, வீடுகளைக் கட்டிக் கொடுப்ப

பார்க்க பக்கம் 4




**கோடி கொடுத்தாலும் இந்தப் பொன்னான வாய்ப்பு திரும்பவும் வராது........**

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா ஆலோசனை இறுதி நாள் இன்றாகும் (15.12.2012). கணவன் அல்லது மனைவி 54 வயதுக்குட்பட்டவர்கள், இன்றே விரைந்து வந்து உங்கள் விண்ணப்பங்களை, 100 ஆவது நபருக்கும் விசா பெற்றுக்கொடுத்த சாதனை விற்பன்னரிடம் நேரில் கையளியுங்கள்.



திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 0212219016

(20/10)(3,8)


# நீதிமன்றத்தின் அதிகாரத்தை தெரிவுக்குழு எடுத்துவிட்டது

## உயர் நீதிமன்றம் கருத்து

கொழும்பு, டிசெ. 15

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ததன் மூலம், இலங்கை அரசமைப்பு உயர் நீதிமன்றத்துக்கு வழங்கிய அதிகாரத்தை நாடாளுமன்றத் தெரிவுக்குழு பயன்படுத்திக் கொண்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணையை நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை செய்ததை ஆட்சேபித்து தாக்கல்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போரில் இழைத்த தவறின் மீளாய்வை இழுத்தடிக்கிறது ஐ.நா.

## 2013 நடுப்பகுதியிலேயே செயற்பாடுகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 15

இலங்கையின் இறுதிப் போரின் இறுதிக்கட்டத்தில் ஐ.நா. இழைத்த தவறுகள் குறித்து சுட்டிக்காட்டிய அதன் உள்ளக விசாரணையாளர் சாள்ஸ் பெட்றியின் அறிக்கையை மீளாய்வு செய்ய ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கீ- மூன் நியமித்த குழு உடனடியாகச் செயற்படாது என்றும் அதற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாள்ஸ் பெட்றி குழுவின் அறிக்கையைப் பெற்றுக் கொண்ட ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன், இந்த அறிக்கையை மீளாய்வு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.நா.வின் மற்றொரு அதிகாரி ஜான் எலியாசன் தலைமையில் ஒரு குழுவை உடனடியாக நியமிக்கப் போவதாக அறிவித்திருந்தார்.

எனினும், சாள்ஸ் பெட்றி அறிக்கை சமர்ப்பித்து மூன்று வாரங்கள் கழித்தே, மீளாய்வுக்கான நிபுணர் குழுவுக்குத் தலைமை தாங்கும்படி, ஐ.நாவின் பிரதிச் செயலாளர் நாயகம் ஜான் எலியாசன் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், ஐ.நா. மற்றொரு தகவலை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

நிபுணர் குழுவுக்குத் தலைமை தாங்கும் ஜான் எலியாசன், மீளாய்வில் பங்கேற்பதற்கான பிரதிநிதிகளை நியமிக்கும்படி ஐ.நா. திணைக்களங்களிடமும், நிதியங்களிடமும் கேட்டுக் கொண்டுள்ளார் என அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், அடுத்த ஆண்டின் இரண்டாவது காலாண்டிலேயே இந்த மீளாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த மீளாய்வில், ஐ.நாவின் நிதியங்கள், திட்டங்களின் பிரதிநிதிகளே பங்கேற்பர் என்றும், அனைத்துலக நாணய நிதியம் போன்ற முகவர் அமைப்புகள் இடம்பெறமாட்டா என்றும் ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் மார்ட்டின் நெஸ்ர்க்கி தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் தவறுகள் தொடர்பாக உடனடியாக மீளாய்வு செய்யப்படும் என்று பான் கீ மூன் உறுதியளித்த போதும் அடுத்த ஆண்டு நடுப்பகுதியிலேயே அது முடிவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## முறைப்பாடுகள் 34ஆக உயர்வு

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தொடர்பில் அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் நேற்று வெள்ளிக்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று பதிவாகிய இந்த முறைப்பாடுடன் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த மாத இறுதியிலிருந்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் எனப் பலரும் கைது செய்யப்பட்டனர்.

இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமான எண்ணிக்கை வெளியிடப்படவில்லை.

இருப்பினும் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அவர்களின் உறவினர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் நேற்று முன்தினம் வரை 33 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த மாதம் முதலாம் திகதி கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தொடர்பிலேயே நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-5)

## மாடியிலிருந்து விழுந்து மரணம்

களுபோவில, டிசெ.15

களுபோவில வைத்தியசாலையில் 5ஆம் மாடியிலிருந்து கீழே விழுந்த நோயாளி ஒருவர் மரணமடைந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனால் வைத்தியசாலையில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நோயாளி தவறி விழுந்தாரா இல்லையேல், தற்கொலை செய்துகொண்டாரா என்பது தொடர்பிலான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ங)

## இளம் தம்பதியர் தொடர்ந்து மறியலில்

யாழ்ப்பாணம், டிசெ.15

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலை அண்மித்தபகுதியில் சிங்களவரான நிஷாந்து சம்பத் ராஜபக்ஷ என்பவரின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட நால்வரில் 2 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இளம் தம்பதியர் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

குறித்த சம்பவம் தொடர்பில் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த இளம் தம்பதியர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவுநேரம் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்கு உணவு எடுத்துச்சென்ற தந்தையும் மகனும் மறுநாள் கைது செய்யப்பட்டனர்.

குற்றவியல் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளின் பின்னர் இருவர் விடுவிக்கப்பட்டனர். ஆனால் இளம் தம்பதியர் விடுவிக்கப்படவில்லை என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிப்றி தெரிவித்தார். (த-4-86)

## அல்லாரையில் காணிகளை விடுவிக்கின்றனர் படையினர்

யாழ்ப்பாணம், டிசெ.15

அல்லாரைப் பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிகளிலிருந்து படையினர் வெளியேறவுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அல்லாரையில் இராமாவில் நலன்புரி நிலையம் அமைந்திருந்த காணிகளில் படையினர் தமது முகாம்களை நிரந்தரமாக அமைத்தனர்.

மக்களின் காணிகளைப் படையினர் ஆக்கிரமித்ததால் 60 குடும்பங்கள் வரையில் பாதிக்கப்பட்டன. இந்தக் குடும்பங்கள் வீட்டுத் திட்டம் உட்பட ஏனைய உதவித் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டும் காணிகள் இல்லாமையால் அவற்றைப் பெற முடியாத நிலையில் இருந்த னர்.

இதனால் தமது காணிகளைப் படையினரிடமிருந்து பெற்றுத் தருமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் ஜூலை மாதம் முறைப்பாடு செய்திருந்தனர்.

விசாரணைகளை முன்னெடுத்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளை இது தொடர்பில் விளக்கம் கேட்டு 52ஆவது படைப்பிரிவு, பலாலி படைத் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்குக் கடிதங்கள் அனுப்பியிருந்தது.

இதனையடுத்துப் பொதுமக்களின் காணிகளிலிருந்து நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறுவதாகப் பலாலி படைத் தலைமையகத்தால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உறுதிமொழி எழுத்துமூலம் வழங்கப்பட்டிருந்தது.

கடந்த வாரம் வரை குறித்த இடத்திலிருந்து வெளியேறுவதற்கு படையினர் எந்த நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. இந்நிலையில் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடல் நடத்திய படையினர், விரைவில் குறித்த காணிகளை விட்டு வெளியேறுவதாகவும் அதற்குரிய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (த-5)

## மனித உரிமை ஆணைக்குழுவின் சட்டங்களில் விரைவில் திருத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.15

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரிக்கும் வகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு வருவதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தினம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிராந்திய இணைப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டாலோ, மீறப்படுகின்ற சந்தர்ப்பத்திலோ விசாரணைகளை மேற்கொள்ளலாம். இது மட்டுப்பாடான விடயம்தான்.

தற்போதைய புதிய ஆணைக்குழு மனித உரிமைகள் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றது. அதற்கமையத் திருத்தப்பட்ட புதிய சட்டங்கள் விரைவில் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளன.

மனித உரிமைகள் மீறலையும் விசாரிக்கும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் போது மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் -என்றார். (5)

# நீதித்துறை எழுச்சியினால் பின்வாங்கினார் ஜனாதிபதி

### விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 15

குற்றப் பிரேரணைக்கு எதிராக நீதித்துறை கிளர்ந்தெழுந்ததைக் கண்டு அவ்விடயத்தில் ஜனாதிபதி பின்வாங்க ஆரம்பித்துள்ளார் என்றும், குற்றப் பிரேரணையை திரும்பப் பெற வைப்பதற்கான சக்தி, சட்டத்தரணிகளின் எழுச்சிக்கு இருக்கின்றது என்றும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

போலிக் குழுக்களை நியமிக்காது உடனடியாகக் குற்றப் பிரேரணையை வாபஸ் பெறுமாறு ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இதற்காக ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கம் அனைத்து வழிகளிலும் போராடும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரை நிகழ்த்தும்போது மேற்கண்டவாறு தெரிவித்த விஜித ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:-

18ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தை தனது கைகளில் எடுத்தார் ஜனாதிபதி. அதன்பின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று நாடாளுமன்றை கைப்பொம்மையாக்கினார்.

நாடாளுமன்றம்தான் உயர் அதிகாரம் கொண்டது எனக் கூறுகின்றனர். ஆனால், அது இன்று கைப்பொம்மையாகியுள்ளது. குறிப்பாக, கொலன்னாவ துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளியான துமிந்த சில்வா எங்கிருக்கின்றார் எனத் தெரியவில்லை என்று குற்றப் புலனாய்வு பிரிவினர் கூறும் அதேவேளை, துமிந்த சில்வா சிகிச்சைபெற்று வருகின்றார். அவருக்கு மேலும் மூன்று மாதங்கள் விடுமுறை தேவை என நாடாளுமன்றில் தெரிவிக்கின்றார் சபை முதல்வரும், அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா.

'திவிநெகும' சட்டவரைவில் உள்ளடக்கப்பட்டிருந்த 47 சரத்துகளுள் 16, அதாவது மூன்றில் ஒரு பங்கு அரசமைப்புக்கு முரணாக உள்ளது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அத்துடன், 'இஸட்' புள்ளி விவகாரத்திலும் மேலதிகமாக 5 ஆயிரம் மாணவர்களைப் பல்கலைக் கழகத்துக்கு சேர்க்குமாறும் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதனால் நீதியரசருக்கு எதிரான நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்தது. அவருக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது. இவ்வாறான சூழ்நிலையில்தான் அவருக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. குறித்த பிரேரணையைக் கொண்டுவந்ததும் நீதியரசர் பதவி விலகுவார் என்றுதான் அரசு எண்ணியது. ஆனால், அவ்வாறு செய்யாது முதுகெலும்புடன் நின்று நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்க நீதியரசர் முற்பட்டார். இதற்காக அவரை நாம் மதிக்கின்றோம்.

இதற்கிடையில் குற்றப் பிரேரணைக்கு எதிராக நாடளாவிய ரீதியில் சட்டத்தரணிகள் உள்ளிட்ட நீதித்துறையினர் கிளர்ந்தெழுந்தனர். இவ்வாறு நடக்கும் என அரசு கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. குற்றப் பிரேரணையை விரட்டியடிப்பதற்கான சக்தி, சட்டத்தரணிகளின் எழுச்சிக்கு இருக்கின்றது. இவ்வாறான எதிர்பலைகளுக்கு மத்தியில் நீதித்துறையின் எழுச்சியைக் கண்டு ஜனாதிபதி சுயாதீன குழு நியமிக்கப்படும் எனக் கூறி இது விடயத்தில் சற்று பின்வாங்கியுள்ளார்.

அத்துடன், குற்றப் பிரேரணையைத் தான் விரும்பவில்லையெனக் கூறி அதில் கையொப்பமிட்ட 11 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி காட்டிக் கொடுத்துள்ளார். சுயாதீன குழு என்றெல்லாம் போலிக் கதைகளைச் சொல்லாது குற்றப் பிரேரணையை உடன் வாபஸ் பெறுமாறு நாம் வலியுறுத்துகின்றோம். இதற்காக சகல வழிகளிலும் எமது அமைப்பு போராட்டங்களை முன்வைக்கும் - என்றார் விஜித ஹேரத் எம்.பி.

# ரூபா 12 லட்சம் பெறுமதியான நகைகள், பொருள்கள் திருட்டு

### குடாநாட்டில் கடந்த வாரத்தில் மட்டும்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ். குடாநாட்டில் கடந்தவாரம் இடம்பெற்ற 9 திருட்டுச் சம்பவங்களில் 12 லட்சத்து 8 ஆயிரத்து 550 ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன.

''அதிகளவாக புலோலியில் 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன'' என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.எம்.ஜெப்றி தெரிவித்ததவாது-

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு :-

கடந்த வாரம் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புலோலியில் 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐந்தரைப் பவுண் நகைகள் திருட்டுப் போயுள்ளன. 7ஆம் திகதி இரவு வீட்டை உடைத்தவர்கள் நகைகளைத் திருடியுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குப்பிளான் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், கைத்தொலைபேசி என்பன திருட்டுப் போயுள்ளன.

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டுக்குளிப் பகுதியில் கடந்த புதன்கிழமை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மடிக்கணினி திருட்டுப் போயுள்ளதென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பஸ் நிலையத்தை அண்மித்துள்ள கடை ஒன்று உடைக்கப்பட்டு 76 ஆயிரம் ரூபா பெறுமதியான கருவாடு திருடப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் தொல்புரம், நாவாந்துறை, உடுவில், ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சண்டிலிப்பாய் டச்சு வீதியில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வீட்டிலிருந்து திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் பகுதியில் வீடு உடைத்து 13 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளது. அராலியில் கடை உடைத்து 12 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன.

கொடிகாமம் நாவலடியில் உள்ள பாடசாலையின் அதிபர் அலுவலகத்தில் இருந்து 24 ஆயிரத்து 850 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தும்பளையில் 7 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமாக 35 பாலை மரக்குற்றிகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் - என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று குறைகள் தீர்க்கும் தினம்

யாழ்ப்பாணம், டிசெ.15

தேசிய சுகாதார வாரத்தின் ஆறாம் நாளான இன்று குறைகளைத் தீர்க்கும் தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சங்கானை பிரதேச வைத்தியசாலை ஆகிய இடங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணி வரையும், வேலணை பிரதேச வைத்தியசாலையில் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும் நடமாடும் சேவை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவுள்ளன.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுக்களால் சுகாதார சேவை பணியாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவுள்ளன. அத்துடன் பொது மக்கள் இக்குழுக்களிடம் வைத்திய நிறுவனங்களின் சேவைகள் பற்றிய பிரச்சினைகளையும், எதிர்பார்ப்புக்களையும் தெரிவிக்கலாம் எனவும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-14)

# கடற்றொழில் பரிசோதகர்களாக பட்டதாரிகளை இணைக்கத் திட்டம்

## நீரியல் வளத்துறை அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.மாவட்டத்தில் 25 பட்டதாரிகளை கடற்றொழில் பரிசோதகர்களாக இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



யாழ்.குருநகர் பகுதியில் ஐஸ் தொழிற்சாலையைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

வடபகுதிக்கு வரும் போது கையை விசுக்கிக் கொண்டு வருவதில்லை. என்னால் இயன்றளவு உதவிகளை மேற்கொண்டுள்ளேன்.

இந்த ஐஸ் தொழிற்சாலை 35 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டது. எதிர் காலத்தில் 35 மெற்றிக்தொன் ஐஸ்கட்டியை இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதற்கு ஏற்றவாறான வழிவகைகள் செய்யப்படும்.

இங்கு 25 இளைஞர்கள் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும். இந்தத் தொழிற்சாலையின் ஊடாக மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஐஸ்கட்டியிலும் இருந்து 10 ரூபா இதற்கு ஒதுக்கப்படவுள்ளது என்றார்.

குருநகர் அன்னை கடலுணவு உற்பத்தி நிலையத்தைத் திறந்து வைப்பதற்காகக் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் 9.30 மணியளவில் வருகை தந்திருந்தார்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். பின்பு அமைச்சரை ஒருவாறு சமாளித்துக் கொண்டு அழைத்துச் சென்றனர்.

மங்கல விளக்கேற்றிய பின் பெயர்ப்பலகையை அமைச்சர் ராஜித சேனாரத்ன திறந்து வைத்தார்.

அங்கு கடலுணவு, நண்டு பதனிடும் தொழிற்சாலையைப் பார்வையிட்டார்.

குருநகர் லங்காநோர்த் ஐஸ் தொழிற்சாலையைத் திறந்து வைத்ததோடு தொழில் கூடத்தையும் பார்வையிட்டார்.

இந்தநிகழ்வில் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, கடற்றொழில் நீரியல்வளத் துறை உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி, பரிசோதகர் ரமேஸ்கண்ணா, இலங்கை மீன்பிடி உற்பத்திக் கூட்டுத்தாபன தலைவர் மகேந்திரசேனாரத்தின, கடற்றொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-13-17)

### கடந்த வாரம் ஒத்திவைக்கப்பட்ட

## தமிழ் இலக்கியப் பெருவிழா செவ்வாய்க்கிழமை நல்லூரில்

யாழ்ப்பாணம், டிசெ.15

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் கடந்த வாரம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியப் பெருவிழாவின் கலை நிகழ்வுகளும் கலைஞர் கௌரவிப்பும் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் இதனைத் தெரிவித்துள்ளார்.

காலை 9 மணிக்கு நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தின் 'கந்தையா நாகப்பு அரங்கில் கலை நிகழ்வுகள் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

நல்லூர் கோயில் முன்றிலிலிருந்து பண்பாட்டுப் பேரணி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில், நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தின் நல்லதம்பி சிவசுப்பிரமணியம் அரங்கில் 2011 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூற் பரிசுத் தேர்வு விருது மற்றும் 2012 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது என்பன வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## நல்லூர் பிரதேச சபையின் பட்ஜெட் நேற்று நிறைவேறியது

யாழ்ப்பாணம், டிசெ.15

நல்லூர் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் உறுப்பினர்களின் ஒட்டுமொத்த ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபையின் விசேட கூட்டத்தில் சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட போது உறுப்பினர்களின் ஒட்டுமொத்த ஆதரவுடன் நிறைவேறியது.

இதில் வீதிகள் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் சில வீதிகளில் மாற்றங்கள் தேவை என்று உறுப்பினர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவை தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தலைவர் ப.வசந்த குமார் தெரிவித்தார். (ம-7)

### ஊழியர் சேமலாப நிதித் திட்டத்துக்கு

## கைவிரல் அடையாளம் பெறும் பணிகள் யாழில் ஆரம்பம் -11

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்துக்கு விண்ணப்பிப்பவர்களுக்கான கைவிரல் அடையாளம் பெறும் பணிகள் யாழ்.மாவட்டத் தொழில் திணைக்கள அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணப் பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பண்ணைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட திணைக்களத்தின் கட்டடத்தில் இந்த கைவிரல் அடையாளம் பெறும் பிரிவு கடந்த 3 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஊழியர் சேமலாப நிதிக்கு விண்ணப்பிப்பவர்கள் இதுவரை காலமும் கொழும்பு சென்றே கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்து வந்தனர். தற்போது இந்தச் சிரமம் தவிர்க்கப்பட்டுள்ளது. இதற்கு விண்ணப்பிப்பவர்கள் தற் போது கைவிரல் அடையாளத்தை யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்ய முடியும்- என்றார். (த-17)

## தொழில்சார் வழிகாட்டல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கான தொழில்சார் கல்வி வாய்ப்புக்கான வழிகாட்டலும் சிறுவர்களுக்கான நிகழ்வுகளும் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன. இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் இரவு 8 மணி வரை தொழில்சார் கல்வி வாய்ப்புக்கான வழிகாட்டலும் சிறுவர்களுக்கான நிகழ்வுகளும் இரவு 8 மணி முதல்இரவு 11 மணிவரைதிரைப் படக் காட்சியும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் மாலை 6 மணிவரை தொழில்சார் கல்வி வாய்ப்புக்கான வழி காட்டலும் சிறுவர்களுக்கான நிகழ்வுகளும் இரவு 8 மணிக்கு இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

விசேட நிகழ்வுகளாக க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான தொழில் நுட்ப கல்விசார் பயிற்சிகளை தொழில் நுட்பவியல் கல்லூரி, இளைஞர் சேவைகள் மன்றம், தொழில் பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபை, தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு நிறுவனம் என்பன வழங்கவுள்ளன. இதனைவிட க.பொ.த. உயர்தர உயிரியல் துறை மாணவர்கள் லங்கமித்த ஆயுள்வேத கல்லூரியின் வைத்தியத் துறையில் கல்வி பயில்வதற்கான வாய்ப்பு, முக அழகு, சோதிடம், இரத்தப் பரிசோதனை, இலவச வைத்திய ஆலோசனை என்பனவும் இடம்பெறவுள்ளன. (ம-14)

### நிகழ்வுகள்

## இன்று

### வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு

சவாகச்சேரிநகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் ஒன்பது பேருக்கு வாழ்வாதார உதவிக் கடன் தொகை வழங்கும் நிகழ்வு மாலை 4 மணிக்கு சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவைகள் நிலையத்தினரால் சாவகச்சேரிநகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாக கடன் வழங்கப்படவுள்ளது.

சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவைகள் நிலைய உதவிப் பணிப்பாளர் ஸ்ரீ.கலாதரன் கலந்து கொள்வார்.

இந்த நிலையத்தால் யாழ். மாவட்டத்தில் சிறப்பாக இயங்கும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக சங்க உறுப்பினர்களுக்கு சுயதொழில் உதவிக் கடன்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

### கண்காட்சியும் கலை நிகழ்வும்

மயிலணி ஜனசக்தி முன்பள்ளியின் மழலைகளின் கண்காட்சியும் கலைநிகழ்வும் காலை 9.30 மணிக்கு வரியப்புலம் முத்துமாரி அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வநாயகம் சிவயோகம் கலந்து கொள்வார். (ம-14)

உடனடியாக பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

40 அல்லது 50 வருடம் பழமை வாய்ந்த

பனாரஸ் சில்க் சேலைகள், சில்வர் சரிகைச்சேலைகள் போன்றவை எந்தத் தரத்திலும் எந்த நிலையிலும் எமக்குத் தேவைப்படுகின்றன

றொலெக்ஸ், ஒமேகா, கார்டியர், IWC பற்றிக் பிலிப்பே, ரியூடர், வச்சிறோன் கோன்ஸ்ரிரன்ட், பிரிஜேற், பிளன்ஸ் பெய்ன், பிறிற்லிங் மற்றும் சுவிஸ் தயாரிப்பு மணிக்கூடுகள் பாவனையில்லாத (எந்த நிலையில் இருந்தாலும்-பாவிக்க முடியாத) குறோனோகிறாவ் மற்றும் றெபீட்டர் போக்கற் கடிகாரங்கள்,



பிரித்தானிய பழைய வெள்ளி நாணயங்களும் தாள்களும் எம்மிடம் கையளித்து பணத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பழைய பேனாக்களைக் கொடுத்து உடன் பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். கீழ்க்காணப்படும் பேனாவகைகள் மொன்ற் பிளான்ஸ், ஸ்வான், பாக்கர் மற்றும் வோட்டர்மென்ஸ் போன்றவையும் பழைய இந்திய நாணயங்களும் தாள்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

திகதி: 15-12-2012 முதல் 17-12-2012 வரை

இடம்: ரில்கோ சிற்றி ஹோட்டல், 70/6, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: மு.ப. 10.00 மணி முதல் இரவு 7.00 மணிவரை

(26801) (10.6.7)

தொடர்பு:

இ.தயாளன் 0727000177

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிகள் சங்கக் கூட்டம் இன்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும்

கொழும்பு, டிசெ. 15

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் அடுத்த நகர்வுகள் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இன்று கூடி ஆராயவுள்ளது.

உயர் நீதிமன்றில் நடக்கும் இன்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து சட்டத்தரணிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கை இளம் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுப் பிரதிநிதி சட்டத்தரணி நுவன் போபகே இது குறித்து தெரிவித்ததாவது:

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிரான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து நாளை (இன்று) இடம்பெறும் கூட்டத்தில் முக்கிய பல தீர்மானங்களை நிறைவேற்றவுள்ளோம்.

அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு சட்டத்தரணிகளை அவர்களைத் தயார்படுத்தி வருகிறோம். பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து நீக்கி, அவருக்குப் பதிலாக பதில் பிரதம நீதியரசரொருவரை நியமித்தால் அதனை நாம் கடுமையாக எதிர்ப்பதோடு, நியமிக்கப்படும் பதில் பிரதம நீதியரசரையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

பதில் பிரதம நீதியரசரை நியமிக்கவேண்டியதேவை தற்போதைக்கு இல்லை என அரசு கூறினாலும், எதிர்காலத்தில் இதுபோன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றவுள்ளோம் - என்றார். (சி)

# ஆஸி. கனவில் விழுந்தது மண்;

## 14 பேர் கைது

கொழும்பு, டிசெ. 15

ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிலாபத்தைச் சேர்ந்த 14 பேர் நேற்றுமுன்தினம் மாலை ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செங்கலடி கிராமத்திலுள்ள வீடொன்றிலிருந்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 5 பெண்கள், 6 சிறுவர்கள், மற்றும் 3 ஆண்கள் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

### 5 பெண்கள், 6 சிறுவர்கள், மற்றும் 3 ஆண்கள் உள்ளடங்குகின்றனர்

இவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆஸ்திரேலியா செல்வதற்கான ஏற்பாடுகளுடன் இவர்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலையடுத்து குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் இவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

# புதையல் தோண்டிய அறுவர் கைது!

கொழும்பு, டிசெ. 15

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 6 சந்தேகநபர்களை கொட்டவெஹர பகுதியில் வைத்து பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர்.

புதையல் எடுக்க பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பலவற்றைப் பொலிஸார் சந்தேகநபர்கள் வசமிருந்து மீட்டுள்ளனர். குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட கொட்டவெஹர பகுதியில் ஏற்கனவே இவ்வாறு புதையல் தோண்டிய பலர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாவடி இளைஞன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இடம்பெற்றுள்ளது. தாயாருடனும் சகோதரியுடனும் ஓட்டோவில் இளைஞரொருவர் பயணம் செய்து கொண்டிருந்தார். அந்த வேளை இணுவில் சந்திப் பகுதியில் வைத்து வானொன்றில் வந்தவர்கள் ஓட்டோவை இடைமறித்து இளைஞரைக் கடத்திச் சென்றனர் என்று அவரது சகோதரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கடத்தப்பட்ட இளைஞரின் சகோதரியால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட இளைஞர் தாவடி வடக்கு காளி கோவிலடியைச் சேர்ந்தவர்.

நேற்றுக்காலை மேற்படி முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகவும் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (த-5-86)

## மாணவரை உடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

என்று பதிலளித்தார் என கொழும்புத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன், ஒன்றியச் செயலர் ப.தர்சானந், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயந்த், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் எஸ்.சொலமன் ஆகியோர் நவம்பர் மாத இறுதியில் கைது செய்யப்பட்டனர். மூன்று வாரங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்கள் கடந்த வாரம் வெலிகந்த முகாமுக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

அவர்களை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தி பல்வேறு அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றன.

(சி)

## இப்படித்தான்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும்சபாநாயகரைக் கேட்டிருக்கிறது.

தெரிவுக்குழு விசாரணையின்போது தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லைஎன்று தெரிவுக்குழுவின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டிருந்த நிலையிலேயே மேற்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

''பிஸ்ஸு கேஹேனி(பைத்தியக்காரப் பெண்மணி), அப்பி மே நோனவ மெத்தன தியாகென மடவனவா(நாங்கள் இந்தப் பெண்ணை இங்கு வைத்து மேய்ப்போம்), பபா - நேஹே பபா உக்குங் (குழந்தை - இல்லை பால்குடிக் குழந்தை), உஸாவியே நாடகங் நட்டனவா(நீதிமன்றில் நாடகமாடுகிறார்),மெயாட்ட ஆதம்லா கொடக் இன்னவா(இவருக்கு நிறைய ஆதாம்கள் உள்ளனர்), பபா வகே இட்டியட்ட பபா வகே வெட நேஹே (குழந்தை போல் இருந்தாலும் வேலைகளோ குழந்தைபோல் இல்லை)'' என்பன போன்ற வார்த்தைப் பிரயோகங்களால் பிரதம நீதியரசர் நிந்திக்கப்பட்டதாகவும் இவற்றை ஏற்றுக்கொள்ளவே முடியாதென்றும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதம நீதியரசர் ஒருவர் மீது -அதுவும் பெண்மணி ஒருவர் மீது- இவ்வாறான வார்த்தைப்பிரயோகங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் மேற்கொள்ளமுடியாதென்பதால் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ங-சி)

## ஒரு லட்சம் ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பின்னரும் தமிழ் மக்கள் படும் துன்பங்களை ஆங்கிலத்தில் எடுத்துச் சொல்வதாக அந்த நூல் எழுதப்பட்டுள்ளது. நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு விரைவில் சென்னையில் வெளியிடப்பட உள்ளது. அதன் வெளியீட்டுக்காக சென்னை வந்த ஹரிஸன், அங்கு செய்தியாளர்களிடம் பேசினார்.

''தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் மற்றும் நாட்டைவிட்டுத் தப்பியோடியவர்களின் எண்ணிக்கை காணாமல்போனவர்களின் எண்ணிக்கையில் உள்ளடங்கி இருக்கலாம். ஆனால் என்ன நடந்தது என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும். உலக வங்கியின் சனத்தொகை அறிக்கையின்படி முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் போரின் பின்னர் 1.06 லட்சம் பேர் காணாமல்போயுள்ளனர்'' என்றார் ஹரிஸன்.

போரில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது காணாமல்போனார்கள் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு தொடர்ச்சியாக மறுதலித்து வருகின்றது.

## பிரிவினைவாதம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தாலோ தமிழ் மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்துவிட முடியாது. இதுவே மனித மனங்களுக்கும் முதலீட்டுக்கும் இடையிலான வித்தியாசம்.

வடக்கு, கிழக்கு மக்கள் தமது தேவைகளுக்காகவே போராடினர். தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் நெருக்கமான உறவு இருக்கிறது. இடைக்காலத்தில் ஏற்பட்ட இனவாதமே இந்த உறவை சீர்குலைத்தது.

விடுதலைப் புலிகள் சிங்களத் தலைவர்களைக் கொன்று குவிக்கவில்லை. சிங்கள இனவாதிகளையே இலக்கு வைத்தனர். அவர்களது கோரிக்கைக்கு இனவாதிகளே தடையாக இருந்தனர்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் ஈரோஸ் இயக்கத்துடன் இணைந்து அரசியல் நடத்தினோம். ஈ.பி.ஆர்.எல்.எவ் உடன் இணைந்து கிழக்கில் அரசியல் நடத்தினோம். புளொட்டுடன் இணைந்து வவுனியாவில் அரசியல் நடத்தினோம். அப்போது ஜே.வி.பிக்கு எதிராகவே எமது செயற்பாடுகள் இருந்தன.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் உதயன், ஈழநாடு பத்திரிகைகள் வெளிவந்தன. அதில் எங்களுடைய செய்திகள் தலைப்புச் செய்திகளாக வந்தன.

இந்த உறவுகள் எல்லாம் இடையே ஏற்பட்ட போர் காரணமாக முறிந்துபோய்விட்டன.

டி.எஸ். சேனநாயக்க காலத்திலோ, சந்திரிக்காவின் காலத்திலோ செலவிடப்படாத பணம் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் செலவிடப்படுகிறது. இருந்தாலும் தமிழ் மக்களின் மனங்களை இந்த அபிவிருத்தி வென்றுவிடாது. - என்றார். அமைச்சர் உரையாற்றிய இந்த நிகழ்வில் சிறுகைத்தொழில் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சரும் உடன் இருந்தார்.

(ஐ-13)

## நீதிமன்றத்தின் ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணையின் போதே உயர் நீதிமன்றம் இவ்வாறு கருத்து வெளியிட்டது.

குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் அதிகாரம் இலங்கை அரசமைப்பின்படி நீதிமன்றங்களுக்கு மட்டுமே உள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படி இருந்தபோதும் நீதிமன்ற அதிகாரம் இல்லாத நாடாளுமன்றத் தெரிவுக்குழு பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ததன்மூலம் அரசமைப்பை மீறியுள்ளதாகவும் மனு குற்றஞ்சாட்டுகிறது.

இந்த மனு மீது நேற்றுமுன்தினமும் நேற்றும் விசாரணை நடந்தது. அரசு தரப்பில் முற்பட்ட சட்ட மா அதிபர், உயர் நீதிமன்ற நீதியரசர்களை சாதாரண மக்களைப் போல் கருதமுடியாது என்பதாலேயே அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரித்தது என்றார்.

குறுக்கிட்டுக் கேள்வி எழுப்பிய நீதியரசர் காமினி அமரதுங்க, நாட்டின் பொதுச்சட்டமாக அங்கீகரிக்கப்படாத நாடாளுமன்றக் கட்டளைகளைப் பயன்படுத்தி நீதியரசர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வது சட்டரீதியானதா என்று வினவினார்.

அரசமைப்பின்படி தமக்குள்ள அதிகார எல்லைக்குள் நின்றுகொண்டு மட்டுமே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவால் செயற்படமுடியும் என்று சுட்டிக்காட்டிய நீதியரசர் காமினி அமரதுங்க, அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு பொருள் விளக்கம் கொடுக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு மட்டுமே இருப்பதாகவும் கூறினார்.

நீண்ட வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் வழக்கு விசாரணை முடிவுக்கு கொண்டுவரப்பட்டன. இதன் மீதான தீர்ப்பு அடுத்துவரும் நாள்களில் நாட்டின் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பப்படவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுக்கள், அரசமைப்புக்கான விளக்கங்களைக் கோரி நின்றதன் காரணத்தால் உயர் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தன.

## வவுனியாவில் நேற்று...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சி.சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா நகரசபை பிரதித் தலைவருமான எம்.எம்.ரதன், கூட்டமைப்பின் உள்ளூராட்சிசபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் இயக்கத்தின் தலைவர் த.சித்தார்த்தன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான பாஸ்கரா, புதிய ஜனநாயக மாக்சிஸ லெனினிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், நவசமசமாஜக் கட்சியின் பிரதிநிதி ஜனகன், காணாமல்போனோரைக் கண்டறியும் குழுவின் பிரதிநிதி மகேந்திரன், கல்விச் சமூகத்தினர், கைது செய்யப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள், காணாமல்போனவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு தமது கண்டனங்களைத் தெரிவித்தனர்.

''இலங்கை அரசே யாழ். பல்கலை மாணவர்களை உடனே விடுதலை செய்'', ''முறையற்ற கைது நடவடிக்கைகளையும் ஆட்கடத்தல்களையும் உடன் நிறுத்து'', ''அரச பயங்கரவாதம் எமக்கு வேண்டாம்'', ''சிங்களக் கைக் கூலிகளே தமிழ் மாணவர்களைக் காட்டிக்கொடுக்காதே'', ''வெலிக்கந்த என்ன தமிழர்களின் கொலைக்களமா? மஹர என்ன பலிபீடமா?'', ''தமிழ் அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்'', ''மத முரண்பாட்டைத் தேற்றுவிக்காதே'', ''அரச சிங்களக் குடியேற்றங்களை உடன் நிறுத்து'', ''தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்காதே; தமிழர் நிலங்களைக் கையளி'', ''ஒரு மரம் வெட்டின் எமக்குச் சிறை; காட்டையே அழிக்கும் உமக்கு என்ன தண்டனை?'', ''மாற்றாதே மாற்றாதே நில எல்லைகளை மாற்றாதே'', ''அழிக்காதே அழிக்காதே தமிழர்களை அழிக்காதே'', ''தமிழ்க் கல்விச் சமூகத்தை திட்டமிட்டு ஒழிக்காதே'', ''சிரட்டையில் மோதிரம் செய்வதா புனர்வாழ்வு?'', ''கே.பிக்கு விடுதலை; மாணவர்களுக்கு சிறையா?'', ''இலங்கை அரசே! எம் தேச விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களை நினைவு கூரும் நிகழ்வுகளுக்கு இடையூறு செய்யாதே'', ''சர்வதேசமே! சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ்த் தேசத்தை உடன் அங்கீகாரம் செய்'' போன்ற பல கோஷங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் விண்ணதிரக் கோஷமிட்டனர்.

★ கைது செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை உடனே விடுதலை செய்யவேண்டும்.

★ வடக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள இனவாத நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும்.

★ பல்கலைக்கழகங்களுக்குள் நிலவும் கலாசார மற்றும் கல்விச் சீரழிப்புகளை உடனடியாக நிறுத்தவேண்டும்.

★ காரணமற்ற கைதுகளை உடன் நிறுத்தவேண்டும்.

★ தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணாமல்போனோரைக் கண்டறிதல்.

★ மாணவர்களை சிறையிலடைப்பதை நிறுத்தல்.

★ காணி அபகரிப்புகளை நிறுத்துதல்.

★ மீள்குடியேறிய மக்களைச் சுதந்திரமாகச் செயற்பட விடுதல் வேண்டும்.

ஆகிய எட்டுக் கோரிக்கைகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சிரியாவில் ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னூட்டம் என்னவாகும்...?

கடந்த 20 மாதங்களாக சிரியாவில் ஜனாதிபதி அஸாத்தின் படைகளுக்கும் கிளர்ச்சிப்படைகளுக்கும் இடையில் நடைபெற்ற சண்டை இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. டூனிஷியா, எகிப்து, லிபியா வரிசையில் சிரியாவிலும் அஸாத்தின் ஆட்சி எந்நேரமும் கவிழ்க்கப்படலாம் என்று எதிர்வு கூறப்படுகிறது.

ஏற்கனவே சுமார் 400 அமெரிக்க - டச்சுப் படையினர் சிரியாவுடனான துருக்கி எல்லைக்கு அனுப்பப்பட்டுவிட்டனர். சிரியாவிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்காவும் இஸ்ரேலும் அமெரிக்க சார்பு மேற்கு நாடுகளும் குற்றம் சுமத்தி இருக்கின்றன. நேட்டோவின் படையெடுப்பை நியாயப்படுத்தும் நடவடிக்கையாகவே அதனைக் கருதமுடியும்.

அஸாத்தின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சண்டையில் இதுவரை 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். கிளர்ச்சிப்படைகள் மீது அஸாத்தின் படைகள் மிகவும் மோசமான குண்டுத் தாக்குதல்கள் நடத்தி உள்ளன. கண்மூடித்தனமான தாக்குதல்களே பலர் உயிரிழக்கக் காரணமாக அமைந்தது என்பதும் வெளிப்படை.

இவற்றுக்கு அப்பால் அஸாத்துக்குப் பின்னர் யார் என்பதே இன்று எழும் பிரதான கேள்வி. அஸாத்தின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்பு ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும், லிபியாவிலும் உள்ளது போன்று தனக்குச் சார்பான ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கம். இது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பதே அமெரிக்காவிடம் எழுந்துள்ள சிக்கல் நிறைந்த பிரச்சினை ஆகும்.

அஸாத்துக்குப் பின் இஸ்லாமிய தீவிரவாதிகளின் கைக்கு சிரியாவின் அதிகாரம் செல்லுமானால், அமெரிக்காவின் நோக்கங்கள் அனைத்துமே தவிடுபொடியாகிவிடும். மறு வளத்தில் அஸாத்தை விட பல மடங்கு தீவிரவாதி ஒருவரை உருவாக்கியதாக முடிந்து விடும்.

அஸாத்தின் ஆட்சி கவிழ்க்கப்படும் போது சிரியாவின் நவீன ஆயுதங்கள் லெபனானில் இயங்கும் பிரதான ஷியா தீவிரவாத இஸ்லாமிய அமைப்பான 'ஹிஸ்புல்லா'வின் கைக்குச் சென்று விடலாம் என்று இஸ்ரேல் அச்சம் தெரிவித்துள்ளது.

லிபியாவில் கடாபியின் படையினரின் ஆயுதங்கள் ஆட்சிக் கவிழ்ப்பின்போது மற்றொரு இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான அல் - குவைதாவிடம் சிக்கின. ஆபிரிக்க நாடான மாலியின் வட பகுதி அல் - குவைதாவின் பிடிக்குள் இன்று இருந்து வருகிறது.

அத்தகைய ஒரு நிலைமை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கே அமெரிக்கா மிகவும் அவதானமாகச் செயற்படுவதாகத் தெரிகிறது. மத்திய கிழக்கில் அமெரிக்காவுக்கு நட்பான துருக்கி, கட்டார், சவூதி அரேபியா ஆகியவை அஸாத்துக்கு எதிரான சண்டையைத் துரிதப்படுத்தி முடிவுக்குக்கொண்டுவருமாறு அமெரிக்காவை நிர்ப்பந்திக்கின்றன. ஆனால் அஸாத்துக்கு எதிரான கிளர்ச்சிக்குழுக்களில் உள்ள இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களை இனம்கண்டு நசுக்குவதிலேயே அமெரிக்கா கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

அவ்வகையான குழுக்களில் ஒன்றான ஜப்ஹாட் அல் - நுஸ்ரா என்ற குழுவை அமெரிக்கா பயங்கரவாத அமைப்பாக அண்மையில் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அஸாத்துக்கு எதிரான சண்டையில் ஈடுபட்டுள்ள குழுக்களில் நூற்றுக்கு மேற்பட்டவை இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள். அவற்றின் பிரதான கோஷம், சிரியாவில் அமெரிக்கா தலையிடக்கூடாது என்பதே.

அஸாத்துக்குப் பின் அமெரிக்கா எதிர்பார்க்கும் சிரியா, இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் ஏற்கக்கூடியது அல்ல. இஸ்ரேலுடன் நல்லுறவு வேண்டும். துருக்கியுடன் பேச்சு நடத்தி எல்லைப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். ஈரான், ரஷ்யா, சீனா மற்றும் ஹிஸ்புல்லா, பலஸ்தீன இயக்கங்களுடனான தொடர்புகளைத் துண்டிக்கவேண்டும். கட்டாரின் எரிவாயுக் குழாய்கள் சிரியா ஊடாக துருக்கி செல்ல அனுமதிக்க வேண்டும். துருக்கியில் இருந்து சிரியா ஊடாக இஸ்ரேலுக்குத் தண்ணீர்க் குழாய்கள் செல்ல அனுமதிக்க வேண்டும். அஸாத்தின் பின்னரான சிரியாவிடம் அமெரிக்கா இவற்றையே எதிர்பார்க்கிறது என்பது வெளிப்படை. அதாவது, லிபியா போன்ற ஒரு சிரியாவே அமெரிக்காவுக்குத் தேவை என்பதாகும்.

அஸாத்துக்கு எதிரான சண்டை முடிவடைந்தாலும் இஸ்லாமிய அரசு ஒன்று உருவாகும் வரை சிரியாவில் சண்டை தொடருவதற்கான சாத்தியங்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

நூறு நாடுகளுக்கு மேல் அஸாத்துக்கு எதிரான கிளர்ச்சிப்படைகளுக்கு ஆதரவு தெரிவித்தாலும், அஸாத்தின் பதவிக் கவிழ்ப்புக்குப்பின் அமெரிக்கா புதிய பிரச்சினைகளை எதிர்நோக்கும் சாத்தியமே அதிகமாகக் காணப்படுகிறது.

எது எப்படியோ சிரியாவில் ஆட்சிக் கவிழ்ப்பு ஏற்பட்டாலும் கூட, அதற்குப் பின்னரான அரசியல் நிலைமை என்னாகும் என்று இப்போது எதிர்வு கூற முடியாது..!

# நாய், பூனை கடித்தால், கீறினால் வைத்திய ஆலோசனை பெறுங்கள்

## அசண்டை செய்தால் உயிரிழப்பு ஏற்படலாம்
## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ.15

நாய், பூனை கடித்தாலோ அல்லது அவற்றின் கீறல்கள் உடலில் ஏற்பட்டாலோ உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். அசண்டையாக இருக்காதீர்கள், வீணாக உயிரைக் கூட இழக்க நேரிடும்.

இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விசர் நாய்க் கடிக்கு இலக்கான 3 வயதுச் சிறுவனொருவன் உரிய நேரத்தில் சிகிச்சை பெறத் தவறியதால் உயிரிழந்த சம்பவம் ஒன்று அண்மையில் குடாநாட்டில் இடம்பெற்றுள்ளது.

விசர் நாய்க்கடிக்கு உரிய நேரத்தில் சிகிச்சையளிக்கப்பட்டால் வீணான உயிரிழப்பில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கை மூலம் உயிரிழப்புக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

மரணத்தை ஏற்படுத்தக் கூடிய விசர் நாய்க் கடியிலிருந்து நாம் அனைவரும் பாதிக்கப்படாதிருக்க முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நாய், பூனை போன்றவற்றால் கடியுண்டவர்கள் அல்லது நகக் கீறலுக்கு ஆளானவர்கள் அனைவரும் வைத்தியசாலை சென்று முழுமையான சிகிச்சை பெற வேண்டும்.

தங்கள் வளர்ப்பு நாய்கள், தங்களால் உணவளிக்கப்படும் நாய்கள் அனைத்தையும் வீட்டுக்குள் இருந்து வீதிக்கு செல்லாதவாறு கட்டி வளர்க்க வேண்டும்.

வளர்ப்பு நாய்களுக்குத் தேவையான ஏ.ஆர்.வி. உட்பட தடுப்பூசிகளை பெற்றுக் கொடுத்து சுகாதார நிலையில் வைத்திருக்க வேண்டும்.

விசர் நோய் ஏற்பட்ட நாய்கள் கோபமடைந்த நிலையில் உள்ள அல்லது அதிகமாக உமிழ் நீர் சுரக்கின்றனவாக வால் தொங்கிய நிலையில் காணப்படும். அவ்வாறான நாய்கள், அசாதாரண நிலையில் உள்ள நாய்கள் போன்றன தொடர்பில் கண்காணிப்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

விசர் நாய் என இனம் காணப்படின் உடனடியாக உள்ளூராட்சி சபையினருக்கு அல்லது, சுகாதார பகுதியினருக்கு அறிவித்து உரிய நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-16)

## ஆயிரம் ரூபா குளறுபடி; நெருக்கடியில் முதியோர்

வலி. வடக்கு, டிசெ. 15

யாழ். மாவட்டத்தில் 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவில் காணப்படும் குளறுபடிகளால் முதியவர்கள் குழம்பிப் போய் உள்ளனர்.

கடந்த காலத்தில் இந்த முதியவர்களுக்கு பொது சன மாதாந்த உதவிப் பணமாக கொடுப்பனவு வழங்கப்பட்டது. சிலர் சமுர்த்தி நிவாரணமும் பெற்று வந்தனர்.

தற்போது இந்தக் கொடுப்பனவுகளை இடை நிறுத்தி மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனத் தெரிவித்து தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் மூலம் ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒரு தடவை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாத காலத்தில் ஒரு தடவை மட்டும் ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. மிகுதிப் பணம் தொடர்ந்து வழங்கப்படும் என்று சமூக சேவை அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்களால் முதியோருக்கு அறிவிக்கப்பட்டது.

தற்போது நவம்பர் மாதத்துக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். இதனை உடனடியாக குறிப்பிட்ட தபாலகங்களுக்குச் சென்று பெற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஏற்கனவே இருந்த வங்கிகளுக்கு பணம் அனுப்பப்பட மாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது புதிய நடைமுறையின் கீழ் வழங்கப்படும் முதியவர்களுக்கான ஆயிரம் ரூபா பணத்தை ஐந்து நாள்களுக்குள் தபாலகங்களில் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த காலத்தில் வழங்கப்படாது இடையில் கைவிடப்பட்ட மூன்று மாதங்களுக்கான கொடுப்பனவுக்கு என்ன நடந்தது என்று எதுவும் அறியாத முதியவர்கள் திக்குமுக்காடுகின்றனர். (ம-86)

# தாய்ப்பாலுக்கு ஈடான போசாக்கு வழங்கும் பிரசாரத்துக்குத் தடை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 15

பிறந்த குழந்தைகளுக்கு வழங்க வேண்டிய தாய்ப்பாலுக்கு சமமானதாக பால்மா வகைகள் மற்றும் பதிலீடான போசாக்கு உணவுகள் தொடர்பான பிரசாரங்களை வைத்தியசாலைகளில் மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சகல வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

இவ்வாறான பொருள்களை விற்பனைக்காக ஊக்குவிக்க வரும் விற்பனைப் பிரதிநிதிகளை வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் போன்றோரிடையே பிரசாரம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவற்றைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்குமாறும் வைத்தியசாலை பொறுப்பதிகாரிகளுக்கு கண்டிப்பாக உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் வைத்தியசாலையில் இயங்கும் பால் ஊட்டும் நிலையத்தின் சேவையை, சேவையில் உள்ள பெண் உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்க ஊக்குவிப்பை வழங்குமாறும் அறிவித்துள்ளார்.

பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதன் அவசியத்தைக் கொண்டு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ம-9)

## 5 கிலோ மீற்றர் அகலம் கொண்ட கிரகம் பூமியை அண்மித்தது

### ஆபத்து ஏதும் இல்லை

கொழும்பு, டிசெ. 15

*5 கிலோ மீற்றர் அகலம் கொண்ட பெரிய கிரகம் ஒன்று 12 ஆம் திகதி பூமிக்குச் சமீபமாக பயணித்துள்ளது. அதன் மூலம் பூமிக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.*

*நாஸா நிறுவனத்தின் விஞ்ஞானிகள் தெரிவித்ததற்கமைய 'டுடாடிஸ் 4179' என்ற அந்தக் கிரகம் பூமிக்கு 7 மில்லியன் கிலோ மீற்றர் தொலைவிலேயே பயணித்துள்ளது. இந்தக் கிரகம் பூமியில் மோதுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் நாஸா முன்கூட்டியே உறுதி வழங்கியிருந்தது.*

*கிரகத்துடன் பயணித்து வந்த அதன் உடைந்துபோன சிறு துண்டங்கள் வால்நட்சத்திரங்கள் போன்று பூமியை நோக்கிக் கீழ் இறங்கியுள்ளன. அவை பிரகாசமாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.*

*அந்த உடைந்த துண்டங்கள் பூமியின் வாயுமண்டலத்தினுள் சென்ற போது தீப்பற்றிக் கொண்டதன் காரணமாக பிரகாசமாகக் காணப்பட்டுள்ளன. 'டுடாடிஸ் 4179' கிரகம் பூமிக்குச் சமீபமாகப் பயணித்துச் சென்ற விதத்தை நாஸா நிறுவனம் புகைப்படம் எடுத்துள்ளது. அதை நேரடியாக சர்வதேச இணையத்தளம் ஊடாகப் பார்ப்பதற்கான வசதிகளையும் நாஸா நிறுவனம் ஏற்படுத்தியிருந்தது. நாஸா நிறுவனம் தெரிவித்ததற்குகமைய, கெனரிதீவு வாசிகளுக்கே இந்தக் கிரகத்தைத் தெளிவாகக் காணும் அதிர்ஷ்டம் கிட்டியிருந்தது.* (ம-22)

# முகாமை உதவியாளர் பரீட்சை தயார் படுத்தல் கருத்தரங்கு

மாங்குளம், டிசெ. 15

அரச உத்தியோகத்தர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் மாகாண கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமை உதவியாளர் பதவியில் நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் வகையில் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இன்றும், நாளையும் 3 இடங்களில் நடைபெறவுள்ளன. இதனை வடக்கு - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டத் தலைவர் சி.பிரதீபன் அறிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்குகள் இன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மாங்குளம் சிறுவர் நன்னடத்தை கேட்போர் கூடத்திலும், இல. 40, பழம் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் நடைபெறவுள்ளன.

நாளை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வடக்கு - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கு இலவசமாக நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிக் குளத்துக்கு அருகில் தினமும் சேரும் கழிவுப் பொருள்கள்

கிளிநொச்சி, டிசெ. 15

கிளிநொச்சிக் குளத்தின் வான்பகுதி, குளக்கட்டுக்குக் கீழ்ப்பகுதிகளில் தொடர்ந்தும் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரப்பகுதியில் சேரும் கழிவுகள் கரைச்சி பிரதேச சபையால் சேகரிக்கப்பட்டு, உமையாள்புரப் பகுதியில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்டப்படுகின்றன.

இந்த நிலையில் சிலர் கழிவுப் பொருள்களைத் தொடர்ச்சியாகக் கிளிநொச்சிக்குளத்துக்கு அருகில் கொட்டிவருகின்றனர்.



இதற்கு இதுவரை எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன்காரணமாக அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், மழைகாலம் என்பதால் தொற்றுநோய்கள் பரவுவதற்கும் காரணமாக அமைகின்றது.

அத்துடன் மழைகாலங்களில் நீரில் அடித்துச் செல்லப்படும் கழிவுப் பொருள்கள் வயல்நிலங்களில் தேங்குகின்றன. இதனால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக அந்தப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாகச் சிலர் கழிவுப் பொருள்களை இந்தப்பகுதியில் கொட்டிவருவதால் கரைச்சிப் பிரதேச சபையினர் இது குறித்துக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (ஜ-18)

## கிளிநொச்சி திறந்த பல்கலையில் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி, டிசெ.15

கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக வளாகத்தில் 2013/2014 ஆண்டுக்கான பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சிக் கிளையில் கடந்த ஆண்டுமுதல் பல்வேறுபட்ட கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2013/2014 ஆம் கல்வி ஆண்டுக்கான பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதில் குறைந்த எண்ணிக்கையினரே உள்வாங்கப்படவிருப்பதாகவும் மேற்படி கற்கைநெறிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்குமாறும் மேலதிக விவரங்களை 155 ஆம் கட்டை, கிளிநொச்சிக் கிளையில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-6)

## மேட்டுப் பயிர்களுக்கு குளத்தில் இருந்து நீர்

### கண்ணகைபுரம் மக்கள் வேண்டுகோள்

அக்கராயன்,டிசெ.15

கண்ணகைபுரம் கிராமத்தில் மேற்கொள்ளப்படும் மேட்டு விவசாயப் பயிர்ச்செய்கைக்கு அக்கராயன் குளத்திலிருந்து நீர் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்று கண்ணகைபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் கிளிநொச்சி அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கண்ணகைபுரம் கிராமத்தில் வாழை, வெங்காயம், மிளகாய் என்பன அதிகளவில் மேட்டுப் பயிர்களாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. ஆனால் நீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

கண்ணகைபுரம் கிராமத்தில் வாழை, வெங்காயம், மிளகாய் என்பன அதிகளவில் மேட்டுப் பயிர்களாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. ஆனால் தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

தற்போது அக்கராயன் குளம் புனரமைக்கப்பட்ட நிலையில் தமது மேட்டுப் பயிர்களுக்குத் தேவையான நீரை வழங்குமாறு கண்ணகைபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## பறங்கியாற்றுக்கு புதிதாகப் பாலம்

### மக்களின் நெருக்கடி தீர்ந்தது

அக்கராயன், டிசெ. 15

மாந்தை கிழக்கில் உள்ள பறங்கியாற்றுப் பால வேலைகள் நிறைவடைந்துள்ளதால் மாரி காலங்களில் எதிர்நோக்கப்பட்ட பயண நெருக்கடி தீர்ந்துள்ளதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

பறங்கியாறு பெருக்கெடுத்துப்பாயும் காலத்தில் சிறாட்டிக்குளத்துக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்படும்.

ஆற்றுக்குக் குறுக்கே நீண்ட காலமாக நிரந்தரப் பாலம் இருக்கவில்லை. இதனால் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 48 குடும்பங்கள் மழைகாலங்களில் வெளித்தொடர்புகள் அற்று இருந்தன.

தற்போது பாலம் நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் முடிவடைந்துள்ளன. இதன்மூலம் நீண்டநாள் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-18)

## துணுக்காய் பிரதேசத்தில் நடமாடும் சேவைகள்

துணுக்காய், டிசெ. 15

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் பொதுமக்களின் ஆவணங்கள் தொடர்பான நடமாடும் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலகமும், யு.என்.டி.பி. நிறுவனமும் இணைந்து இந்தச் சேவையை வழங்கவுள்ளன.

இதன்படி நாளை மறுதினம் திங்கட்கிழமை அனிஞ்சியன்குளம் கிராமத்திலும், 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோட்டைகட்டிய குளத்திலும், 19 ஆம் திகதி புதன்கிழமை ஐயன்கன் குளத்திலும் இந்தச் சேவைகள் இடம்பெறவுள்ளன.

இதில் தேசிய அடையாள அட்டை பெறுதல், பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், காணிப்பதிவு உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவுள்ளதாகத் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார். (ஜ-18)

## பெண்களை வலுவூட்டும் கடன் திட்டம் பூநகரியில்

பூநகரி, டிசெ. 15

பூநகரிப் பிரதேசத்தில் கரிதாஸ் 'கியூடெக்' நிறுவனத்தின் பெண்களை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவிக் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றுள்ளது.

இதில் பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில் ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கே இந்த உதவித்திட்டம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பான ஆரம்ப நிகழ்வு அருட்திரு எ.ஜேயாளீஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது குறித்த கிராமங்களைச் சேர்ந்த 180 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களில் முதற்கட்டமாக 15 பேருக்கு வாழ்வாதாரக் கடனுதவிகள் வழங்கப்பட்டன.

தொடர்ச்சியாக சுழற்சி முறையில் ஏனைய பயனாளிகளுக்கும் கடனுதவிகள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. (ஜ-18)

## பூநகரி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

கிளிநொச்சி, டிசெ.15

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக பூநகரிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு பூநகரிப் பிரதேச செயலகத்தில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பிரதேச செயலகத்தில் நிலவும் இடப்பற்றாக்குறை காரணமாக பூநகரி பரமன்கிராய் அ.த.க. பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்தார். (ஜ-6)

## பூநகரியில் சிறந்த கிராம அலுவலர்கள்

பூநகரி, டிசெ. 15

பூநகரிப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள கிராம சேவையாளர்களிடையே நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் சிறந்த கிராம அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி ஜெயபுரம் கிராம அலுவலர் பொ.பாலச்சந்திரன் முதலாம் இடத்தையும், மட்டுவில்நாடு மேற்கு கிராம அலுவலர் மா.இராஜகோபாலன் இரண்டாம் இடத்தையும், முழங்காவில் கிராம அலுவலர் திருமதி ந.வாசுகி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

பூநகரிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 19 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கி இந்தப் போட்டி நடைபெற்றது. (ஜ-18)

## நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு 2 வருடங்களின் பின் புதிய மருத்துவர்

அக்கராயன், டிசெ.15

நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு இரண்டு வருடங்களின் பின்னர் நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை புதிதாக நியமிக்கப்பட்ட வைத்தியர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சேவையில் இருந்த மருத்துவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் காலமானதை அடுத்து வைத்தியசாலைக்கு வைத்தியர் இல்லாத நிலை ஏற்பட்டது.

இதனால் நட்டாங்கண்டல் மக்கள் 8 கிலோ மீற்றர் தூரம் சென்று மல்லாவிப் பிரதேச மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற்று வந்தனர்.

நட்டாங்கண்டல்-மல்லாவி வீதியும் மிக மோசமான நிலையிலேயே உள்ளது. இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட நோயாளர்கள் தமது மருத்துவமனைக்குப் புதிய வைத்தியர் வந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலரும், இராணுவத்தின் 612 ஆவது படைப்பிரிவு படை அதிகாரியும் மருத்துவர் நியமனம் தொடர்பில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-18)




[illegible] இல-1 பாடசாலை சமூகத்தினரால் சிறுவர் உரிமைகளைப் [illegible] நோக்குடன் தெருவெளி நாடகம் அந்தப் பிரதேசங்களில் ஆற்றுகைப்படுத்தப்பட்டது. அதில் ஒரு காட்சி. (ஜ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிக்கு 25 ஆயிரம் மரமுந்திரிகைக் கன்றுகள்

## வாழ்வெழுச்சித் திட்டத்தில் விநியோகிக்க ஏற்பாடு

*அக்கராயன், டிசெ.15*

*கிளிநொச்சி மாவட்டத்தில் 25 ஆயிரம் மரமுந்திரிகைக் கன்றுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் குடும்பமொன்றுக்கு ஐந்து கன்றுகள் என்ற அடிப்படையில் இவை வழங்கப்படவுள்ளன. ஆர்வமுடையவர்களுக்கு மேலதிக கன்றுகள் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு 5 ஆயிரம் கன்றுகளும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு 6 ஆயிரம் கன்றுகளும், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு 9 ஆயிரம் கன்றுகளும், கண்டாவளைக்கு 5 ஆயிரம் கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.

தென்னை மரங்களுக்கு இடையில் ஊடு பயிராக மரமுந்திரிகையைப் பயிரிட முடியும்.

நடப்படும் மரமுந்திரிகைக் கன்று மூன்று வருட காலத்தில் பயன்தர ஆரம்பிக்கும். இன்று இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக மரமுந்திரிகை விதைகள் உள்ளதால் இதில் ஈடுபடுவோர் அதிக இலாபத்தைப் பெற்று வருகின்றனர்.

தற்போது மரமுந்திரிகைச் செய்கையில் மட்டக்களப்பு மாவட்டம் முன்னிலை வகிக்கின்றது. மேலும் விதைகளைப் பிரிப்பதற்கான இயந்திரங்களும் உள்ளதால் மரமுந்திரிகை பயிரிடுவோர் இலகுவான முறையில் விதைகளைப் பிரித்தெடுக்க முடியும்.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் இந்த மரக் கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



மழை காரணமாக பல்வேறு தொற்று நோய்களால் பாதிக்கப்பட்ட மக்கள் அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெறக் காத்திருக்கின்றனர். (க-18)

# ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்கு 3 ஆயிரத்து 895 மாணவர்கள்

## முல்லை,துணுக்காய் கல்வி வலயங்களில்

அக்கராயன்,டிசெ.15

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயங்களில் 3 ஆயிரத்து 895 மாணவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக இந்தப் பரீட்சைகளுக்குப் பொறுப்பான துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இதற்கென 13 இணைப்பு நிலையங்களும், 32 பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ள கோட்டைகட்டியகுளம் அ.த.க பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடியைக் கருத்தில் கொண்டு அங்கும் ஒரு பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

துணுக்காய் கல்வி வலயத்திலே 8 ஆயிரத்து 119 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இங்குள்ள பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் சமையலறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு 19 சமையலறைகள் அமைக்கப்பட்டன. இந்த ஆண்டு 41 சமையலறைகள் அமைக்கப்பட்டன.

ஆசிரியர் விடுதிகள் அமைக்கப்படாமை முக்கிய பிரச்சினையாக உள்ளது. மேலும் நட்டாங் கண்டல், வண்ணி விளாங்குளம், தேறாங்கண்டல் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இங்குள்ள பாடசாலைகள் கிராமங்களிலிருந்து அதிக தூரத்தில் உள்ளதால் மாணவர்கள் போக்குவரத்து சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே இவர்களுக்கு சைக்கிள் வழங்கப்பட வேண்டும்.

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் நிலவும் பல்வேறு வசதியீனங்கள் காரணமாக மாணவர்கள் இடைவிலகும் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## முழங்காவில் ஆரம்ப வித்தியாலயத்துக்கு அதிகாரி பாராட்டு

முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளதாக பூநகரி கோட்ட கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பூநகரியில் உள்ள இரு பாடசாலைகளில் தான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ஒன்று இந்தப் பாடசாலை. மற்றையது கிராஞ்சி அ.த.க பாடசாலை ஆகும். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை என்றபோதிலும் இந்தப் பாடசாலையின் ஆரம்பமே சிறப்பாக அமைந்துள்ளது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் இந்த வெற்றியின் பின்னால் உள்ளனர்.

எதிர்காலத்தில் இந்தப் பாடசாலை மேன்மேலும் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# கவனம் செலுத்தப்படாத நிலையில் முசலிப் பிரதேசத்தின் முதியவர்கள்

## விசனம் தெரிவிக்கின்றனர் அவர்கள்

மன்னார்,டிசெ.15

மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர்களின் நலன்களில் கவனம் செலுத்தப்படாத நிலை காணப்படுவதாக அங்கு வசிக்கும் முதியவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டம் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளைக்கொண்ட மாவட்டம் ஆகும். அதில் கடந்த கால போர் காரணமாக அதிகமான பாதிப்புகளை எதிர்கொண்ட பிரதேசமாக முசலிப் பிரதேசம் உள்ளது. போரின் பின்னர் முசலிப் பிரதேச மக்கள் மீள்குடியமர்ந்து 5 வருடங்கள் முடிவடைந்த நிலையில் முதியோர்களின் நலன்களில் இன்னமும் கவனம் செலுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையில் உள்ள பிரதான திட்டமாக முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் அமைந்துள்ளது. முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் கிராமிய முதியோர் நிறுவனங்களை பதிவு செய்தல் வேண்டும்.

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் முதியோர் செயலகம் உருவாக்கப்பட்டு நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் ஊடாக முதியோர்களுக்குத் தேவையான தேசியஅடையாள அட்டை, மாதாந்தப் பணம், ஊனமுற்றோர்களுக்கு சக்கர வண்டி, ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் முதியோர் மண்டபம், முதியோர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், இலவச பஸ் வசதிகள் உட்பட பல்வேறு வசதிகள் உள்ளன.

முசலிப் பிரதேச செயலர் பிரிவில் 24 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன. இதில் எந்தக் கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இதுவரைக்கும் முதியோர் தொடர்பாக எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை என முசலிப் பிரதேச முதியவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-12)

## இலங்கைக்கு அவசர கடிதம்

# பொதுநலவாய அமைப்பு அதிருப்தி

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான தெரிவுக்குழு விசாரணை அறிக்கை உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாக சர்ச்சையைக் கிளப்பியுள்ள நீதியரசர் ஷிராணிக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள குற்றப்பிரேரணை நடவடிக்கை தொடர்பாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலர் கமலேஸ் சர்மா, இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் கமலேஸ் சர்மா தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

இந்த விடயம் குறித்து செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்டுள்ள கமலேஸ் சர்மா தெரிவித்ததாவது-

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அளித்த விளக்கம் திருப்தியாக உள்ளது.

அந்தத் தீர்மானம் குறித்து நாம் தெரிவித்த கவலை குறித்து பரிசீலிக்கத் தயாராக இருக்கிறார் என்று அவர் ஒப்புக்கொண்டார்.

நிர்வாகம், நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறை என்பன தனித்தனியாக நின்று சுதந்திரமாகச் செயற்பட வேண்டும் என்பதே பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கை. இதை உறுப்பு நாடுகள் பின்பற்ற வேண்டும்.

குறிப்பாக, நீதித்துறைக்கான சுதந்திரம் என்பது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமையாக வரையறுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# பொலிஸாரின் நடமாடும் சேவை

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கான நடமாடும் சேவையொன்று இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இமையாணன் வடக்கு, கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவுள்ளதுடன், இலவச மூக்குக்கண்ணாடிகளையும் விநியோகிக்க உள்ளனர் என்று இமையாணன் வடக்கு கிராம உத்தியோகத்தர் சுதர்சன் தெரிவித்தார். (ங)

## கண்ணீர் அஞ்சலி

### கோபாலசிங்கம் ஜனுசா



எமது பாடசாலை உயர்தர மாணவியின் மரணச்செய்தி கேட்டு மிகவும் துயரடைகிறோம். அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பாடசாலைச்சமூகம்
யா/ மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம்.
யா/ மாதகல் நுணசை வித்தியாலயம்.

# புதிய நிர்வாகத் தெரிவு

தாவடி இந்துமயான அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

தாவடி காந்தி கலைவளர்ச்சி மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அனைவரும் கலந்துகொண்டு புதிய நிர்வாகத் தெரிவை மேற்கொள்ள ஒத்துழைக்குமாறு தாவடி இந்துமயான அபிவிருத்தி சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (ங)

# விதை நெல் விநியோகம்

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த விவசாயிகளுக்கு உலக உணவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றால் சுமார் 400 புசல் விதை நெல் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளாலியில் 50 பயனாளிகளுக்கு தலா 3 புசல் விதை நெல் வீதமும், தட்டுவன் கொட்டியில் 85 பயனாளிகளுக்கு தலா மூன்று புசல் நெல் வீதமும் மொத்தமாக சுமார் 400 புசல் விதை நெல் வழங்கப்பட்டுள்ளது. (க-6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சங்கரம்பர் கதிரவேலு



(ஊடகத்துறை மூத்த புகைப்பட பிடிப்பாளர்)

இன்று (15.12.2012) சனிக்கிழமை கொழும்பு ஜோன்டீ சில்வா அரங்கில் ஊடகத்துறைக்கான "கலாபூஷணம்" விருது பெறும் சங்கரம்பர் கதிரவேலு அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

(உ/2196)(9.14)

சிவபூதராயர் வீதி,
சுன்னாகம்.

"சிவம் போட்டோ"
உரிமையாளரும், ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.

சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் (French) பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.*

61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(முக்கா வீதியும் கச்சேரி–நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
*No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd), Jaffna*
Phone - 0212228250

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2012
இவ் ஆண்டின் இறுதி சந்தர்ப்பம்

| Courses | Fee | Duration |
|---|---|---|
| Dip.in Microsoft Office -2007 | 1000 | 3Months |
| Dip.In Desktop Publishing | 1000 | 4Months |
| Dip.in Webpage Designing | 1000 | 4Months |
| Dip.in Graphic Designing | 1000 | 4Months |
| Dip.in Hardware | 1000 | 3Months |
| Dip.in Accounting Package | 3000 | 4Months |
| Dip.in Multimedia | 3000 | 4Months |
| Dip.in Video Editing | 3000 | 3Months |

வகுப்புக்கள் ஆரம்பம் 10AM / 03PM
Batch I : 15/12/2012 Batch II : 16/12/2012
Batch III : 19/12/2012 Batch IV : 21/12/2012


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### உயர் திரு. செல்வராசா ரமேஸ்



M.A.(ECON)HONS, M.A.(DEVELOP) HONS
B.G.DIP.IN PUBLIC ADM. (JAF)
B.G. DIP.EDU., (O.U.S.L)

செயலாளர் வேலணை பிரதேசசபை அவர்களுக்கு சிறந்த சமூக சிந்தனையாளன் என்னும் அதி உயர்பட்டத்தை நகராட்சி மன்றம், சாவகச்சேரி வழங்கி கௌரவித்தமையையிட்டு பாராட்டுவதுடன் சமூக சேவைகளை தனது எழுத்தாற்றல் மூலம் வெளிக் கொணர்ந்து சமூகத்துக்கு சேவையாற்றும் உயர் திரு. செல்வராசா ரமேஸ் அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்*
*நயினாதீவு சனசமூக நிலையம்*
*நயினாதீவு.*

(26826)(ச.14)


43ஆவது அகவையில்...

**மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்**

எமது பாதுகாப்புச் சேவையானது வடக்கு கிழக்கு மாகாணங்களில் நாற்பத்து மூன்று ஆண்டுகளாக தொடர்பணி ஆற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய வங்கிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது ஸ்தாபன அனைத்து ஊழியர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது பணி தொடர உங்கள் அனைவரதும் அன்பையும் ஆதரவையும் நாடி நிற்கின்றோம்.

651/3, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பணிப்பாளரும்
பணியாளர்களும்


## முன்பள்ளி ஆசிரியர் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.15

வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்த 449 பேருக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

சிறுவர்அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் அனுமதியுடன், வட மாகாணக் கல்வி அமைச்சுடன் இணைந்து ஆறுதல்-இலங்கை நிறுவனத்தினால் இந்தப் பயிற்சி சுமார் ஒரு வருட காலம் நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 420 ஆசிரியர்களும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 29 ஆசிரியர்களும் பங்கு பற்றினார்கள்.

449 முன்பள்ளி ஆசிரியர்கள் டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்துள்ளனர். இவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (த-5)

## சட்டத்தரணிக்கு மறியல்

இளம் பெண் சட்டத்தரணியை தகாத வார்த்தைகளால் திட்டி துன்புறுத்தியதாகக் கூறப்படும் சட்டத்தரணி காமினி யாப்பாரத்ன (வயது - 56)வை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், முல்லேரியா தேசிய மனநல வைத்தியசாலை வைத்தியரிடம் அனுமதித்து அறிக்கையொன்றைப் பெற்று அதனையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிவான், சட்டத்தரணி காமினிக்கு உத்தரவிட்டுள்ளார்.

## 'பட்ஜெட்' தோல்வி

ஆளும் ஐ.ம.சு.முன்னணியின் அதிகாரத்திலுள்ள பேலியகொடை நகரசபையின் 2013ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மூன்று மேலதிக வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது.

9 பேர் கொண்ட குறித்த நகரசபையில் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 3 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் பெறப்பட்டுள்ளன.

ஐ.தே.க. உறுப்பினர்கள் மூவருடன், ஐ.ம.சு.மு உறுப்பினர்கள் மூவரும் எதிராக வாக்களித்துள்ளனர்.

## சமுர்த்தி கட்டடம் அங்குரார்ப்பணம்

கல்முனை, டிசெ.15

கல்முனைக்குடி சமுர்த்தி வங்கிச் சங்கம் மற்றும் வலயக் கட்டடம் அமைக் கும் ஆரம்ப நிகழ்வு கல் முனை கிரீன்பீல்ட் வீட்டுத் திட்ட வளாகத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடைபெற்றது.

சமுர்த்தி அதிகாரசபை யின் ஊடாக ஒதுக்கப்பட வுள்ள 25 இலட்சம் ரூபா நிதியைக் கொண்டு கட்டட நிர்மாணப்பணிகள் முன்னெ டுக்கப்படவுள்ளன.

சமுர்த்தி வங்கி வலய முகாமையாளர் ஏ.சி.அன்வர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனைத்தொகுதி அபிவி ருத்திக்குழுத் தலைவருமான சட்டத்தரணி எச்.எம். எம்.ஹரீஸும் கௌரவ விருந் தினராக கல்முனைப் பிரதேச செயலாளர் எம்.எம்.நௌபலும் கலந்து கொண்டனர். (வ)


**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## வேலைவாய்ப்பு

- புத்தகக்கடையில் பணியாற்றக் கூடியவர்
- கணினி தட்டச்சு செய்வதில் திறமையுள்ளவர்
- கணக்கு விவரங்கள் பதியக் கூடியவர்
- நற்சான்று, சுயவிவரத்துடன் சமுகமளிக்கவும்

இல. 70, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
0718474325



# Christmas Dinner Party

Tuesday, December 25, 2012, 7 p.m, hotel Green Grass

Buffet dinner with santa claus entertaiment
- & gifts
- kids games

Childrens below 12 free of charge

For more info. : 0212224385,0777807568


# மரண அறிவித்தல்கள்

## கோபாலசிங்கம் யனுஜா

கனகபுரம், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், யாதம்பை, மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட கோபால சிங்கம் யனுஜா நேற்று (14.12.2012) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கோபாலசிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் புதல்வியும், தேனுசா, மதுராஜ், அகில்ராஜ், லேனுசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் திலகவதி, காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் சரஸ்வதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2012) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/2192)(3.6)

## வேலுப்பிள்ளை தியாகராஜா



கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும், வரணி வடக்கு வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தியாகராஜா நேற்று (14.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, புவனேஸ்வரி, சிவபாக்கியம் மற்றும் மங்கையற்கரசி, குணசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவபாக்கியத்தின் (செல்வம்) அன்புக் கணவரும், தயாநிதி (ஆசிரியை, கிளி/புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயம்), தயாகரன் (பிரான்ஸ்), சத்தியநிதி (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அரங்கநாதனின் (உள்ளகக் கணக்காய்வாளர், இ.போ.ச. கோண்டாவில்) அன்பு மாமனும், அட்சயா, ஆர்னிகன், நிருபன், மலரவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2012) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக முள்ளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கும்பிட்டான் கோயிலடி,
வரணி வடக்கு,
வரணி.

தகவல்:
குடும்பத்தினர்.

(26829)(3.14)

## திருமதி மார்க்கண்டு இராசம்மா



மட்டுவில் தெற்கு வளர்மதி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு இராசம்மா நேற்று (14.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற மார்க்கண்டின் அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் பாலச்சந்திரன் (சுவிஸ்), பத்மாவதி ஆகியோரின் அன்புத் தாயும், கேதீஸ்வரி (கனடா), யோகராஜா (கனடா), கனகாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, தர்மலிங்கம், சண்முகம், நல்லம்மா மற்றும் தங்கம்மா (சுவிஸ்), சிவசம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும், கெஸ்விகா, தரணிகா, சுமேக்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2012) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் தெற்கு சின்னத்தூ இந்து மயானத்தக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளர்மதி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
வி.சிவசம்பு
(சகோதரன்)

(26823)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள வளங்களைச் சுரண்டும் திணைக்களங்கள்

## பிரதேச பொது அமைப்புகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.15

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள வளங்களைச் சுரண்டுவதில் அரச திணைக்களங்களும், நிறுவனங்களும் குறியாக இருக்கின்றார்களே தவிர, பிரதேச அபிவிருத்திக்கென எதனையும் செய்வதில்லை என இந்தப் பிரதேச பொது அமைப்புகள் பலவும் குற்றம் சாட்டியுள்ளன.

யாழ். மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமான வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மிகவும் பெறுமதிமிக்க வளங்களாக காடு, மணல், நன்னீர், மீன்வளம் ஆகியன உள்ளன.

இவை அனைத்தும் எமது மாவட்டத்தைச் சேர்ந்த திணைக்களங்கள், நிறுவனங்களால் சூறையாடப் படுகின்றன. இதே போல் மீன்வளமும் தென்பகுதி, இந்திய மீனவர்களால் அபகரிக்கப்படுகின்றன.

1950 களுக்கு முன்னர் இப் பிரதேச மணல் வளத்தினை வைத்துக் கொண்டு கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

**மணல் பிட்டிகளிலிருந்து அடி நிலத்தோடு மணல்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இதனால் கடல் நீர் குடியிருப்புகளுக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.**

இது குறித்து அக்கால கட்டங்களில் வெளியான புவியியல் பாடப் புத்தகங்களிலும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

எனினும் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசோ, தனியார் நிறுவனங்களோ முன் வரவில்லை.

அதற்கு மாறாக் கடந்த 60 ஆண்டுகளில் இந்தப் பிரதேச மணல் வளம் முற்று முழுக்க சூறையாடப் பட்டுள்ளது.

எத்தனையோ மணல் பிட்டிகளிலிருந்து அடி நிலத்தோடு மணல் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இதனால் கடல் நீர் குடியிருப்புகளுக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காட்டு வளங்களும் விறகுகளுக்காக அழிக்கப்பட்டு வருகின்றன. மணற் காட்டில் உருவாக்கப்பட்ட சவுக்கு மரக்காடுகள் மெல்ல மெல்ல அழிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் இங்குள்ள நன்னீரும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பிரதேசங்களுக்கு குழாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்படவுள்ளது.

அதற்கான குழாய் கிணறுகளையும், தண்ணீர்த் தாங்கியையும் அமைக்க வென அப் பிரதேசத்தில் உள்ள நிலம் கையகப்படுத்தப்படவுள்ளது.

இப் பிரதேசத்தின் ஆழ் கடலான வங்காள விரிகுடாவில் மீன் பிடித் தொழிலில் தென் பகுதி மற்றும் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு அதிகம். இதில் தென் பகுதி மற்றும் மீனவர்களின் ஆக்கிரமிப்பே மிக அதிகமாகும்.

பிரதேச வளங்களை சுரண்டப்படுகின்றதே தவிர ஏனைய பிரதேசங்களுக்கு ஈடாக இந்தப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

குறிப்பாக இந்தப் பிரதேசத்துக்கான ஒரே ஒரு நெடுஞ்சாலையான பருத்தித்துறை - மருதங்கேணி- கட்டைக்காடு வீதி சரியான முறையில் திருத்தி அமைக்கப்படவில்லை.

எக்காலமும் பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றது. இதேபோல் வேறு எந்த விதமான அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று மேலும் கூறப்பட்டது. (ம-8)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையால் தெரிவு செய்யப்பட்ட சாவகச்சேரி நகரசபைப் பொது நூலகத்துக்கான விருது சபையின் பணிப்பாளரால் நூலகர் வே.வித்தியானந்தனிடம் கையளிக்கப்படுகிறது. (ம-9)

# கண்டுவில் குள வாய்க்கால் புனரமைப்புப் பணி ஆரம்பம்

தென்மராட்சி, டிசெ.15

சாவகச்சேரி நகர் கண்டுவில் குளத்தில் இருந்து வெள்ளநீர் வழிந்தோடும் வாய்க்காலைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலரின் முயற்சியால் வாய்க்கால் புனரமைப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட தடை நீங்கியதை அடுத்து பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உலக தரிசன நிறுவன அனுசரணையுடன் தூர்ந்து போயிருந்த கண்டுவில் குள வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் சாவகச்சேரி நகர சபையால் மேற்கொள்ளப் பட்ட போது அங்குள்ள ஆலய தர்மகர்த்தா வாய்க்கால் வெட்டுவதற்குத் தடைவிதித்து பணியாளர்களைத் திருப்பி அனுப்பியிருந்தார்.

இதனையடுத்து நகர சபை தலைவர் சி.தேவசகாயம் பிள்ளை பிரதேச செயலரின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டு வந்தார்.

கடந்த 11 ஆம் திகதி ஆலய தர்மகர்த்தா, நகர சபை தலைவர் ஆகியோருக்கான கலந்துரையாடலை பிரதேச செயலகத்தில் நடத்தியதில் ஆலய தர்மகர்த்தா தூர்ந்து போயுள்ள வாய்க்காலை வெட்டி வெள்ளம் வழிந்தோடச் செய்வதற்கு இணங்கினார்.

இதனை அடுத்து கடந்த புதன்கிழமை தொடக்கம் ஊர் மக்கள் மூலம் வாய்க்கால் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண்டுவில் குளத்தில் சேரும் மழை வெள்ளம் இந்த வாய்க்கால் வழியாக கற்குளி, பெருங்குளம், இல்லாரைக் குளம் ஆகியவை ஊடாக சரசாலை மாத்தளான் தரவைக்கு வழிந்தோடுவதும் இந்த வாய்க்கால் தூர்ந்து போனதால் குளத்தில் சேரும் வெள்ளம் அயல் பகுதி குடியிருப்பு காணிகளில் தேங்கி நிற்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-9)

### பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் 12.12.12 இல் 6 குழந்தைகள்

வடமராட்சி, டிசெ.15

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அதிர்ஷ்ட தினமாகக் கூறப்படும் 12.12.2012 ஆம் திகதி புதன்கிழமை 6 குழந்தைகள் பிறந்துள்ளன.

6 குழந்தைகளில் 4 பெண் குழந்தைகள் இரண்டு ஆண் குழந்தைகள். முதலாவது குழந்தை காலை 7.05 மணிக்குப் பிறந்த பெண் குழந்தையாகும். 6 ஆவது குழந்தை இரவு 9.14 மணிக்குப் பிறந்த பெண் குழந்தையாகும்.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த தாய்மார்கள் இந்தக் குழந்தைகளைப் பெற்று வைத்தியசாலையில் இருந்து சேமமாக வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். (ம-8)



கொடிகாமம் கச்சாய் பகுதியில் பெரும்பாலான வீதிகள் மணல் வீதிகளாகக் காணப்படுகின்றன. இதனால் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ம-9)

### திருத்த வேலைக்கு வீதி மூடல்

யாழ்ப்பாணம், டிசெ.15

வீதி அகலிப்பு பணிகள் காரணமாக கோண்டாவில் இருபாலை வீதியிலுள்ள பாற்பண்ணை சந்திக்கும் இராச வீதிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி இன்று சனிக்கிழமை முதல் நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை மூடப் பட்டிருக்கும் என்று வடமாகாண சபை மாகாண வீதிச் செயற்திட்ட சமூக சூழல் உத்தியோகத்தர் ஜெ.ஜெயராணி தெரிவித்துள்ளார்.

எனவே, இக்காலப் பகுதிக்குள் மாற்று வழிகளாக இராச வீதி, பாற்பண்ணை வீதி, பலாலி வீதிகளைப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ம-14)

# யாழ். நகரில் நேற்று இலவச மருத்துவ முகாம்



யாழ்ப்பாணம், டிசெ.15

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு யாழ்.நகரில் நேற்று வெள்ளிக்கிழமை இலவச மருத்துவமுகாம் ஒன்று இடம் பெற்றது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வளாகத்தில் இடம்பெற்ற இந்த மருத்துவ முகாமில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்த மருத்துவ முகாமில் சகல நோய்களுக்குமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றுக்கான சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. (த-17)

# மிக வேகமாகப் பயணிக்கும் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை

## போக்குவரத்து பொலிஸ் பிரிவு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

மிக வேகமாகச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரால் மேற்கொள்ளப்படவுள்ளன.

பருத்தித்துறை நகரில் இருந்து யாழ்ப்பாணம் வருகைதரும் 750 வழி தனியார் பஸ்கள் மிக வேகமான முறையில் சேவையில் ஈடுபடுகின்றன என்று யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**பஸ்களில் பயணம் செய்யும் கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் பல் வேறு அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.**

இதற்கமைவாக வீதி போக்குவரத்துப் பொலிஸாரால் அதிவேக சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் அவதானிக்கப்படவுள்ளன.

தனியார் பஸ்கள் சேவை ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து பயணிகளை ஏற்றுவதற்காக மிக மெதுவாக சேவையில் ஈடுபட்டு அதன் பின்னர் குறிக்கப்பட்ட நேரத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதற்காக மிக வேகமாக பயணம் செய்கின்றன. இதனால் பஸ்களில் பயணம் செய்யும் கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

தனியார் பஸ் சாரதிகள் வேகக் கட்டுப்பாட்டைச் சரியாகப் பின்பற்றுவதுடன் சேவைக்கென ஒதுக்கப்பட்ட நேரத்துக்கமைவாக சேவையில் ஈடுபட வேண்டும். மிக மெதுவான, அல்லது மிகவேகமான சேவை பயணிகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். - எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டில்லியில் நடைபெற்ற தொலைத்தொடர்பு துறையின் விழாவில் பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர் கபில் சிபல் ஆகியோர் பங்கேற்றனர்.

## இந்தியாவிலும் பிளாஸ்ரிக் ரூபா தாள்கள்

சோதனை முறையில் விரைவில் பிளாஸ்ரிக் ரூபா தாள்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளித்தபோது; உலகம் முழுவதும் 20 நாடுகளில் பிளாஸ்ரிக் ரூபா தாள்கள் புழக்கத்தில் உள்ளன. எனவே நாட்டிலும் சோதனை முயற்சியாக பிளாஸ்ரிக் ரூபா நோட்டுகளை அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. முதலில் ரூ.10 பிளாஸ்டிக் நோட்டாக வெளியிடப்படும். 100 கோடி எண்ணிக்கையில் 10 ரூபா பிளாஸ்ரிக் நோட்டுகள் அறிமுகப்படுத்தப்படும் என்று பதிலளித்தார். (வ)

## இலங்கை சிறையில் வாடும் மீனவர் குடும்பங்களுக்கு 'ஜெ' நிவாரண நிதி



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப் பட்டு, சிறையில் உள்ள இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 5 மீனவர்களின் குடும்பங் களுக்கு நிவாரண உதவித் தொகையாக தலா 2 லட்சம் ரூபா காசோலையை நேற்று முன்தினம் தமிழக முதல்வர் ஜெயலலிதா வழங்கினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் கடந்த வருடம் நவம்பர் 28 ஆம் திகதி விசைப்படகில் இலங்கை கடற்பகுதியில், நெடுந்தீவுக்கு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, போதைப் பொருள் கடத்திய தாகக் கூறி படகுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அங்குசிறையில் இருக்கின்றர். அவர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசு உதவி வருகிறது- என்றுள்ளது. (வ)

## ஈழ அகதிகள் மீதான கட்டுப்பாடு தளர்வு

### தமிழக அரசின் உத்தரவை அடுத்து

சென்னை, டிசெ.15

அகதிகள் முகாம்களில் வசிக்கும், இலங்கைத் தமிழர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைத் தமிழக அரசு தளர்த்தியுள்ளது.

**இலங்கையில் இருந்து தமிழகம் வந்த, 2 லட்சத்து 56 ஆயிரம் அகதிகள், தமிழகத்திலுள்ள 113 முகாம்களில் வசிக்கின்றனர்.**

இலங்கையில் இருந்து தமிழகம் வந்த, 2 லட்சத்து 56 ஆயிரம் அகதிகள், தமிழகத்திலுள்ள 113 முகாம்களில் வசிக்கின்றனர். மாதந் தோறும் ஒரு நபருக்கு 400 ரூபா நிவாரணம் அரசு வழங்குகிறது. தமிழக அரசின் இலவசத் திட்டங்கள் அவர்களுக்கும் உண்டு. இருப்பினும், முகாம்களில் வசிப்பவர் களின் நடவடிக்கைகளை, 'கியூ' பிரிவு பொலிஸார் கண் காணித்து வந்தனர்.

அங்கிருந்து ஆஸ்தி ரேலியாவுக்கு 'முகவர்' மூலம் தப்பிச்செல்கின்றனரா என்பது போன்ற விவரங்களையும் சேகரித்தனர். முகாம்களில் 28 ஆண்டுக்கும் மேலாக அகதிகள் தங்கி விட்டனர். இதனால் அவர்கள் தப்பிச்செல்ல வாய்ப்பு குறைவு. எனவே, கண்காணிப்புக் கெடுபிடிகளைத் தளர்த்த அரசு உத்தரவிட்டுள்ளது.

'கியூ' பிரிவு அதிகாரி ஒருவர் இதுகுறித்துக் கூறுகையில்,

இலங்கை அகதிகள் அன்றாடம் வேலை செய்து உழைக்கின்றனர். இதனால், 'அவர்களைத் தொந்தரவு செய்யவேண்டாம்' என்று தமிழக அரசு அறிவுறுத்தி உள்ளது. தினமும் வருவாய்த்துறை பொலிஸார் முன்னிலையில் முகாம் ஆள்களைக் கணக்கிடுவது; மாலை குறிப்பிட்ட நேரத்தில் முகாம் திரும்ப வேண்டும்; எங்கு செல்கிறோம் என்பதை தெரிவிக்க வேண்டும் போன்ற கட்டுப்பாடுகள் இருந்தன. தற்போது அவை தளர்த்தப்பட்டுள்ளன. ஆனால், சட்ட விரோதமாக அகதிகள் செயற்படுவது தெரிந்தால் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (வ)

# ஈழத் தமிழரின் உரிமையை மீட்க மத்திய அரசு முன்வர வேண்டும்

## தி.மு.க செயற்குழுவில் தீர்மானம்

சென்னை, டிசெ.15

இலங்கைத் தமிழர்களின் உரிமையை மீட்டெடுக்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்று தி.மு.க செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்னை அறிவாலயத்தில், தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில், கட்சியின் செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.



இதன்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன,

★இலங்கைத்தமிழர்களின் அரசியல் வாழ்வுரிமைகள் குறித்த கோரிக்கைகளை ஐ.நா. சபையில் இலங்கை அரசை எச்சரிக்கும் வகையில் மத்திய அரசு முக்கிய பங்காற்றி அவர்களின் உரிமையை மீட்டெடுக்க முன்வர வேண்டும்.

சில்லறைவணிகத்தில், அந்நிய முதலீட்டை, தி.மு.க. எந்தக்காலத்திலும் ஏற்காது. வால்மார்ட் நிறுவனம் தமிழகத்தில் எந்த வகையிலும் நுழைந்து விடாமல் இருப்பதற்கான முயற்சியில் தமிழக அரசு ஈடுபட வேண்டும்.

★காவிரி விவகாரத்தில், தமிழக அரசு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி முடிவெடுக்க வேண்டும். சட்டம் - ஒழுங்கு சீர்கேட்டால், தமிழகமே இருண்ட பூமியாகக் காட்சியளிக்கிறது. ஆட்சியினர் மீதும் குறிப்பாக பொலிஸ் துறையின் மீதும் வந்துள்ள முறைப்பாடுகள் மீது, முறையான விசாரணைகளை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★டெங்கு, சிக்குன்- குனியா போன்ற காய்ச் சல்கள் ஏற்படாமல் தடுக்க வும், அந்தக் காய்ச்சல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை வழங்கவும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

★ மின்வெட்டைக் கண்டித்து எதிர்வரும் 18 ஆம் திகதி மாவட்ட தலைநகரங்கள், நகர, ஒன்றிய, பேரூ ராட்சி போன்ற பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் போன்றனவே தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. (வ)

## எதிரிநாடுகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள தமிழகத்தில் நவீனமயமாகும் விமானத்தளம்

சென்னை, டிசெ.15

இந்தியப் பெருங்கடல் பகுதியில் எதிரி நாடுகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் விதத்தில், தென் பிராந்திய விமானப்படை பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.



'சுகோய்-30', உள்ளிட்ட போர் விமானங்களை கையாளும் விதத்தில் தமிழகத்தில் சூலூர் விமானப்படைத் தளம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. 2016 ஆம் ஆண்டில், இது முழுமையான செயற்பாட்டுக்கு வரும் என்று தென்பிராந்திய விமானப் படைத் தளபதி ஏர் மார்ஷல் ஆர்.கே.ஜாலி தெரிவித்தார்.

கோவை அருகேயுள்ள சூலூர் விமானப்படைதளத்தில் இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இந்திய பெருங்கடல் பகுதி 4000 கி.மீ. நீளத்தில் மிகப்பெரிய கடற்கரையை கொண்டது. இந்தப்பகுதியில் 97 சதவீத வர்த்தகமும் கடல் போக்குவரத்தை நம்பி உள்ளது. நாட்டின் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இராணுவத் தளபாடங்கள், பாதுகாப்பு அமைப்புகள், அணுமின் நிலையங்கள், விமானத் தொழிற்சாலைகள், விண்வெளி ஆராய்ச்சி நிலையங்கள் இங்கு அமைந்துள்ளன. இதனால் அந்தப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிரி நாடுகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் விதத்தில் தென்பிராந்திய படைப்பிரிவுகள், அதிநவீன தளபாடங்களுடன் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. சூலூர் விமானப் படைத் தளத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. விமான ஓடுதளம் (ரன்வே) நவீனப் படுத்தப்பட்டு அடுத்த மாதம் முதல் தயார் நிலையில் வரும். தற்போது கூடுதலாக 'டாக்ஸி வே' அமைக் கப்பட்டுள்ளது.

'தேஜாஸ்' இலகுரக போர் விமானங்களைக் கையாளும் நாட்டின் முதல் விமானத் தளமாகவும் சூலூர் படைத் தளம் உருவாக்கப் பட்டு வருகிறது. இந்தப் பணிகள், அடுத்த இரண்டு ஆண்டுகளில் நிறைவடையும். 2016 ஆம் ஆண்டில் 'சுகாய்-30' போர் விமானங்களை கையாளும் விதத்தில் சூலூர் தளம் உருவாக்கப்படும். அதிநவீன போர்விமானங்கள், ரேடர்கள் மற்றும் பாதுகாப்புத் தளபாடக் கருவிகள் நிறுவப்படும். கடல் வழியான நடமாட்டத்தை கண்காணிக்கவும் எந்த அச்சுறுத்தல் வந்தாலும் எளிதில் இயங்கவும் நிலை நிறுத்தவும் தயாராக விமானப் படைத் தளங்கள் உள்ளன- என்றார்.

## மறைந்த சித்தார் இசை மேதை ரவிசங்கருக்கு கிராமி விருது

வொஷிங்டன், டிசெ.15

மறைந்த சித்தார் இசை மேதை பண்டிட் ரவிசங்கருக்கு வாழ்நாள் சாதனையாளருக்கான கிராமி விருது வழங்கப்படவுள்ளது.



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெற உள்ள 55 ஆவது கிராமி விருது வழங்கும் விழாவில், இறப்புக்கு பிந்தைய விருதாக மேற்படி விருது வழங்கப்படவுள்ளது.

மேற்கில், இந்த இசையை பரப்பியதிலும், ஏறக்குறைய 80 ஆண்டுகளாக இசைக்கு தனது வாழ்க்கையை அர்ப்பணித்ததிலும் பண்டிட் ரவிசங்கரின் பங்கு மகத்தானது என்று கிராமி விருது அகடமி புகழாரம் சூட்டியிருக்கிறது. பத்ம விருது பெற்றவரான ரவிசங்கர், 3 முறை கிராமி விருதுகளைப் வென்றிருக்கிறார்.

உடல் நலக்குறைவால் அமெரிக்காவில் கடந்த புதன் கிழமை காலமானார். இதய வால்வு மாற்றுச் சிகிச் சைக்கு பின்னர் அவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டை இழக்கிறார் அசாத்

## தடம் மாறுகிறது ரஷ்யா



"சிரிய ஜனாதிபதி அசாத் தனது கட்டுப்பாட்டை இழந்து விட்டார். அப்பாவி மக்கள் பலர் மடிவதை பொறுத்துக்கொள்ள முடியாது."

-ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்.



டமாஸ்கஸ், டிசெ.15

சிரியாவில் ஜனாதிபதி அல் அசாத் கட்டுப்பாட்டை இழந்து விட்டார். இதனால் கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியுள்ளது என்று சிரியாவின் நெருங்கிய நட்பு நாடான ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தெரிவிக்கையில்,

"சிரிய ஜனாதிபதி அசாத் தனது கட்டுப்பாட்டை இழந்து விட்டார். சிரியாவில் தற்போது கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியுள்ளது. அப்பாவி மக்கள் பலர் மடிவதை பொறுத்துக்கொள்ள முடியாது'' என்று தெரிவித்தார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தைப் பதவி விலகக் கோரி மக்கள் பல மாதங்களாகப் போராடி வருகின்றனர். 21 மாதங்களாக ராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கு இடையே நடக்கும் மோதல்களில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். ஐந்து லட்சத்துக்கும் அதிகமானவர்கள் அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வற்புறுத்தியும் அசாத் பதவி விலக மறுத்து வருகிறார். அசாத்துக்கு சீனா, ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகள் ஆதரவு அளிக்கின்றன.

இந்த நிலையிலேயே ரஷ்யா இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளது.

## எதிர்க்கட்சிகளின் குழுவை ஏற்றுக்கொள்ள முடியாது

### சிரிய அரசு

டமாஸ்கஸ், டிசெ.15

எதிர்க்கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள குழுவை மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சிரிய அரசு தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகள் உருவாக்கிய இந்த குழுவினரை சிரிய மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச நாடுகள் சிலவும் வலியுறுத்தியிருந்தன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சிரிய அரச பேச்சாளர் ஒருவர்,

"இந்தக் குழுவில் உண்மையில் மக்களின் பிரதிநிதிகள் இல்லை. மக்களுக்கு எதிரான போராளிகளே இருக்கின்றனர். இவர்களை மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள முடியாது'' என்று தெரிவித்துள்ளார்.

## சிரியாவில் குண்டுவெடிப்பு

டமாஸ்கஸ், டிச. 15

சிரியத் தலைநகர் டமாஸ்கஸின் தென்கிழக்கில் அமைந்துள்ள கடானா நகரில் உள்ள இராணுவ குடியிருப்பில் நேற்று முன்தினம் கார் குண்டு வெடித்தது.

இதில் 7 குழந்தைகள் உட்பட 16 பேர் உயிரிழந்தனர். இவர்கள் அனைவரும் அப்பாவி பொதுமக்கள். இந்த தாக்குதலை தீவிரவாதிகள் நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவக் குடியிருப்பு பகுதியில் நடந்த இந்தத் தாக்குதலை மனித உரிமைகள் அமைப்பினரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

# யாரும் எம்மை தடுக்க முடியாது

## சவால் விடுகிறது வடகொரியா

பியோங்கியாங், டிசெ.15

"எமது ஏவுகணை தயாரிப்பு முயற்சிகளையோ அல்லது வேறு முயற்சிகளையோ ஐக்கியநாடுகள் சபையும், சர்வதேசமும் கட்டுப்படுத்த முடியாது" என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

சிலநாள்களுக்கு முன்னர் தனது நீண்ட தூரம் சென்று இலக்கைத் தாக்கக் கூடிய ஏவுகணையை வடகொரியா வெற்றிகரமாகப் பரிசோதித்திருந்தது.

இதற்கு ஐக்கிய நாடுகள் சபையும், அமெரிக்கா, தென்கொரியா போன்ற நாடுகளும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இதற்குப் பதில் கூறும் வகையிலேயே வடகொரியா இவ்வாறு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வடகொரிய ஜனாதிபதி கிங் ஜொன் யங் தெரிவிக்கையில்,

"எமது செயற்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபையாலோ, சர்வதேசத்தாலோ நிறுத்த முடியாது. நாம் ஒரு முயற்சியில் மகத்தான வெற்றி பெற்றுள்ளோம். இதற்குப் பல் வேறு கண்டனங்கள், எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனினும் அவற்றை நாம் பொருட்படுத்தப் போவதில்லை. மேலும் பல ஏவுகணைகளை எதிர்காலத்தில் விண்ணில் செலுத்துவோம். எமது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகாரமில்லை'' என்று தெரிவித்துள்ளார்.



வடகொரிய ஜனாதிபதி கிங் ஜொன் யங்.

## முபாரக்கின் சொத்துகளை கைப்பற்றிது ஸ்பெயின்

மாட்ரிட், டிசெ 15

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் 37 மில்லியன் டொலர் சொத்துக்களைக் கைப்பற்றியுள்ளதாக ஸ்பெயின் தெரிவித்துள்ளது.

இவற்றில் நிதித்தொடர்பான பொருள்கள், கார்கள் மற்றும் கட்டடங்கள் அடங்கும்.

விதவிதமான 7 கார்கள், ஸ்பெயின், மோரலெஜா நகரில் உள்ள இரண்டு கட்டடங்கள், விடுமுறை பொழுது போக்கு விடுதிகள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டத்துக்கு புறம்பாக சொத்துகள் சேர்த்ததால் அவை கைப்பற்றப்பட்டன என்று ஸ்பெயின் பொலிஸார் தெரிவித்தனர்.

## வெனிசுலா ஜனாதிபதியின் அறுவைச் சிகிச்சை வெற்றி

காரக்கஸ், டிசெ.15

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த வெனிசுலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸுக்கு வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்று வெனிசுலாவின் துணை ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோ தெரிவித்துள்ளார்.

"சுமார் ஆறு மணி நேரம் நடைபெற்ற அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. சாவேஸ் தற்போது நலமாக உள்ளார். சாவேஸுக்காக பிரார்த்தனை செய்த அனைவருக்கும் மிகுந்த நன்றிகள்'' என்று மடுரோ தெரிவித்துள்ளார்.

அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட சாவேஸ் நலமுடன் திரும்ப வேண்டும் என்று நாடு முழுவதும் மக்கள் சமயத் தலங்களில் விசேட பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்தனர். 2011ம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து இதுவரை சாவேஸுக்கு புற்றுநோய்க்காக நான்கு முறை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



ஜனாதிபதிக்காகப் பிரார்த்திக்கும் வெனிசுலா இராணுவத்தினர்



உலக வன விலங்கு நிதியம், தாய்லாந்தில் கடத்தல்காரர்களிடம் இருந்து 16 புலிக்குட்டிகளைக் கைப்பற்றியுள்ளது. புலிக்குட்டிகளில் இருந்து சோதனைக்காக இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டன. தாய்லாந்தில் புலிக்குட்டிகளை கடத்துவதால் வருடாந்தம் 19 மில்லியன் அமெரிக்க டொலரை கடத்தல்காரர்கள் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜப்பானில் தேர்தல்; 94 வயது தாத்தாவும் களத்தில்

டோக்கியோ, டிசெ.15

ஜப்பானில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் 94 வயது முதியவர் மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார்.

ஜப்பானில் நாடாளுமன்ற கீழ்சபைக்கு தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது.

இந்தநிலையில் மனுத்தாக்கல் முடிவடைய மூன்று மணிநேரமே இருக்கையில் தலைநகர் டோக்கியோவில் உள்ள ஹானஷூ தேர்தல் அலுவலகத்திற்கு வந்த முதியவர் தனது பெயரை வேட்பாளர் பட்டியலில் சேர்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

ரியோகிச்சி- கவாசிமா என்ற அந்த முதியவரின்வயது 94 ஆகும். இதனைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தார் அங்கிருந்த பெண், "உண்மையை தான் சொல்கிறீர்களா?" என்று திருப்பித் திருப்பிக் கேட்டார். பின்னர் வேட்பு மனுவை ஏற்றுக் கொண்டனர்.

டோக்கியோ பெருநகர் விரிவாக்கத்தால் நெல் வயல் நிலங்கள் பாழாக்கப் படுவதாக கூறி ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி வேட்பாளர்களை எதிர்த்து சுயேச்சையாக தேர்தலில் நிற்கிறார் அந்த முதியவர்.

## மீண்டும் பேச்சுக்கள்

டெஹ்ரான், டிசெ.15

ஐ.நா. அணுசக்தி கண்காணிப்பு குழுவுடன் எதிர்வரும் ஜனவரி 16 ஆம் திகதி மீண்டும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளதாக ஈரானின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். டெஹ்ரானில் மீண்டும் பேசுவது குறித்து இருதரப்பும் சம்மதம் தெரிவித்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதை அணுசக்தி அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

## ஆண்களின் விருப்பத்துக்குரிய பெண் ஜெனிபர் லோரன்ஸுக்கு முதலிடம்

உலகளவில் ஆண்களின் விருப்பத்திற்கு உரிய பெண்ணாக ஹொலிவூட் நடிகை ஜெனிபர் லோரன்ஸ் உள்ளார்.

ஆண்கள் இணையத்தள இதழான ஆஸ்க்மென், ஆண்களின் மத்தியில் தனக்கென தனி இடத்தை வைத்திருக்கும் பெண்கள் குறித்து கருத்துக்கணிப்பை நடத்தியது.

இதில் 22 வயதான ஹொலிவூட் நடிகை ஜெனிபர் லோரன்ஸுக்கு 20.4 இலட்சம் பேர் வாக்களித்துள்ளனர்.

இதுகுறித்து குறித்த இணையத்தளத்தின் ஆசிரியர் தெரிவிக்கையில்,

"மற்றவர்களை விட ஜெனிபருக்கு நல்ல ஆதரவு கிடைத்துள்ளது. ஜெனிபர் தாடி தாடிப்ப [illegible] ருக்கு நிறைய ஆதரவாளர்களைத் திரட்டிக் கொடுத்து விட்டது'' என்றார். கருத்துக்கணிப்பில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருப்பவர் ஹொலிவூட் நடிகை மிலா குனிஸ். கடந்தாண்டு முதலிடத்தில் இருந்த பிரபல தொலைக்காட்சி நடிகையான சோபியா வெர்கராவுக்கு இ[illegible] இடம் [illegible].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருக்கம் விபரீதமாகியது

வயது குறைந்த வாலிபனை மயக்கி அவருடன் உறவு வைத்துக் கொண்டார் என்று பெண்ணொருவருக்கு 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் பிரிஸ்டலைச் சேர்ந்தவர் மேரி ஜீன் பிரண்ட்ஷிப். இவர் ஏற்கனவே திருமணமானவர். திருமணமாகி 18 வருடங்கள் ஆகின்றன. இவருக்கு வயதுகுறைந்த சிறுவனுடன் பழக்கம் ஏற்பட்டது. பின்னர் இது நெருக்கமான பழக்கமாக மாறி விட்டது.

அதனை தனது தோழியிடம் பெருமையாக அவர் கூறியுள்ளார். அவர்கள் மூலமாக காவல்துறை வரை இந்த விடயம் சென்றுள்ளது.

அதனை அடுத்து குறைந்த வயது கொண்ட வாலிபனை மயக்கி தவறான உறவுக்குப் பயன்படுத்தினார் என்று இவர் மீது பொலிஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இந்த வழக்கை விசாரித்த பிரிஸ்டல் நீதிமன்றம், மேரிக்கு 6 மாத சிறைத் தண்டனை விதித்தது.

மேரி ஜீன் தரப்பு சட்டத்தரணி ''மேரிக்கும் வாலிபனுக்கும் இடையே தவறான உறவு இருப்பதாக கூறப்படுவது தவறு. உண்மையில் அந்தப் பையனுக்கு வயது 16க்கு மேல் ஆகிறது. எனவே இந்த உறவில் தவறு இருப்பதாகக் கூற முடியாது. இது குறித்து மேலும் சட்ட ஆலோசனை மேற்கொண்டுள்ளோம். எனவே தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும்'' என்று கோரினார். இதையடுத்து தண்டனையை 2 வருடங்களுக்கு நிறுத்தி வைத்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



நேற்றுமுன்தினம் ஆப்கன் சென்ற அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் லியோன் பெனற்றாவை, கந்தகார் விமான நிலையத்தில் வரவேற்றோர் அமெரிக்க இராணுவ மேஜர் ஜெனரல் ரோபேர்ட் அப்ராம்ஸ்.

## கடும் குளிரிலும் பெண்கள் நடத்திய நிர்வாணப் போர்

உக்ரைன் நாட்டில் பெருகி வரும் ஊழலுக்குகெதிராக பெண்கள் நிர்வாண கோலத்தில் போராடினர்.

உக்ரைன் நாடாளுமன்றத்தில் ஊழல் காரணமாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதம் நடைபெற்று வருகிறது. இதனால் நாடாளுமன்ற செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

இந்தநிலையில், சில பெண்கள் அமைப்பினர் நூதன போராட்டத்தில் இறங்கினர். கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் தங்களது உடைகளை களைந்து நிர்வாண கோலத்தில் போராட்டத்தில் இறங்கினர்.

நாட்டில் பெருகி வரும் ஊழல்களுக்கு எதிராகவே போராடுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பொய்க் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் யூலியா டைமோஷென்கோ சிறை வைக்கப்பட்டிருப்பதைக் கண்டிப்பதர்கவும் அவர்கள் தெரிவித்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை விடப் பார்வையாளர்கள் திரண்டிருந்தனர். இதனால் போராட்டக்காரர்களை அகற்றப் பொலிஸார் பெரிதும் சிரமப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஹமாஸ் இயக்கத்தின் பேரணி

### ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் பங்கேற்பு



ஹமாஸ் இயக்கம் பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் பேரணி ஒன்றை நடத்தியுள்ளது. இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் கலந்து கொண்டுள்ளனர். ஹமாஸ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு இந்த பேரணி நடத்தப்பட்டது.

2007ஆம் ஆண்டுக்கு பின்னர் இவ்வாறான பேரணி ஒன்று நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

தற்போது ஹமாஸ் மற்றும் படாஹ் இயக்கங்களுக்கு இடையில் புரிந்துணர்வு ஏற்பட ஆரம்பித்துள்ளது. இந்தநிலையிலேயே பேரணி நடத்தப்பட்டுள்ளது. இதில் பலஸ்தீனியர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

எனினும் இவ்வாறான செயற்பாடுகள் ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான முரண்பாட்டை அதிகப்படுத்தலாம் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## மூன்று குழந்தைகள் வேண்டும்

### வலியுறுத்துகிறார் விளாடிமிர் புடின்

ஒரு குடும்பத்துக்கு மூன்று குழந்தைகளாவது இருக்க வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வலியுறுத்தியுள்ளார். ரஷ்யாவில் சமீபத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக விளாடிமிர் புடின் தெரிவானார்.

ரஷ்ய நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி புடின் உரையாற்றுகையில், ''12 ஆண்டுகளாக ரஷ்யாவின் மக்கள் தொகை குறைய ஆரம்பித்து விட்டது. மக்கள் தொகை அதிகரித்தால் தான் பல விடயங்களில் நாம் முன்னேற முடியும். எனவே ஒவ்வொரு குடும்பத்துக் கும் குறைந்த பட்சம் மூன்று குழந்தைகளா வது இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## அணுக்கழிவுக்கு எதிராக பிரான்ஸில் போராட்டம்

நெதர்லாந்தில் இருந்து அணு ஆயுதக் கழிவுகளை ஏற்றிக் கொண்டு பிரான் ஸுக்குள் நுழைய முயன்ற தொடர்வாகன அணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட் டம் நடத்தப்பட்டது.

''நெதர்லாந்து அணுசக்திக் கழிவுகளைப் பிரான்ஸுக்குள் அனுமதிக்க மாட்டோம். அது கொண்டு வ ரப்படும் வழியில் எல்லாம் ஏராளமான வெப்பத்தையும் கதிர் வீச்சையும் வெளிப்படுத்தும். இதனால் பாதிப்பு ஏற்படும்'' என்று கூறி போராட் டம் நடத்தினர்.


ஒய்வு பெறுதலும் பிறந்தநாள் வாழ்த்தும்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஆண் பரிசாரகராக 28 வருடங்கள் சேவை யாற்றி
14.12.2012 இல் ஓய்வில் சென்று இன்று 15.12.2012 இல் தனதில்லத்தில்
பிறந்தநாளைக் கொண்டாடும் எங்கள் அன்பான அப்பா
முருகேசு கந்தையா
அவர்கள் சகல செல்வங்களும் பெற்று சீருடனும் சிறப்புடனும் நீடூழிகாலம் வாழ்கவென
அன்புடன் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்:
திருமதி க.இராதாதேவி (மனைவி).
க.ஏகன்(அஜி),க.சுதர்சன்(சுஜி) (மகன்மார்).
சு.கௌசி (மருமகள்).
தப்பாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
(26781)(5.6.7)



அகவை 80 இல் மனமகிழும்



திருமதி
இராஜேஸ்வரி சுப்பிரமணியம்
15.12.2012
இந் நன்நாளில் எல்லாம் வல்ல
சாயிபாபா அவர்களின் ஆசியும் அருளும் பெற்று
நீடூழி வாழ வாழ்த்தும்
அன்பான கணவர்
மருமக்கள்:-
ஏகாம்பரம் இரவீந்திரன் (ஜேர்மனி),
T. செல்வகிருபாகரன் (டென்மார்க்)
மகள்மார்:- அனுஷா இரவீந்திரன்
அனுலா செல்வகிருபாகரன்
பேரப்பிள்ளைகள்:- லக்ஷ்மி பிரியா, அனுஷன்,
யோகலக்ஷ்மி (ஜேர்மனி), தேனுகா, தேனிகா,
அரிஷ் (டென்மார்க்) மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள். (26769) (2.6)
396,(570), கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பை
வசிப்பிடமாகக் கொண்ட
சிற்றம்பலம்
சிவானந்தராஜா
அவர்கள் இன்று [15.12.2012] கலாசார
அமைச்சினால் வழங்கப்படுகின்ற
'கலாபூஷண' விருது பெற்று
கௌரவிக்கப்படுவதை நாம் உளமாரப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இவரது பணி மேலும் வளர்ந்து
இன்னும் பற்பல விருதுகளைப் பெற்று
சிறப்படைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர்:
நாவலர்கத்தினர், யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை,
சுழிபுரம் வடக்கு.
[26791][5.6.7]



தென்னிந்திய புகழ் அர்ச்சனா அக்கடமியின்
ஆடைகளில் அச்சுக்கலை பயிற்சி - யாழில்
Fabric Printing Training



சாரி, சுடிதார், சீ-சேட் ஆடை கள் மற்றும் துணிகளில் பல வண்ணங்களில் டிசைன்களை
வீட்டிலிருந்தே இலகு முறையில் குறைந்த முதலீட்டில் தென்னிந்திய தொழில் நுட்பத்துக்கமைய
பிரிண்டிங் செய்யும் நுட்பங்கள் தொடர்பான விரிவுரைகளும், முழு நேர செய்முறை
பயிற்சிகளும் 2 நாள்கள் நடை பெறவுள்ளன.
பயிற்சி நிறைவில் தென்னிந்திய அர்ச்சனா அக்கடமியின் சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சியின் போது மாணவர்கள் பொருள்கள் எதுவும் கொண்டுவரத் தேவையில்லை.
வயது வேறுபாடின்றி இருபாலாரும் கற்கலாம்.
டிசெம்பர் மாதம் 22,23 (சனி, ஞாயிறு) மு.ப. 10 மணி முதல் மாலை 4 மணி வரை
பதிவுகள், விபரங்களுக்கு: 0715863151, 077 728 3192, 077 890 4131
CHA நிறுவன மண்டபம்,
90, பாங்ஸால் வீதி, (Bankshall Street)
யாழ்ப்பாணம்.
விழும் ரிவியில் திங்கள் காலை 9.50 இற்கு இந்த நிகழ்ச்சியை பார்க்கலாம்
குறிப்பு- யாழில் எமக்கு வேறு கிளைகள் இல்லை. (25992)(6.11)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முக்கிய தேவைகள் இருக்கும்போது பூங்காக்களுக்கு அவசியம் ஏன்?

## கிழக்கு 'பட்ஜெட்' விவாதத்தில் உறுப்பினர் கேள்வி

திருகோணமலை, டிசெ.15

உள்ளூராட்சிமன்ற எல்லைக்குள் மக்களுக்கான வீதித்தேவை, மின்சாரத் தேவை போன்ற தேவைகள் இருக்கின்றபோது புறநெகும திட்டத்தின் கீழ் இரண்டு பூங்காக்கள் அமைக்க வேண்டிய தேவை ஒரு நாளும் ஏற்படாது.

இவ்வாறான நேரத்தில் அக்கரைப்பற்றில் இரண்டு பூங்காக்கள் ஏன் அமைக்கப்படவேண்டும்? என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவம் கேள்வி எழுப்பினார்.

கிழக்கு மாகாண சபையின் வரவு- செலவுத் திட்ட விவாதம் இடம்பெற்றவேளையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்படி தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

முக்கியமாக அக்கரைப்பற்றில் இருக்கும் அக்கரைப்பற்று மாநகரசபை எல்லைக்குள் நடக்கின்ற குறிப்பாக புறநெகும அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற ஒரு முறைகேட்டினைப்பற்றி இந்த சபையில் பேசுகின்ற தேவை எனக்கிருக்கிறது. ஏற்கனவே மீராவோடையில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவோடு சேர்ந்த மக்கள் பயன்படுத்திய சமுர்த்தி வங்கி வீதி அழிக்கப்பட்டு அந்த வீதி இருந்த இடத்தில் உல்லாச உணவு விடுதி அமைக்கப்படுகிறது.

மேலும் மீராவோடையின் மேற்கிலும், கிழக்கிலும் இருக்கும் இரண்டு வீதிகள் மக்கள் பயன்பாட்டில் இருந்து முற்றாக இல்லாமல் செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனை உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் தலையிட்டு - நிறுத்தி மீண்டும் பொது மக்களின் பாவனைக்கு வழங்குமாறு அவரிடம் வேண்டிக்கொள்கிறேன்.

குறித்த வீதி பாடசாலை, சமுர்த்தி வங்கி, சுகாதார நிலையம், பள்ளிவாசல், குர்ஆ ன் மத்ரசா போன்றவற்றுக்குச் செல்லும் பாதையாக இருப்பதால் அதனை மீண்டும் மக்களுக்கு வழங்குவது மிக அத்தியாவசியமானதாகும் - என்றார். (வ)

# கிழக்குக்கான வரவு–செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் குறித்த ஆலோசனை



திருகோணமலை, டிசெ.15

கிழக்கு மாகாணசபை கால்நடை உற்பத்தி, சிறு கைதொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சரால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான ஆலோசனைக் கூட்டமொன்று கடந்த புதன் கிழமை மாகாணசபை கட்டடத்தில் இடம்பெற்றது.

கால்நடை உற்பத்தி, சிறு கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் தலைமையில் இடம்பெற்றஇக்கூட்டத்தில் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் தலைவர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில், அமைச்சுக்கான வரவு-செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தின்போது உறுப்பினர்களால் முன் வைக்கப்பட்ட ஆலோசனைகள் குறித்து பேசப்பட்டதோடு, திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

இதன்போது, சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட பிரதியொன்றை அமைச்சின் பிரதம கணக்காளர் ஏ.ரகுநாதன், திட்டமிடல் பணிப்பாளர் டொக்டர் ஆர்.ஞானசேகர் ஆகியோரிடம் அமைச்சர் ஹாபீஸ் நஸீர் கையளித்தார்.

முன்னதாக இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து, சபையில் சமர்ப்பிப்பதற்காக 5 அமைச்சுக்களுக்குமான வரவு-செலவுத் திட்ட ஆவணங்களை அமைச்சின் செயலாளர் கே.பத்மநாபனிடம் இருந்து அமைச்சர் ஹாபிஸ் நஸீர் பெற்றுக் கொண்டார்.

# மாவீரருக்கு அஞ்சலி செய்வதை பயங்கரவாதம் என்கிறது அரசு

## சுட்டிக்காட்டுகிறது ஆசிய பசுபிக் வலயச் சஞ்சிகை

யாழ்ப்பாணம், டிசெ. 15

இறுதிப் போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் யாழ். குடாநாட்டில் தற்போதும் பதற்ற நிலை நீடித்துவருவதாக சுட்டிக்காட்டியுள்ளது ஆசிய பசுபிக் வலய சஞ்சிகையான 'த டிப்ளொமெட்'.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினமான கடந்த நவம்பர் இறுதியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலைக்கழக வளாகத்திலும், மாணவர் விடுதியிலும் ஈகச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டில் பதற்ற நிலை உருவாகியுள்ளது. குறித்த தினத்துக்கு மறுநாள் தமது விடுதிகளுக்குள் அத்துமீறி உள்நுழைந்த இராணுவத்தினருக்கு எதிராக மாணவர்கள் எதிர்ப்பை அமைதியான முறையில் வெளிப்படுத்தினர். அந்த மாணவர்கள் மீது இலங்கைப் படையினர் தாக்குதல் நடத்தி ம் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சில மாணவர்களைக் கைது செய்தனர்.

1983 ஆம் ஆண்டு நாட்டில் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விட்டதைத் தொடர்ந்து அதற்கெதிராகக் கடந்த 30 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தைத் தமிழர்கள் நடத்தினர். 2009 ஆம் ஆண்டு அப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து, அந்தப் போரின்போது உயிரிழந்தவர்களை நினைவு கூருவதை அரசு பயங்கரவாத நடவடிக்கையாகக் கருதி, அடக்குமுறையைக்கையாண்டு வருவதாக அது சுட்டிக்காட்டியுள்ளது.

(த-16)

# கல்முனை மாநகரசபை பட்ஜெட் அனைவரது ஆதரவுடனும் நிறைவேறியது

அம்பாறை, டிசெ.15

கல்முனை மாநகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் மாநகர முதல்வர் முஹம்மட் சிராஸ் மீரா சாகிப் தலைமையில் மாநகரசபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முக்கிய நிகழ்வாக மாநகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப் சபையில் சமர்ப்பித்து சபையின் அங்கீகாரத்தைக் கோரினார்.

இதன்போது 2013 ஆம் ஆண்டுக்காக மாநகரசபை எதிர்பார்க்கின்ற மொத்த வருமானம் 161 மில்லியன் எனவும் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கட்சி பேதங்களின்றி சகல உறுப்பினர்களும் இந்த வரவு-செலவுத் திட்ட மொழிவை வரவேற்றதுடன், மக்கள் மயப்படுத்தப்பட்ட சிறந்த வரவு- செலவுத் திட்டமென உறுப் பினர்கள் பலரும் உரையாற்றுகையில் புகழாரம் சூட்டினர்.

சபை உறுப்பினர்கள், வர்த்தக சமூகம், பொதுமக் கள், புத்திஜீவிகள் முதலானோரின் கருத்துக்களையும் உள்வாங்கி முதல் வர் முஹமட் சிராஸ் மீரா சாகிப் கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன்சிறந்த வரவு- செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர்கள் விதந்து பாராட்டினர்.

பிரதி வாதங்கள், எதிர்ப்புகளின்றி சில ஆலோசனைகளுடன்சகல உறுப்பினர்களும் வரவேற்றனர். மேற்படி வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரிப்பதாக ஆளும் முஸ்லிம் காங்கிரஸ் தரப்பு உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எம்.நகீப் முன் மொழிய தமிழரசுக் கட்சி உறுப்பினரும், எதிர்க் கட்சித் தலைவருமான ஏ.அமிர்தலிங்கம் வழிமொழிந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் (ஆளும் தரப்பு), ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி, தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி சார்ந்த உறுப்பினர்கள் இந்த மாநகர சபையில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (வ-30)

# 'நோய்களை ஒழிக்க ஒன்றுசேர்வோம்' ஓட்டமாவடியில் கருத்தரங்கு



தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்த 'நோய் துன்பங்களை ஒழிக்க ஒன்று சேர்வோம்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பொலிஸார், ஓட்டமாவடி பிரதேச செயலக பட்டதாரி பயிலுநர்கள், ஓட்டமாவடி விதாதாவள நிலைய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி கருத்தரங்கில் வளவாளராக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.அஸ்ஹர் கலந்து கொண்டு தொற்று நோய் தொடர்பாகவும் அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறுவது என்பது தொடர்பிலும் கருத்துரையாற்றினார். (வ)

# சட்டவிரோதமாக ஆஸி. செல்ல முயன்ற 14 பேர் ஏறாவூரில் கைது

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஏறாவூர் எல்லை வீதியில் வைத்து சிலாபத்தைச் சேர்ந்த 14 பேர் ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மேற்படி கைது இடம்பெற்றது. கைது செய்யப்பட்டவர்களில் 6 சிறுவர்கள் 5 பெண்கள் 3 ஆண்கள் உள்ளடங்குகின்றனர்.

ஆஸ்திரேலியா செல்வதற்கான ஏற்பாடுகளுடன் அவர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்தே குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவர்களைக் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(வ)

# புவியியல் தகவல் தொழில்நுட்ப பயிற்சித் திட்டம் இன்றுடன் நிறைவு



புவியியல் தகவல் தொழில்நுட்ப பயிற்சித் திட்டம் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக புவியியல் துறைத் திணைக்களத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பமான மேற்படி பயிற்சித்திட்டம் இன்று சனிக்கிழமைவரை நடைபெறவுள்ளது.

புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான கலாநிதி எம்.ஐ.எம்.கலீல் தலைமையில் நடைபெறுகின்ற குறித்த பயிற்சித்திட்டம் புவியியல்துறை தலைவர் எம்.எல்.பௌசுல் அமீரின் வழிகாட்டலிலும் விரிவுரையாளர்களான எம்.எச்.எம். றினோஸ், ஐ.எல்.எம்.சாஹீர் ஆகியோரின் நெறிப்படுத்தலிலும் நடைபெறுகின்றது.

மேற்படி பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் பிரத்ம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், பயிலுநர்களும் இதில் கலந்து கொண்டனர். (வ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு

மஹியங்கனை,டிசெ.15

மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

மஹியங்கனைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மேற்படி விபத்தில் மடவளை பகுதியைச் சேர்ந்த முஹம்மத் ரபீக் என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதியதையடுத்தே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மரண விசாரணைகளுக்காக சடலம் பேராதனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(வ)

# ஓட்டோ விபத்தில் ஒருவர் சாவு

கம்பளை நுவரெலியா வீதியில் நோனாவத்தை என்ற இடத்தில் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மேற்படி விபத்துச் சம்பவத்தில் ஓட்டோ பள்ளத்தில் வீழ்ந்ததன் காரணமாக பெண் ஒருவர் உயிரிழந்ததோடு மூவர் படுகாயமடைந்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று புசல்லாவ பொலிஸார் தெரிவிக்கின்றனர். (வ)

# புல்மோட்டையில் முதியோர் கௌரவிப்பு

திருகோணமலை , டிசெ.15

திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டையைச் சேர்ந்த 60 முதியவர்கள் புல்மோட்டை கிராமிய முதியோர் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டனர். புல்மோட்டை முஸ்லிம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆண், பெண் இருபாலாரும் சேர்த்து அறுபது [illegible] கௌரவிக்கப்பட்டனர். பெண்களுக்கு சாரியும், ஆண்களுக்குச் சாரமும் வழங்கப்பட்டன.

கிராமசேவையாளர் எஸ்.எம்.தாயுடீன் தலைமை தாங்க, பிரதம அதிதியாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர், குச்சவெளி உதவிப் பிரதேச செயலாளர் (பிரதேச செயலகம்) கமலினி, புல்மோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜசாரட்ண,பாடசாலைப் பிரதி அதிபர் என்.எம் வகாப் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர். (வ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனம் விற்பனைக்கு

மகேந்திரா மக்சிமோர் படி வாகனம் 2000 கி.மீ ஓடிய நிலையில் விற்பனைக்கு உண்டு.விலை விசாரணை யாவும் நேரில்.

T.P 0777 066 487

யாழ்ப்பாணம் (26807) (6.7.4)

## தென்னங் காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு, இராமாவில் முருகன் ஆலயத்திற்கு பின்புறமாக A 9 வீதியில் இருந்து 300m தூரத்தில் 10 பரப்புதென்னை மரங்கள் உள்ள காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 064 6218 (26806) (6.7.4)

## வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி,
யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள புதிய வீடு
(1½ பரப்பு)
விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0757100884 (25682)(2.6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு, நட்சத்திரம் மூலம், லக்கிணத்தில் செவ்வாய், கிரக பாவம் 97, அரச முகாமைத்துவ உதவியாளராக (HNDA) பணி புரியும் மணமகனுக்கு அரச, வங்கி, ஆசிரிய மணமகள் தேவை. வலிகாமம் பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 9558170 (26811)(6.11)

## பெயர் மாற்றம்

ஆவரங்கால் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை இதயகலா ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து ஆழ்வாப்பிள்ளை இதயரூபா என பெயர் மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகிறேன்.

ஆ.இதயரூபா. (26720)(6.11)

## காணி விற்பனைக்குண்டு

கச்சேரி வீதி, நல்லூரில்
கிணறு சுற்றுமதிலுடன்
கூடிய காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0757100884 (24687)(3.14)

## வீடு வாடகைக்கு

யாழ். பஸ் நிலையத்திலிருந்து 10 நிமிட நடை தூரத்தில் அமைந்துள்ள 10 அறைகள், 10 குளியலறைகள் கொண்ட மாடி வீடு, அரசநிறுவனங்கள், காரியாலயங்கள், வெளிவாரி பட்டதாரிக் கல்வி நிலையம், தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் ஆகியவற்றிற்கு உகந்தது.

தொடர்பு : 077 054 7623 (26724)(6.11)


## COMPUTER COURSES

Diploma in Computerized
**Accounting** Tally, Quick Book, Accpac M.Y.O.B

Diploma in
**Video Editing** Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in
**AutoCAD** 2D & 3D Modeling (சீ/2184)

Adv. Dip. in
**Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி. M.M.V. வீதி (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, HNB அருகில் Tel. :021-227 0775
சுன்னாகம் KKS வீதி, ஜோ. போ. டெ. ஸ், NSB அருகில். Tel. :021-224 1970


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:- 26.02.1964



மறைவு:- 27.11.2011

அமரர் திருநாவுக்கரசு ஜெகதீஸ்வரன் (ஈசன்)

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கே.கே.எஸ். றோட்,
நாச்சிமார் கோயிலடி.

என்றும் உங்கள் நினைவுடன்
பிள்ளைகள், சகோதரர்கள். (26439)(6.11)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04★07★1972



உதிர்வு
08★12★2010

திருமதி நாராயணக்குருக்கள் தேவசேனா

திதி:- 15.12.2012

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் அம்மா உங்கள்
நினைவுகள் எம்மைவிட்டு அகலவில்லை
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு.

கணவர், பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, கண்டி வீதிக்கு அண்மையில் குடியிருப்பாளருக்கு ஏற்ற காணி, நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 767 6020,
077 615 0651 (18079)(6.11)

## புறொயிலர் தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழி கூடிய விலையில் உடன் தேவை.
நிரந்தரமாக கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61,இராமநாதன் வீதி, கலட்டி.
T.P 021 7912783, 0773396323 (28719) (6.7.4)

## மணமகள் தேவை

யாழ் . இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975, பூரம் 4 ஆம் பாதம், உதயத்துச் செவ்வாய், உயரம் 6', கிரகபாவம் 54, லண்டன் PR உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 021 205 9661 (26792) (6.7.4)

## வாகனம் விற்பனைக்கு

300- XXXX எனும் தொடரிலக்கமுடைய Nissan sunny FB -14 கார் (full option) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0729502018 (26783) (6.7.4)

## காணி விற்பனை

பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கை, சுன்னாகத்தில் (நாகம்ஸ் திரை அரங்குக்கு அருகில்) பிரதான வீதியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஆறு பரப்பு காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0777 222 468, 0777 222 467 (26396) (5.6.4)

## ICT, GIT வகுப்புக்கள்

தரம் 10, 11, A/L மாணவர்களுக்கு தகவல் தொழில் நுட்பம் (ICT), GIT ஆகிய பாடங்கள் பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்களாக ஆங்கில மற்றும் தமிழ் மொழி மூலம் நடத்தப்படும்.

முகவரி: [illegible]

தொடர்பு: 077 3555 672 (28590)(6-7-45)

## மரண அறிவித்தல்



### முருகேசு நவரத்தினம்

(முன்னாள் பிரபல வர்த்தகர், கண்டி ஸ்ரோர்ஸ், நெல்லியடி)

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நவரத்தினம் 11.12.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், கனகம்மாவின் பாசமிகு கணவரும், உதயகுமார், நிர்மலா, ரஞ்சினிதேவி, விஜயகுமார் (விஜயன்), நளினி, சத்தியகுமார் (துரை), வசந்தகுமார்(பாபு) ஆகியோரின் அன்புத்தந்தையும், மகாலஷ்மி, நந்தகுமார், திருச்செந்தூர், கலாரஜனி,சிவநேசன், பாரதி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனும், யதுனா, கோபிநாத், வித்யா, பார்த்தீபா, சிந்துஜன், விதுசன், நிதுசன், நிதர்சன், திருஜா, நிருஜா, நிதுஜா, அருண்கவி, ஆர்த்திகா, அஷ்சயா, அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இராசையா மற்றும் செல்லம்மா, இராசம்மா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில், அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
T.P- 021 2262466

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள். (26800)(6.11)

## ஓராண்டு நினைவு நாள்



மலர்வு
14★01★1955

உதிர்வு
27★11★2011

அமரர்
நடராசா
பவாநாதன்

அன்பின் பிறப்பிடமே! அறிவின் சிறப்பிடமே!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மாறாது அப்பா.........
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
இப்புவியில் அப்பாவை எப்போது காண்பது
உங்களை இழந்த துயரை ஈடுசெய்ய முடியாமல்
தவிக்கின்றோம் அப்பா இன்று வரை..........

முதலாம் ஆண்டு நிறைவையொட்டி அவரின் இல்லத்தில் இன்று (15.12.2012)சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]வோடை,
[illegible] தெற்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர். (26683) (5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அநுராதபுரம், ஜயஸ்ரீ மகா போதி விகாரைக்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன்போது, வடமத்திய மாகாண ஆளுநர் கருணாரத்ன திவுல்கனே, அந்த மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, பிரதியமைச்சர்களான டபிள்யூ.பீ.ஏக்கநாயக்க மற்றும் எஸ்.எம்.சந்திரசேன ஆகியோரும் கலந்துகொண்டனர்.(த)

# கொள்ளைக் கும்பலின் புதிய கண்டுபிடிப்பு

கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களின் உறுப்பினர்களாகத் தோன்றி தங்க நகைகள் மற்றும் வாகனங்களுக்கான லொத்தர் சீட்டிழுப்புக்களில் வெற்றி பெற்றுள்ளீர்கள் எனக் கூறி பொதுமக்களிடமிருந்து நிதி வசூலிக்கும் குழுவொன்று தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

பரிசுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 500 ரூபா முதல் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை கேட்டு கையடக்கத் தொலைபேசிகள் மூலம் குறுஞ்செய்திகளை அனுப்பி, இந்த நிதி மோசடி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறானதொரு குறுஞ்செய்தி கிடைத்துள்ள கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் வங்கிக் கணக்கொன்றுக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்டுள்ளார்.

இந்தப் பணத்தை, கஹவத்தை, அடகலம்பன்ன பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் உடனடியாக வங்கியிலிருந்து மீளப்பெற்றுள்ளார் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், மேற்படி நிதி மோசடிக் கும்பலுக்கும் வலைவிரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)

# பல்கலை. மாணவர்களின் உரிமை மீறப்பட்டுள்ளது

## அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.15

பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளது என குற்றஞ்சாட்டியுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழக மாணவர்கள் அதிகளவில் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும் தெரிவித்துள்து.

பல்கலை மாணவர்களின் வகுப்புகள் ரத்து தொடர்பில் 524 சம்பவங்களும், மாணவர்களுக்கான ஒழுக்காற்று விசாரணை தொடர்பில் 104 சம்பவங்களும், மஹாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு தொகை இரத்து தொடர்பில் 67 சம்பவங்களும், வழக்குகள் தொடர்பில் 104 சம்பவங்களும், கைதுகள் தொடர்பில் 44 சம்பவங்களும் பதிவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர்களின் மனித உரிமைப் பாதுகாப்பு தொடர்பான அமைப்பின் பொறுப்பாளர் நுவான் பதுகே இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஓராண்டு காலப்பகுதில் மட்டும் இவ்வாறான பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஆண்டில் பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைகள் பாரியளவில் மீறப்பட்டுள்ளன என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் சிந்தக்க ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைகளை பாதுகாக்கக்கூடிய வகையில் அரசு எவ்வித நடவடிக்கை களையும் எடுக்கவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

# ஆகாயத்தில் இருந்து விழும் பொருள்களை தொடக்கூடாது

கொழும்பு,டிசெ 15

ஆகாயத்திலிருந்து விழுகின்ற மர்மப் பொருள்களைக் காணுமிடத்து அவற்றை தொட வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ள சுகாதார அமைச்சு, அவ்வாறான மர்மப் பொருள்களைக் காணுமிடத்து பொரளை மருத்துவ பரிசோதனை நிலையத்துக்கு அறிவிக்குமாறு குறிப்பிட்டுள்ளது.

ஆகாயத்திலிருந்து விழும் மர்மப் பொருள்களில் அமிலங்கள் மற்றும் உலோகப் பொருள்கள் காணப்படக் கூடும் என்றும் அதனால் அவற்றைத் தொடுவதால் சிலவேளை ஆபத்துக்கள் ஏற்படக்கூடும் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஆகாயத்திலிருந்து விழும் மர்மப் பொருள்கள் தொடர்பில் கிடைக்கப் பெறும் தகவல்கள் மற்றும் வீடியோ காட்சிகளை தேசிய வானியல் ஆய்வாளரான பேராசிரியர் சந்திரா விக்கிரமதுங்கவிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பில் தகவலறிந்தவர்கள், பொரளை மருத்துவ பரிசோதனை நிலையத் தொலைபேசிய இலக்கமான 011 - 2693532 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது. (த)

# சட்டத்தரணிக்கு விளக்கமறியல்

கொழும்பு,டிசெ 15

இளம் பெண் சட்டத்தரணியைத் தகாத வார்த்தைகளினால் திட்டி துன்புறுத்தியதாகக் கூறப்படும் 56 வயது மதிக்கத்தக்க சட்டத்தரணி ஒருவரை விளக்க மறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சட்டத்தரணி காமினி யாப்பா ரத்ன என்பவரையே எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தெல்தெனிய நீதிவான் நீதிமன்றத்தைச்சேர்ந்த பெண் சட்டத்தரணியொருவரையே துன்புறுத்தியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் சட்டத்தரணி காமினி யாப்பாவை முல்லேரியா தேசிய மனநல வைத்தியசாலை வைத்தியரிடம் அனுமதித்து அறிக்கையொன்றைப் பெற்று அதனையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த)

# இந்தோனேசியாவில் இலங்கையர் கைது

இலங்கையில் இருந்து சென்ற அகதி ஒருவர் இந்தோனேசியாவில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

'த ஜகார்த்தா போஸ்ட்' இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அவருடன் மேலும் 25 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. கைதானவர்கள் இந்தோனேசியாவின் டுமாய் நகர பொலிஸாரால் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

# நால்வருக்கு மரணதண்டனை

**ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சகோதரர்கள் கேகாலை–ஹரிவட்டுன பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.**

கடந்த 2008 நவம்பர் மாதம் தேடுதல் நடவடிக்கைக்கு சென்றிருந்த பொலிஸ் சார்ஜன் ஒருவரை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு கேகாலை மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தர நேற்றுமுன்தினம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

2008 நவம்பர் மாதம் 16ஆம் திகதி சட்டவிரோத மது தயாரிப்பு நிலையத்தை முற்றுகையிடச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தொடர்புபட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சகோதரர்கள் கேகாலை - ஹரிவட்டுன பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நால்வர் மீதான கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவர்களுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுளளது. (த)

# மஞ்சுள மீதான தாக்குதல் சந்தேகநபர்களை கைது செய்து முன்னிலைப்படுத்த உத்தரவு

கொழும்பு,டிசெ.15

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கல்கிஸை நீதிவான் நீதிமன் றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு கல்கிஸை பிரதம நீதிவான் நிரோஷா பெர்னாண்டோ முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே அவர் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஆறு இலட்சம் தொலைபேசி உரையாடல்களை பரிசீலனைக்கு உட்படுத்தியதுடன் அதில் சந்தேகத்திற்கிடமான சில தொலைபேசி இலக்கங்கள் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

மஞ்சுள திலகரட்னவை பின்தொடர்ந்த கார் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பில் மோட்டார் வாகன ஆணையாளரிடம் இருந்து விவரங்களைப் பெற்று அடுத்த கட்ட விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய அறிக்கைகள் ஐந்து நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கைகளை ஜனவரி மாதம் வரை பாதுகாப்பாக வைக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உத்தரவிடுமாறும் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையை ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை ஒத்தி வைத்த கல்கிஸை பிரதம நீதிவான், அன்றைய தினம் விசாரணைகளை நிறைவு செய்து சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்து மாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார். (த)

# முகாமில் மாணவர்களுக்குப் பயிற்சியா? கடுமையாக எதிர்க்கிறது ஆசிரியர் சங்கம்

கொழும்பு,டிசெ.15

கடந்த வருடம் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு எதிர்வரும் 27ஆம் திகதி முதல் இராணுவ முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ள நிலையில், அதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் பல்கலைக் கழகத்துக்கு தெரிவானவர்கள் மற்றும் தெரிவாகாதவர்கள் என அனைவருக்கும் இந்தப் பயிற்சி வழங்கப்படுமெனவும் ஆசிரியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தலைமைத்துவப் பயிற்சியானது, மாணவர்களின் சுதந்திர செயற்பாட்டைப் பாதிப்பதாகவும் பல்கலைக் கழகங்களை இராணுவமயமாக்கும் முயற்சியாகும் எனவும் அந்தச் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அவர் அறிக்கை விடுத்துள்ளார். (த)

# தெரிவுக்குழுவின் அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை

## சபாநாயகருக்குச் சம்பந்தன் கடிதம்

கொழும்பு,டிசெ.15

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கைகள் எதுவும் தனக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், தெரிவுக்குழு வின் பிரதி நிதியுமான இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு நேற்று கடித மொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அமர்வுகள் மற்றும் அமர்வின் அறிக்கைகள் எதுவும் கடந்த 4ஆம் திகதி எனக்கு கிடைக்கவில்லை என்பதை தங்களின் கவனத்துக்கு கொண்டுவருகின்றேன்.

டிசெம்பர் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையின் பிரதியும் எனக்குத் தரப்படவில்லை.

அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அதன் வரைவோ அல்லது அறிக்கையோ எனக்குத் தரப்படவில்லை. இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்படினும் அது எனக்கு இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லை.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து அந்த அறிக்கை எனக்குக் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறும், மேற்படி ஆவணங்களை இயன்றளவு விரைவாக எனக்கு அனுப்பி வைக்க ஆவன செய்யு மாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். அரச விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**இடபம்:** ஒரு விதபடபடப்பு வந்து செல்லும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக்கொள்ளாதீர்கள். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**மிதுனம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் அமைதி நிலவும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள். பணவரவு உண்டு.

**சிங்கம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். நண்பர்களின் வருகையுண்டு. வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.

**கன்னி:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். உடன்பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. பெற்றோரின் உடல் நிலை சீராக இருக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

### நாளை

மார்கழி- 01 ஞாயிற்றுக்கிழமை 16.12.2012
திதி: திருதியை மு.ப 08.32 வரை
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப 02.55 வரை
சுபநேரம்: 09.22- 10-52 வரை
ராகுகாலம்: 04.52- 06.22 வரை

**துலாம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும். தாயாரின் உடல்நிலை சீராக அமையும்.

**விருச்சிகம்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்ட நாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** பழைய பிரச்சினைகள் தலைதூக்கும். உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். சில நேரங்களில் வெறுப்பாகப் பேசுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிடாதீர்கள்.

**மகரம்:** தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். அரச விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரியும். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிட்டும்.

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | 1 | 4 | | 3 | 9 |
| 2 | | | 5 | | | 8 | | |
| 1 | | | 2 | | | | 6 | |
| 4 | 6 | 5 | | | | | 8 | |
| | 8 | 2 | 1 | | 6 | 7 | 4 | |
| | 7 | | | | | 9 | 2 | 6 |
| | 2 | | | | 1 | | | 8 |
| | | 4 | | | 8 | | | 3 |
| 5 | 3 | | 4 | 6 | 7 | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 2 | 9 | 4 | 7 | 6 | 3 | 5 |
| 6 | 3 | 9 | 8 | 5 | 2 | 7 | 4 | 1 |
| 5 | 4 | 7 | 6 | 3 | 1 | 2 | 9 | 8 |
| 7 | 6 | 4 | 2 | 1 | 8 | 9 | 5 | 3 |
| 9 | 8 | 5 | 3 | 6 | 4 | 1 | 7 | 2 |
| 3 | 2 | 1 | 5 | 7 | 9 | 8 | 6 | 4 |
| 1 | 7 | 3 | 4 | 8 | 6 | 5 | 2 | 9 |
| 4 | 9 | 8 | 7 | 2 | 5 | 3 | 1 | 6 |
| 2 | 5 | 6 | 1 | 9 | 3 | 4 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## நெஞ்சை விட்டகலாத நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
26.10.1950

ஆண்டவன் அடியில்
30.12.2008

### திருமதி இந்திராணி கதிர்காமத்தம்பி

அன்பின் ஊற்றாய் பண்பின் உறைவிடமாய்
ஆதரவு காட்டிய எங்கள் குலவிளக்கே!
ஈகைக்கு இலக்கணமாய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
அகிலமுள்ளவரை எம் நெஞ்சில்
நிறைந்தே வாழ்ந்திருப்பீர்கள்
மலர்ந்த ரோஜாபோல் மணம் வீசிய
முகமும் இனிய குரலில் பேசும்
இதய ஒலியும் மறக்க முடியுமா?
சுற்றஞ் சூழ சொந்த பந்தங்களுடன்
மகிழ்வாக வாழ்ந்திருந்தீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.



அம்மன் கோயில் வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

(2675)(5-0-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ். கந்தர் மடம் இந்து சமயப் பேரவை ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத நடராஜர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நடைபெற வுள்ளது.

நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை முற்றோதல் இடம் பெறும். (3)

# தமிழர்களை தவறாக சித்திரிக்கும் படத்தில் ஒருபோதும் நடிக்கமாட்டேன்

## நடிகர் சத்தியராஜ் தெரிவிப்பு



தமிழ் மக்களை தவறாக சித்திரிக்கும் படத்தில் நடிக்க மாட்டேன் என த் தெளிவாக கூறியுள்ளார் நடிகர் சத்தியராஜ்.

தென்னிந்திய நடிகர் நடிகைகள் பலரும் ஹிந்தி படங்களில் நடிக்க வேண்டும் எனக் கடும் பிரயத்தனம் செய்து கொண்டி ருக்கும் நிலையில், நடிகர் சத்யராஜ் அவருக்கு வந்த வாய்ப்பைத் தூக்கி எறிய முடிவு செய்திருக்கிறார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இயக்குநர் ரோஷி ஷெட்டி இயக்கத்தில் உருவாகும் படம் "சென்னை எக்ஸ்பிரஸ்'. இதில் ஷாருக்கானுடன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார் நடிகர் சத்தியராஜ்.

படத்தின் கதைப்படி சில காட்சிகளை இலங்கையில் எடுக்க முடிவு செய்திருக்கிறார் இயக்குநர். தமிழ் மக்களை ஈழப்போரில் கொன்று குவித்த இலங்கை மண்ணில் கால் பதிக்க மாட்டேன். கட்டாயம் அங்கே படப்பிடிப்பு நடத்த வேண்டும் என விரும்பினால் தாராளமாக எனக்கு கொடுத்த முற்பணத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

படத்திலிருந்து நான் விலகிக்கொள்கிறேன் என படக்குழுவிடம் கூறிவிட்டாராம் சத்தியராஜ். சத்தியராஜின் இந்த முடி வைக் கேட்ட படக்குழுவினர் படப்பிடிப்பை கோவாவில் நடத்திக் கொள்ளலாம் என முடிவு செய்து விட்டனராம். மேலும் இப்படத்தில் தமிழர்களை தவறாக சித்திரித்திருப்பதாக சத்தியராஜுக்கு தெரிய வந்ததால் இது பற்றி அவர் இயக்குநரிடம் விளக்கம் கேட்டிருக்கிறார்.

இதன் பின் னரே தமிழ் மக்களைத் தவறாகச் சித்திரிக்கும் படத்தில் நடிக்கமாட்டேன் என தெளிவாக கூறியுள்ளார்-சத்தியராஜ். (3)

# பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம்

நவாலி,டிசெ.15

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தையல், மனையியல், முக அலங்காரம், சிகை அலங்காரம் ஆகிய பயிற்சி நெறி களுக்கு விண்ணப் பங்கள் கோரப் பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளுக்கு 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை தமது பகுதியிலுள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திலோ அல்லது சண்டிலிப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி திணைக்களப் பிரிவிலோ பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறிகள் யாவும் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்கத்தில் நடைபெறும் என்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உமாபாலன் அறிவித்துள்ளார். (3-100)

# சுகாதார தினத்தை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு செயற்பாடு

தென்மராட்சி,டிசெ.15

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேசத்தில் பல்வேறு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் கெற்பேலி பிரதேச மக்களுக்கான தொற்றாநோய் மருத்துவ பரிசோதனை முகாம் கெற்பேலி அ.த.க. பாடசாலையில் நேற்று நடைபெற்றது.

மருத்துவ பரிசோதனை முகாமில் காசநோய், பார்வைக் குறைபாடு, நீரிழிவு, உடல் நிறை குறைதல், மலேரியா ஆகிய பரிசோதனைகள் மேற்கொண் டதுடன் ஆயுள் வேத சிகிச் சைகளும் வழங்கப்பட்டன.

அதேசமயம் சாவகச்சேரி நகரசபை யினர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சி கிளையுடன் இணைந்து மீசாலை கிழக்குப் பகுதியில் டெங்கு நுளம்பு தொடர்பாக வீடு வீடாகப் பரிசோதனைகளை மேற்கொண்டதுடன் விழிப்புணர்வு செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவினர் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதி யோர்களுக்கான கண் பரிசோதனை முகாமை நடத்தினர். (3-9)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி,டிசெ.15

வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாவில் கைலாச வாகனம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், சப்பறத்திருவிழா 26 ஆம் திகதி புதன்கிழமையும், தேர்த்திருவிழா 27 ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தத் திருவிழா 28 ஆம் திகதி வெள் ளிக்கிழமை 10 மணிக்கும் ஆலயப் பிரதம குரு சிவசக்தி ஸ்ரீராம் தேவலோ கேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெற வுள்ளது. (3)

★ ★ ★

தென்மராட்சி,டிசெ.15

சாவகச்சேரி நுணாவில் மேற்கு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கஜமுகாசுரன் சம்ஹார நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும்.

மறுநாள் செவ்வாய்க் கிழமை விநாயகர் ஷஷ்டி விரத பூர்த்தியையொட்டி பி.ப.3.00 மணிக்கு விநாயகர் கதை படிப்பும் விசேட பூஜையும் இடம் பெறவுள்ளது.

**கடை வாடகைக்கு உண்டு**

கடை வாடகைக்கு உண்டு.
தொ ர்பு: 077 990 9273 (26836)(6.7.4)

**காணி விற்பனைக்கு**

நீர் வேலி இராச வீதியில் அமைந்துள்ள வைரவகோயிலுக்கு அருகில் (றோட்டுக்கு கிழக்காக ) இரண்டாவதாக உள்ள 10 ½பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.
தொ ர்பு: 0772562513,0755783800 (26599) (6.7)

**வவுனியாவில் கடை வாடகைக்கு**

93 அடி நீளமும், 11 அடி அகலமும் கொண்ட கடை (ஆதி விநாயகர் முன்பாக ) வாடகைக்கு விடப்படும்.
* ஹோட்டல்கள் தவிர்க்கப்படும்.
* தரகர் தேவையில்லை.
முகவரி: இல 66, புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.
தொ ர்பு: 024 2220112 (24362) (6.7.4)

**உழவு இயந்திரம் விற்பனைக்கு**

மெசி பேர்குசன்-135 DL
No. NTRD 2234
தொ ர்பு: 0777 111 249,
07 11995 991. (26776) (6.7.4)

**வாகனம் விற்பனைக்கு**

1) கார் - Mitsubishi Lancer GLX, Brand new, A/C Alloy wheel, விலை-14.5 லட்சம்.
2) மோட்டார் சைக்கிள் - CD 200, Road master, சிவப்பு (English number).
தொ ர்பு:
0777361862, 0775067277 (25555)(6.11)

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

ஜோண் கல்வி நிலையம்
முல்லை வீதி, புதுக்குடியிருப்பு.
தரம் - 02 தொ க்கம் தரம்-11 மற்றும் (A/L) - கலைப்பிரிவு
காலம் - 20.12.2012
வியாழன்- பி.ப 3.00 மணி
நிர்வாகி. (26680)(6.7.4)

## கண்ணீர் அஞ்சலி



**தம்பையா சண்முகநாதன்**

(துணுக்காய் பிரதேச மூத்த கிராம அலுவலர்)

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லிங்கோ பொறியியல் நிறுவனம், கிளிநொச்சி. (26789)(6.7.4)

காசிலிங்கம்(அண்ணா), ராணி(மச்சாள்), பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**தம்பாபிள்ளை செல்லத்துரை**

(திதி: 15. 12. 2012)

தோற்றம் 06.03.1942

மறைவு 08.12.2010

அன்பிற்கு அணி சேர்த்து
பண்புடனே பவனி வந்து
பாசமுடன் உமை வழி நடத்தி
பார்த்திருந்த பாசமுகம்
காணாமல் ஏங்குகின்றோம்
அப்பா! உங்கள் பிரிவுத்துயர்
தாங்காமல் தவிக்கின்றோம்!
இறைவனிடம் சாந்திபெற
அனுதினமும் வேண்டுகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

கற்குழி வடக்கு, சாவகச்சேரி.
077 6412 839

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை முன்னாள் சிரேஷ்ட ஆசிரியை
திருமதி இந்திராதேவி சிவகுருநாதன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **கிருஷ்ணன் லஷ்சுமி**
அவர்கள் கடந்த (15.11.2012) அன்று சிவப்பேறு எய்தியதற்கு அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு இந்நாளில் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/ கைதடி சேதுகாவலர்வித்தியாலயம், கைதடி மத்தி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 10 * 04 * 1935

மறைவு 15 * 11 * 2012

**திருமதி இலட்சுமி கிருஷ்ணன்**

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து அன்போடும் பண்போடும் பாசத்தோடும் எம்மைப் பாதுகாத்து வழி நடத்தி வாழ வழி செய்து இன்று எம்மைப் பரிதவிக்க விட்டுச் சென்று நாள்கள் முப்பத்தொன்று ஆனதே அம்மா ஆற முடியவில்லை உங்கள் பிரிவுத்துயரம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கைதடி மத்தி, கைதடி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை கடற்படை முகாமுக்குள் புகுந்தது காட்டு யானை

திருகோணமலை கிழக்கு கடற்படை முகாமுக்குள் காட்டு யானையொன்று புகுந்துள்ளது. இந்த யானை யைப் பிடிப்பதற்கான முயற் சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

கடலைக் கடந்து குறித்த முகாமுக்குள் யானை புகுந் துள்ள தாகவும் இதனைப் பிடித்து காட்டுக்குள் விடுவ தற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் வன விலங்குப் பாதுகாப்பு பிரிவு அதிகாரி எம். சுரேஸ் குமார் தெரி வித்தார். (வ)

## பாராட்டுக்கு உரியவர்



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையில் உதவிச் செயலாளராக எட்டு வருடங்கள் தொடர்ச்சியாக பணியாற்றி செயலாளரின் பணிக்கு பல்வேறு வகையிலும் ஒத்துழைப்பு வழங்கும்

**திரு. பொன்னையா தெய்வேந்திரர்**

தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமை எமக்கு பெருமை தருகிறது. இவர் அஞ்சல் திணைக்களத்தில் கடைசியாக சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றிய போது சேதமடைந்த நிலையில் காணப்பட்ட அஞ்சல் அலுவலகத்தை புனரமைத்ததுடன் நிலைய வளாகத்துக்கு சுற்றுமதில் நிர்மாணித்து அஞ்சல் சேவையினை விஸ்தரித்தார். தென்மராட்சி பிரதேசத்தில் பல்வேறு அமைப்புக்களில் உறுப்பினராகவிருந்து பிரதேச வளர்ச்சிக்கு பாடுபடுபவர். கடமை உணர்வுடன் கண்டிப்பும் மிக்க இவரது பணிகள், சேவைகள் மேன்மேலும் தொடர்வதாக.

டாக்டர் ச. அம்பிகைபாகன்
**ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி.**

(சி/2847)(5.7.8)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வித்தகக் கலைஞர் மாணிக்கம் அனந்தராசன் (J.P)**



இன்று (15.12.2012) சனிக்கிழமை கொழும்பு யோண்டீ சில்வா அரங்கில் நாடகத்துறைக்காக "கலாபூஷணம்" விருது பெறும் எமது நாடக மன்றத் தலைவரும், நாடகக் கலைஞரும், பாடகரும், ஆர்மோனியக்கலைஞரும், அண்ணாவியாரும், சமூக சேவையாளருமாகிய **மாணிக்கம் அனந்தராசன்** அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று கலைத்துறைக்கு சேவையாற்ற அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையாரின் ஆசியுடன் சிறப்போடு வாழ வாழ்த்துகின்றோம்.

(25560)(6.11)

கவிஞர் செல்லையா வீதி,
அல்வாய்.

**கவிஞர் நாடக மன்றம்.**

## குத்தகை ஏலத்தில் விடல் -2013
## கரைச்சிப் பிரதேச சபை -கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் காணும் அட்டவணையில் காட்டப் பட்ட இறைச்சிக் கடை நிலையங்களை 2013ஆம் ஆண்டுக்கு ஏலத்தில் விடுவதற்கு, கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய ஏலம் கோரப்படுகின்றது.

ஏலம் விடப்படும் திகதி: 21.12.2012 மு.ப. 10.30 மணி

ஏலம் விடப்படும் இடம்: கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம்

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) |
|---|---|---|
| மாட்டிறைச்சிக் கடைப் பெயர் | | |
| 1 | கல்லாறு | 10,000.00 |
| 2 | ஸ்கந்தபுரம் | 20,000.00 |
| 3 | ஜெயந்திநகர் | 10,000.00 |
| 4 | கண்டாவளை | 10,000.00 |
| 5 | தர்மபுரம் | 10,000.00 |
| 6 | கிளிநொச்சி | 40,000.00 |
| 7 | உருத்திரபுரம் D/8 | 10,000.00 |
| கோழி இறைச்சிக் கடை | | |
| 1 | இரணைமடு | 10,000.00 |
| 2 | கிளிநொச்சி இல -02 | 40,000.00 |
| 3 | பரந்தன் | 10,000.00 |
| 4 | கிளிநொச்சி இல -01 | 40,000.00 |
| ஆட்டிறைச்சிக் கடை | | |
| 1 | கிளிநொச்சி | 10,000.00 |
| 2 | பரந்தன் | 10,000.00 |

நிபந்தனைகள்

1. ஏலத்தில் பங்குபற்றுபவர் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணமும் அதன் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
2. ஏலத்தில் வைப்புப் பணத்தை செலுத்திய பின்னரே ஏலத்தில் பங்குபற்ற முடியும்.
3. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் ஏலத்தில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்
4. ஏலத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்ப தற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
5. சித்தியடையும் கேள்விதாரர் கோள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். தவறின் அவரின் பெயர் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்படுவதுடன் ஏல வைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டா.
6. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் காலம் முதல் கடையை நடத்த முடியும்
7. மேலதிக விவரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திலிங்கம் குகராசா
தவிசாளர், கரைச்சிப் பிரதேசசபை,கிளிநொச்சி.

(சி/2187)(5-6-7)


யாழ்ப்பாணத்தில் கல்வி, மலேசியாவில் வருமான வாய்ப்பு
Study in Jaffna, Earn in Malaysia

UK பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா
UK Degree & Diploma Program

09 Months Internship Training in Star Class Hotels - Monthly allowance USD 250

Creative Multimedia | Hospitality Management | Computer System

O level / A level → Scheme A: 03 Months in Jaffna, 09 Months in Malaysia (Study & Earn in Malaysia); Scheme B: 12 Months in Malaysia (Study & Earn in Malaysia)

Malaysian Skills Certificate
- Level 1&2 - Food & Beverage
- Level 2&3 - Creative Multimedia
- Level 2&3 - Computer System

- Malaysian Skills Certificate -
- Testimonial Letter from Employer -

Spot Admission!
In Tilko Jaffna City Hotel
(Beside Jaffna Main Post Office)

O level / A level → Scheme C: 18 Months in Malaysia (Malaysian Skills Certificate); Scheme D: 18 Months in Jaffna (Malaysian Skills Certificate)

- Malaysian Skills Certificate -
- Testimonial Letter from Employer -
- Higher Diploma, UK -

UK Degree Program



Benefits:
- Global Recognition
- Industrial Recognition
- Career Pathway to International Universities
- Hands-on Experience

Certification by:
Malaysian Skills Department
(Ministry of Human Resources Malaysia)



Benefits:
- Global Recognition
- Pathway to British Degree
- Short Term Higher Qualification

Certification by:
Malaysian Skills Department
(Ministry of Human Resources Malaysia)
& South Essex College, UK
(British Government College)

03 Months / 03 மாதங்கள்
SG Academy in Jaffna / ஜவனா SG அகாடமியில்



09 Months / 09 மாதங்கள்
SG Academy in Malaysia / மலேசியா SG அகாடமியில்



யாழ்ப்பாணத்தில் படிக்க பெறும் வாய்ப்பு
மற்றும் UKயில் பட்டப்படிப்பு தொடரலாம்



South Essex College, UK

SG Academy SkillsMalaysia INVITE
www.sgacademy.com.my

Contact us at 0773124405 / 0713618782
+6012-2077466 (Malaysia)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் ஏற்றுமதிக்கு சவாலாகவுள்ள இலங்கை

## இந்திய ஏற்றுமதியாளர்கள் கவலை

சென்னை,டிசெ.15

இந்தியாவின் தேங்காய் ஏற்றுமதிக்கு இலங்கையே சவாலாக இருந்து வருவதாக இந்திய ஏற்றுமதியாளர்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் வரை யிலான 7 மாதங்களில் தேங்காய் ஏற்றுமதி 50 வீத வளர்ச்சியைத் தொட்டிருக்கிறது. குறிப்பாக வளை குடாநாடுகளில் இந்தியத் தேங்காய்க்கு அதிக விலை கிடைக்கிறது.

பெரிய தேங்காய் ஒன்று 10 ரூபாவுக்குப் பெறப்பட்டு அந்தநாடுகளில் ரூ13.50 வரை விற்கப்படுகிறது.



ஏற்றுமதியாகும் தேங்காயில் கணிசமான அளவு தமிழகத்தில் இருந்தே அனுப்பப்படுகிறது

இந்தநிலையில் இந்தியாவின் தேங்காய் ஏற்றுமதிக்குச் சவாலாக இலங்கை உருவெடுத்திருக்கிறது.

தேங்காய் ஏற்றுமதியில் இலங்கை முன்னணி வகித்து வந்தது.

ஆனால் அந்தநாட்டில் உள்நாட்டுத் தேவை அதிகரித்ததால் தேங்காய் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு இது சாதகமாக இருந்து வந்தது.

தற்போது இலங்கையில் தடை நீக்கப்பட் டுள்ளதுடன், இந்தியாவை விட குறைந்த விலையில் ஏற்றுமதி செய்து பெரும் நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது என்கின்றனர் இந்திய ஏற்றுமதியாளர்கள். (வ)

# சாதாரண தரப் பரீட்சை குறித்த முறைகேடுகளை முறையிடலாம்

## 1911 என்னும் இலக்கம் 24 மணி நேரமும் செயற்படும்

நடைபெற்றுவரும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை தொடர்பான முறைப்பாடுகள் ஏதும் இருப்பின் அதுபற்றி கூடிய விரைவில் பரீட்சைகள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்துமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த முறைப்பாடுகளை ஏற்பது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்தின் 1911 இலக்கத்தைக் கொண்டுள்ள தொலைபேசி 24 மணித்தியாலங்களும் செயற்பாட்டில் இருக்கும் என்று கூறப்பட்டது.

சாதாரண தரப் பரீட்சை சம்பந்தமான ஏதாவதொரு தவறு அல்லது குறைபாடு நிகழுமானால் அது சம்பந்தமாக எந்த நபராலும் முறைப்பாடுகளை முன் வைக்க முடியும்.

அதன் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தின் 1911 தொலைபேசி எண்ணுக்குக் கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகளும் பொலிஸ் தலைமையகத்திடம் கையளிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் சட்ட விதிகளை மீறும் எந்தவொரு நபருக்கும் பரீட்சைகள் சட்டம் மற்றும் சிவில் சட்டத்தின் கீழ் அதிக பட்ச தண்டனைகள் வழங்கப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-22)

# இலங்கையின் அணுத் தொழில் நுட்ப விருத்திக்கு ரஷ்யா உதவி

கொழும்பு, டிசெ.15

இலங்கையில் அணுத் தொழில்நுட்பத்தை விருத்தி செய்ய ரஷ்யா உதவிகளை வழங்கத் தயார் என்று ரஷ்யத் தூதர் அலக்ஸாண்டர் கர்ச்சாவா தெரிவித்தார்.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சக்தி வளப்பயன்பாட்டுக்கு அணுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு ரஷ்யா உதவிகளை வழங்கும் என்று தூதர் உறுதியளித்துள்ளார். (வ)

# தமிழக மீனவர்களை கழிவறைகளை சுத்தம் செய்யப் பணித்த இந்தியப்படை

நாகை, டிசெ.15

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கிச் சித்திரவதை செய்து வரும் நிலையில், தமிழக மீனவர்களை இந்தியக் கடலோரப் படையினரே கழிவறைகளை சுத்தம் செய்யச் சொன்ன சம்பவம் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 40 பேரும் நேற்று முன்தினம் கரைக்குத் திரும்பினர். தங்களை இலங்கைக் கடற்படையினர் அரை நிர்வாணமாக்கி அடித்து சித்திரவதை செய்ததாக, கரை திரும்பிய அவர்கள் கண்ணீருடன் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலையிலும் தாக்கப்பட்டதோடு நீதிமன்றத்துக்கு



அழைத்துச் சென்ற போதும், சங்கிலியால் தங்களைக் கட்டி இழுத்துச் சென்றதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இது ஒருபுறம் இருக்க இந்தியக் கடலோரக் காவல் படையினரும் தமிழக மீனவர்களை அழைத்து வரும் போது, கழிவறை மற்றும் கப்பல் கண்ணாடிகளை சுத்தம் செய்யுமாறு பணித்ததாக மீனவர்கள் கூறியுள்ளனர்.

நாகை மற்றும் காரைக்கால் மாவட்டங்களைச் சேர்ந்த 40 மீனவர்கள் கடந்த 2 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற போது இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டனர். எல்லை தாண்டி அவர்கள் மீன்பிடித்ததாக கூறி சிறையில் அடைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# வல்லிபுர ஆழ்வாருக்கு திருவனந்தல் பூசைகள்

வடமராட்சி,டிசெ.15

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் திருவனந்தல் பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து 30 தினங்கள் நடைபெறவுள்ளன.

மார்கழி மாதத்தில் நடைபெறும் பாவை நோன்பு என அழைக்கப்படும் திருவனந்தல் பூசைகள் தினமும் அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து திருப்பள்ளி எழுச்சி, திருவனந்தல் பூசை என்பன இடம்பெற்று திருப்பாவை பாடல் ஓதப்படும்.

கோயிலில் பாலஸ்தாபனம் நடைபெற்றுள்ள போதும் மார்கழி மாத பாவை நோன்பு இம்முறையும் வழமை போல இடம் பெறும்.

எனினும் வல்லிபுர ஆழ்வாரின் சக்கரம் வீதி வலம் வருவது மட்டும் இடம் பெறமாட்டாதென அறங்காவலர் சபை தெரிவித்துள்ளது.

மார்கழி தோய்ச்சல் என பேச்சு வழக்கில் அழைக்கப்படும் பாவை நோன்பு திருவனந்தல் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வோர் வல்லிபுரமாயவனின் அருளால் பீடைகள் நீங்கப் பெறுவார்கள்- என்பது ஐதீகம். (3-8)

# இலங்கை கடல் வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவும் பாகிஸ்தான் தீவிரவாதிகள்

புதுடில்லி,டிசெ.15

பாகிஸ்தான் பயங்கர வாதிகள், கடல் வழியாக கேரள மாநிலத்தில், ஊடு ருவ திட்டமிட்டிருப்பதாக வெளியான தகவலைய டுத்து, மத்திய உள்துறை அமைச்சகம், கேரள மாநில அரசை உஷார்படுத்தியுள்ளது. அதனால், கேரள கடற்கரை கிராமங்களை பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

கடந்த சில நாள்களுக்கு முன், இலங்கை கடல் பகுதியில் தனியாக ஒரு மர்மப்படகு நின்றிருந்தது. அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மர்மப்படகை சுற்றி வளைத்து பிடித்தனர். அந்த படகில் ஆறு பேர் இருந்தனர். அவர்களிடம், இலங்கைப்படையினர் விசாரணை நடத்தியபோது, அவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதிகள் என்றும், இந்தியாவுக்குள், கேரள மாநில கடல் வழியாக ஊடுருவ வந்ததாகவும் தெரிவித்தனர். தங்களைப்போல், மற்றொரு கும்பலும் வந்திருப்பதாகவும் கூறினர். இதையடுத்து, பாகிஸ்தான் பயங்கரவாதிகளை, இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். மேலும், இந்தியாவிற்குள், பாகிஸ்தான் பயங்கரவாதிகள், கேரள கடல் பகுதி வழியாக ஊடுருவ திட்டமிட்டுள்ளது குறித்தும், இந்திய உள்துறை அமைச்சகத்திற்கு தகவல் தெரிவித்தனர். (3)

# பொது அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்ட பொருள்கள்

தென்மராட்சி, டிசெ.15

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு பொருள்களை வழங்கினார்.

பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள், மாதர் கிராம அபிவிருத்தச் சங்கங்கள், முன்பள்ளிகள் போன்றவற்றுக்கென கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள், அலுமாரிகள், தையல் இயந்திரங்கள், கணினிகள் உட்பட 7 லட்சம் ரூபா பெறு மதியான பொருள்கள் அந்தந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன. (3-9)

# வானில் தோன்றும் மர்ம ஒளி வியாழனா?

புதுடில்லி,டிசெ.16

கடந்த சில நாள்களாக நாட்டின் பல பாகங்களிலும் வானில் பிரகாசமாகத் தென்படும் மர்மப்பொருள் ஏதாவது பூமியில் விழுந்தால் அவை குறித்து ஆய்வுசெய்ய சுகாதார அமைச்சின் மருத்துவப் பரிசோதனை நிலையம் தீர்மானித்துள்ளது

கடந்த சில நாள்களாக வானில் மர்மப்பொருள் தென்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் பூமியில் விழுந்த அவ்வாறான வான் மர்மப்பொருள்களைக் கண்டால் உடனடியாக பொரளையில் அமைந்துள்ள மருத்துவ பரிசோதனை நிலையத்துக்கு அறியத் தருமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் கண்களுக்கு இரவு வேளைகளில் தென்படும் பிரகாசமான ஒளிர்வு வியாழன் கிரகத்தினுடையது என்று ஆர்தர் சி கிளார்க் நிலையத்தின் விஞ்ஞான ஆராய்ச்சியாளர் சிராஜ் குணசேகர தெரிவித்துள்ளார்.

சிலாபம், இரணவில, தனமல்வில, பண்டாரவளை ஆகிய பிரதேசங்களில் தென்பட்ட ஒளிர்வு தொடர்பான ஒளிநாடா காட்சிகளை ஆய்வு செய்தபோது அந்த ஒளிர்வு வியாழன் கிரகத்தினுடையது



என்ற முடிவுக்கு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வியாழன் கிரகம் மிகவும் பிரகாச ஒளிர்வாக இருக்கின்றது. அதன் காரணமாகவே அதன் ஒளிர்வை எம்மால் பார்க்க முடிகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சர்வதேச [illegible] போது வியாழன் கிரகம் பூமிக்கு மிக அருகில் வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். கடந்த 2ஆம் திகதி பூமிக்கும், வியாழன் கிரகத் திற்கும் இடையிலான தூரம் 609 மில்லியன் கிலோ மீற்றர்களாக இருந்தது.

இதுவே மிக அண்மித்த தூரம். இக்கிரகம் இதன் பின்னர் 2021 ஆம் ஆண்டிலேயே இவ்வாறு நெருங்கி வரும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

விண்கற்கள் செறிவாக இருக்கும் அண்டவெளிப் பாதையில் பூமி பயணம் செய்கின்றமையே இவ்வாறு விண்கற்களை வெற்றுக் கண்களால் பார்க்கக் கூடியதாக இருக்கின்றமைக்குக் காரணம் என வானியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (3)

# தென்மராட்சி மீசாலையில் சுகாதார வார டெங்கு ஒழிப்பு

தென்மராட்சி,டிசெ.15

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சி கிளையினர் தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை மீசாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு செயற் பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கிளையின் பிரதிநிதிகள் தொண்டர்களுடன் பொலிஸார், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் பிரிவில் உள்ள பொது அமைப்புகளின் சமூக முன்னெடுத்தல் குழு ஆகியவை விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

சர்வதேச கெயர் நிறுவன அனுசரணையுடன் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளவுள்ளதாக கிளையின் தலைவர் செ.மகேஸ்வரன் தெரிவித்தார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறிமா வெற்றிக் கிண்ண கிரிக்கெட்

# வடமாகாண அணிக்கு இன்னொரு தோல்வி

யாழ்ப்பாணம், டிசெ.15

பிறிமா வெற்றிக் கிண்ணத்துக்காக 15 வயதுப் பிரிவு மாகாண அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டித் தொடரில் வட மாகாண அணி மற்றொரு தோல்வியைத் தழுவியது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வட மத்திய மாகாண அணியின் ஆட்டத்தில் அனல்பறந்தது. விரைவாக வெற்றியைப் பெற்றுவிட வேண்டும் என்ற துடிப்பில் இலக்கு இழப்புக் குறித்து கவலை கொள்ளாமல் ஓட்டக் குவிப்பில் மாத்திரமே வடமத்திய வீரர்கள் குறியாக இருந்தார்கள்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாத்தளை பேர்னட் அளுத்விகார மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வட மத்திய மாகாண அணியும், வட மாகாண அணியும் ஒன்றையொன்று எதிர்த்தாடின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடியது வட மாகாண அணி. எனினும் கடந்த போட்டிகளில் பெற்ற தோல்விகளில் இருந்து அந்த அணி கற்றுக்கொள்ள தவறியிருந்ததை இந்தப் போட்டியிலும் நிரூபித்தது. வடமாகாண அணி வீரர்களின் கோமிதரனும் ,சர்மாவும் மட்டுமே பொறுப்புடன் துடுப்பெடுத்தாடினார்கள். ஏனைய வீரர்கள் அணியை சரிவில் இருந்து மீட்டெடுக்கத் தவறினர். வடமத்திய மாகாண அணியின் வனித்த வன்னிநாயக்கவின் பந்து வீச்சில் வடமாகாண அணி வீரர்கள் பணிந்து இலக்குகளை பறிகொடுத்தார்கள். இலக்குகள் வீழ்ந்துகொண்டிருந்ததால் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வடமாகாண அணியால் முடியவில்லை. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கோமிதரன் அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பை 7 ஓட்டங்களால் தவறவிட்டார். இந்த நிலையில் வடமாகாண அணி 45 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களையே பெற்றது.

இதில் கோமிதரன் 43, ஓட்டங்களையும் சர்மா 23 ஓட்டங்களையும் நிலோஷன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். ஏனையோர் ஒற்றை இலக்க ஓட்டங்களுக்குள் சுருண்டனர்.

பந்து வீச்சில் வட மத்திய மாகாண அணி சார்பில் சிஹான் டிலிக்க 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், வனித்த வன்னிநாயக்க 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களை கொடுத்து 5 இலக்குகளையும் வீழ்த்தினர்.

136 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வட மத்திய மாகாண அணியின் ஆட்டத்தில் அனல்பறந்தது. விரைவாக வெற்றியைப் பெற்றுவிட வேண்டும் என்ற துடிப்பில் இலக்கு இழப்புக் குறித்து கவலை கொள்ளாமல் ஓட்டக் குவிப்பில் மாத்திரமே வடமத்திய வீரர்கள் குறியாக இருந்தார்கள். இலகுவான வெற்றி இலக்கை நிர்ணயித்ததால் வடமாகாண வீரர்களின் பந்து வீச்சிலும் சோர்வே தென்பட்டது. எனினும் வடமத்திய வீரர்களுக்கு அகீபனின் பந்துவீச்சு நெருக்கடியைக் கொடுத்தது. அதனையும் சமாளித்து 23.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் வடமத்திய மாகாண அணி 3 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. 7 இலக்குகள் வித்தியாசத்தில் இன்னொரு தோல்வியை இந்தத் தொடரில் பெற்றுக் கொண்டது வடமாகாண அணி.

வட்மத்திய அணி சார்பில் துடுப்பாட்டத்தில் ஹனித்த 22 ஓட்டங்களையும், சில்வா 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

வடமாகாண அணியைச் சேர்ந்த அகீபன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், விதுஷன் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் வீழ்த்தினர்.

(ங-23)

# கரப்பந்து, வலைப்பந்து இரண்டிலும் குளவி சுட்டான் செல்வா சம்பியன்

யாழ்ப்பாணம்,டிசெ 15

நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ''சோ-ஆ'' நிறுவனத்தின் வேலை திட்ட கிராமங்களான குளவி சுட்டான், மாறா இலுப்பை, மருதவோடை, வேலங்குளம், பெரியதம்பனை ஆகியவற்றைச் சேர்ந்த விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட, வலைப் பந்தாட்ட இறுதிப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நெடுங்கேணி, குளவிசுட்டான் அ.த.க பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் குளவிசுட்டான் செல்வா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாறா இலுப்பை லோட்டஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் மோதின. முதல் இரண்டு சுற்றுகளையும் மாறி மாறி அவை கைப்பற்றியதால் ஆட்டத்தின் பரபரப்பு இன்னும் அதிகரித்தது. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது சுற்றில் குளவிசுட்டான் செல்வா விளையாட்டுக்கழக அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. வெற்றியைப் பறிகொடுக்கக்கூடாது என்று போராடிய லோட்டஸ் அணியின் எதிர்ப்பையும் மீறி இறுதிச் சுற்றை செல்வா அணி பெற்றுக்கொண்டது. இதனால் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை செல்வா அணி தனதாக்கிக் கொண்டது. இதில் சிறந்த வீரனாக மாறாஇலுப்பை லோட்டஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் பி. இராமேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து பெண்களுக்கான வலைப் பந்தாட்ட இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் குளவி சுட்டான் செல்வா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வேலங்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இதில் குளவி சுட்டான் செல்வா விளையாட்டுக்கழக வீராங்கனைகளின் துடிப்பான ஆட்டத்துக்கு முன்னால் வேலங்குளம் சித்திவிநாயகர் வீராங்கனைகளால் ஈடுகொடுக்க முடியவில்லை. போட்டியின் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை செல்வா அணியின் கையே ஓங்கியிருந்தது. இறுதியில் குளவிசுட்டான் செல்வா விளையாட்டுக் கழகம் 9:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இறுதியாட்டத்தில் சிறந்த வீராங்கனையாக குளவி சுட்டான் செல்வா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.தனுசியா தெரிவு செய்யப்பட்டார். (ங-23)

## வவுனியா வடதாரகை வாகை

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் வீரர்களான சாந்தன்,யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காவும் நடத்தப்பட்டுவரும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரில் வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் வடதாரகை அணி வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் வட தாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்-இக்பால் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

மைதானம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் பரபரப்புடன் நடைபெற்றது இந்தப் போட்டி. இரு அணிகளும் வெற்றியைத் தம் வசமாக்குவதற்காகக் கடுமையாகப் போராடின. இரு அணிகளினதும் முன்கள, பின்கள வீரர்கள் தமது பணிகளை சிறப்பாகச் செய்தனர். போட்டியின் முடிவில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வடதாரகை விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில் அல்-இக்பால் அணியை வீழ்த்தி வெற்றியீட்டியது.

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.15

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**மாலை 6 மணி**

அல்-ஹிஜ்ரா விளையாட்டுக் கழகம் எதிர் யங்ஸ்ரார் 'பி' விளையாட்டுக் கழகம்

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆதி சக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள முதலாவது காலிறுதியாட்டத்தில் மோதவுள்ள அணியின் விவரம் வருமாறு-

**மாலை 4 மணி**

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்

★ ★ ★

கிளிநொச்சி, முல்லைத்தீவு , யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ''சோ-ஆ'' நிறுவனத்தின் வேலைத்திட்ட கிராமங்களைச் சேர்ந்த விளையாட்டு கழகங்களுக்கிடையிலான 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இரணைப்பாலை சென். அன்ரனிஸ் வியைாட்டுக்கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

கிளிநொச்சி மகாதீபம் விளையாட்டுக்கழகம் நடத்தும் '20/20' முக்கோணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தத் தொடரில் இன்றைய ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்

**காலை 8.30 மணி**

மத்திய தீரர் விளையாட்டுக்கழகம் எதிர் மகாதீபம் விளையாட்டுக்கழகம்

**மதியம் 1.மணி**

நீயூஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் மகாதீபம் விளையாட்டுக்கழகம் (23)

## நல்லூரை வென்ற உடுவில்

வலி.வடக்கு,டிசெ 15

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி. தெற்கு பிரதேச சபை யாழ்.மாவட்ட உள்ளூராட்சி அமைப்புகளுக்கு இடையே நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் உடுவில் பிரதேச சபை வெற்றி பெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற இந்த ஆட்டத்தில் உடுவில் பிரதேச சபையும் நல்லூர் பிரதேச சபையும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் பிரதேச சபை 12பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஹரி 67 ஓட்டங்களையும், விஜிதரன் 35 ஓட்டங்களையும், டபீசன் 30 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.பந்து வீச்சில் நல்லூர் பிரதேச சபை அணி சார்பில் சதீசன் 41 ஓட்டங்ககளைக் கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச சபை அணி 11.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும்இழந்து 105 ஓட்டங்களையே பெற்றது. இதனால் 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நல்லூர் பிரதேச சபையை உடுவில் வென்றது.

இதில் வசந்தன் 64 ஓட்டங்களையும்,சதீஸ் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் உடுவில் பிரதேச சபை அணி சார்பில் ஸ்ரீகரன், கிரி விஜிதரன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (ங-86)



[illegible] வடமாகாண அமைச்சுகளுக்கிடையே இடம்பெற்ற கரம் சுற்றுப் போட்டி [illegible] முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட உள்ளூராட்சி அமைச்சு அணியின் வீரர்கள் வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரையுடன். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆஸி. அசத்தல் ஆரம்பம்



ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று ஆரம்பமானது. நேற்றைய முதல் நாளில் ஆஸ்திரேலிய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஹோபார்ட்டில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மனித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி முதல் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முதலாவது இலக்குக்காக எட் கோவனை 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதே இழந்த ஆஸ்திரேலிய அணி, அதன் பின்னர் இரண்டாவது இலக்குக்காக 79 ஓட்டங்களைப் பகிர்ந்தது.

ஆஸ்திரேலிய அணி ஒரு கட்டத்தில் 4 இலக்குகளை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இந்த ஆட்டத்தில் இலங்கை அணி தனது ஆதிக்கத்தை அதிகரித்துக் கொள்ளும் வாய்ப்புக் காணப்பட்ட போதிலும், மைக்கல் கிளார்க், மைக்கல் ஹசி இருவரும் 5 ஆவது இலக்குக்காக பிரிக்கப்படாத 101 ஓட்டங்களைப் பகிர்ந்து ஆஸ்திரேலிய அணியின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தினர்.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பிலிப் ஹியூஸ் 86 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும், டேவிட் வோணர் 57 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும், ஷேன் வொற்சன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சானக வெலகெதர 3 இலக்குகளைக் கைப்பற்றினார். டேவிட் வோணர் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்திருந்தார். (5)

ஆஸ்திரேலிய அணி சார்பாக பிலிப் ஹியூஸ் 86 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும், டேவிட் வோணர் 57 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும், ஷேன் வொற்சன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

# உடையும் மர்மங்கள்

தேர்வுக்குழுவின் முடிவில் பி.சி.சி.ஐ., தலைவர் சீனிவாசன் தலையிட்டதால் தான், டோனியின் தலைமைப் பதவி நீடிக்கிறது என்று முன்னாள் தேர்வுக்குழு உறுப்பினர் மொகிந்தர் அமர்நாத் உண்மையை போட்டு உடைத்தார்.

கடந்த ஆண்டு ஆஸ்திரேலியா, இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை இழந்த போது, டோனியை தலைமைப் பதவியில் இருந்து நீக்க முயற்சிகள் நடந்தன. இதற்கு தேர்வுக்குழுவினரும் ஆதரவு தெரிவித்தனர். கடைசியில், சில உள் விவகாரத்தால், அது முடியாமல் போனது. இந்தக் காரணத்தை தற்போது வெளியே கூற விரும்பவில்லை. சரியான நேரம் வரும் போது வெளிப்படுத்துவேன், என்ருர்.

தற்போது உண்மையை போட்டு உடைத்த அமர்நாத் கூறியதாவது: டெஸ்ட் போட்டியில் கண்ட தொடர் தோல்விக்கு பின், தலைமைப் பதவியில் இருந்து டோனியை நீக்க தேர்வுக்குழுவினர் அனைவரும் ஒருமனதாக முடிவு செய்தோம். ஆனால் பி.சி.சி.ஐ. தலைவர் சீனிவாசன் அனுமதி அளிக்காததால், அது தடைப்பட்டது. தனிநபர் மட்டுமே எடுக்கும் இறுதி முடிவுக்கு, தேர்வுக்குழு தேவையில்லை. பி.சி.சி.ஐ.யின் சட்ட விதிமுறைகள் எனக்கு புரியவில்லை. இது, தற்போதுள்ள தேர்வுக்குழுவினருக்கு தெரியுமா எனவும் தெரியவில்லை.

அப்போது ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்பு ஒருநாள் தொடருக்கு, 17 பேர் கொண்ட அணியை தேர்வு செய்தோம். தலைவர் யார் என்பதை ஒரு தனிநபர் மட்டுமே முடிவு செய்தார். இந்திய அணியின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, முத்தரப்பு தொடருக்கு இளம் வீரரை அணித்தலைவராக நியமிக்க முடிவு செய்தோம். அது நடக்கவில்லை.

ஐ.பி.எல்., தொடரில், சீனிவாசனின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு டோனி தலைவராக இருப்பதால் தான், சர்வதேச போட்டிக்கும் தலைவராக நீடிக்கிருர் எனக் கூற முடியாது. இது தனிப்பட்ட விஷயம். இது குறித்து கருத்து கூற கூடாது - என்றார்.

பி.சி.சி.ஐ. மறுப்பு

அமர்நாத் கருத்துக்கு மறுப்பு தெரிவித்து, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், அணித் தேர்வில் தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. தனிநபர் தலையீடு இருப்பது உண்மைக்கு புறம்பானது. அமர்நாத் கூறியதை ஏற்க முடியாது. அவர் கூறிய கருத்துக்கு, அப்போதைய தேர்வுக்குழுவில் இருந்த யாரும் ஆதரவு தெரிவிக்கவில்லை.என்றார். (5)

# இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் ஆட்டம்



இங்கிலாந்து அணி போராடிப் பெற்றுக் கொண்ட 330 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடி வரும் இந்திய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த தவறியது. நேற்றைய இரண்டாம் நாள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களை இந்திய அணி பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான நான்கு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமானது. நாக்பூரில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாம் நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மற் பிரயர் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்த இணை நேற்றும் மிகச் சிறப்பான ஆட்டத்தை தொடர இங்கிலாந்து அணி வலுவான இலக்கை நோக்கி நகர்ந்தது. மற் பிரயர் தனது 24 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து சிறிது நேரத்திலேயே அஸ்வின் சுழலில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த பிறஸ்னன் ஓட்டமெதனையும் பெறாது வெளியேறிய போதும், சுவான், ரூடுடன் இணைந்து 8 ஆவது இலக்குக்கு மிகச் சிறந்த இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினார்.

ரூட் அறிமுக ஆட்டத்திலேயே கன்னி அரைச் சதம் அடித்து அசத்தினார். மறுமுனையில் சுவானும் 5 ஆவது சர்வதேச டெஸ்ட் அரைச் சதம் அடிக்க இங்கிலாந்து 300 ஓட்டங்களைத் தாண்டியது. அதன் பின்னர் ரூட் 73, சுவான் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்தின் முதலாவது இன்னிங்ஸ் 330 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

பதிலளித்து ஆட கம்பீர் - சேவாக் ஜோடி களமிறங்கியது. முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே சேவாக் ஓட்டமெதனையும் பெருது அண்டர்சன் பந்து வீச்சில் போல்டானார். தொடர்ந்து நுழைந்த புஜாரா, கம்பீருடன் இணைந்து சிறப்பாக ஆட இந்திய அணி மீண்டது. இந்த இணையின் இணைப்பாட்டமும் 58 ஓட்டங்களுடன் பிரிக்கப்பட்டது. புஜாரா 26 ஓட்டங்களுடன் சுவானின் சுழலில் சிக்கினார். சச்சின் தொடர்ந்து களமிறங்கினார். வழமை போன்று 2 ஓட்டங்களுடன் அண்டர்சன் பந்தில் கிளீன் போல்டாகி பவிலியன் திரும்பினார். அதன் பின்னர் கம்பீர் 37 ஓட்டங்களுடன் அண்டர்சனிடம் சரணடைந்தார். அதன் பின்னர் டோனி, ஹோக்லி இணை நேற்றைய நாள் முடிவு வரையில் தடுத்தாடியது.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 4 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் டோனி 8, ஹோக்லி 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
வீடு மற்றும் அலுவலக தளபாடங்கள்

## மாபெரும் ஏலவிற்பனை

நீங்கள் கொள்வனவு செய்யும் பொருள்களுக்கு நீங்களே விலையைத் தீர்மானிக்கும் ஓர் அரிய வாய்ப்பு.

சனி மற்றும் ஞாயிறு தினங்களில்
* பார்வையிடும் நேரம் காலை 09.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை
* ஏலவிற்பனை நேரம்- பி.ப 3.00 மணிதொடக்கம் 6.00 மணிவரை

198, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)
தொடர்பு- 0775552508, 0778314201

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## பணிநிலை வெற்றிடம்

இயக்கச்சியில் அமைந்துள்ள பூச்செடி விற்பனை நிலையத்துக்கு கடின உழைப்பை விரும்பும் பெண்கள் தேவை. தூர இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடம், உணவு வழங்கப்படும். மாதம் 10000 ரூபா சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0779684284

## 2013 ஆம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு இதோ!

2013ஆம் ஆண்டு பயிற்சிப் புத்தகங்களும், சகலவிதமான அப்பியாசக்கொப்பிகளும், 2013 ஆம் ஆண்டு கலண்டர்களும், டயறிகளும் எங்குமே கிடைக்காத விலைக் கழிவுகளில் பெற்றுக் கொள்ளலாம்

- இச் சலுகை டிசெம்பர் 20ஆம் திகதி முதல் ஜனவரி 20ஆம் திகதி வரை மட்டுமே
- கலண்டர்ஸ், டயறிகளுக்கு பிறிண்டிங் வேலைகளும் செய்து தரப்படும்

ஸ்ரீலங்கா புத்தகசாலை
இல.234.கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P .0212222573

(C-2177)(14)

## புதிய முகவரி

ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை - வைர வியாபாரிகள்
இல: 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083, 0714182480

## COMPUTER SALE

HP Computer 3.0 GHZ, 1GB Ram, 80GB HDD, LCD Monitor, DVD Rom, 3L Key, Mouse & PAD, Speaker.

24750/=

FREE

ஒரு வருட உத்தரவாதம்

WEB Cam / Head Phone / Cover / 8GB Pen

St.Antony's.com
187,K.K.S. Road Jaffna.
0212224865 / 0750698608

## PHARMACY இக்கு ஆள் தேவை

வல்வெட்டித்துறையில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள Pharmacyஒன்றிற்கு Pharmacy certificate உடைய ஒருவர் தேவை.
(இருபாலாரும் விரும்பத்தக்கது)

தொடர்பு : 0777865520

(25558)(7.6)

## VACANCY

Vacancy is existing for a post of Confidential Secretary (Female) at a reputed Jaffna Campany. Required qualifications - GCE (A/L), Age limit 22 - 55 years, the applicant should be able to travel abroad.

Add. No. - 4423
C/o Uthayan
No.361, Kasthuriyar Road, Jaffna.

(26806)(3.14)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

2013 புதுவருடத்தை முன்னிட்டு
விசேட கட்டணக் கழிவில் சர்வதேசத் தரங் கொண்ட கற்கை நெறிகள்

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Duration : 2 Months

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள்
Batch I : 07-01-2013
Batch II : 12-01-2013
Batch III : 14-01-2013
Batch IV : 19-01-2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
08★04★1935

உதிர்வு
15★11★2012

திதி: துதியை

திருமதி
நகுலாம்பிகை
நடராசா

எங்களைப் பெற்றெடுத்த - எங்கள்
அன்பு அன்னையே
எங்களை விட்டு எங்கே
சென்றீர்கள் தாயே
நீங்கள் இல்லாத எம் இல்லம்
இருள் சூழ்ந்துவிட்டது அம்மா
வானகத்தில் இருந்து எம்மை
வழி நடத்துங்கள் அம்மா

சுஜன் கொன்ஸ்ரக்ஷன்
205, ஆடிய பாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


## O/L, A/L தகுதியோடு நீங்களும் British Qualified Chartered Engineer / Quantity Surveyor ஆகலாம்

பெற்றோர்கள் / மாணவ, மாணவிகளின் கவனத்திற்கு

பட்டப்படிப்பிற்கு தகுதியில்லை எனக் கவலை வேண்டாம். DIPLOMA/ ADVANCED DIPLOMA தராதரத்தை 1 வருட காலத்திலும் பட்டப்படிப்பு B.Eng(Hons) 1 வருட காலத்திலும் பயின்று நீங்களும் ஒரு CHARTERED ENGINEER ஆகலாம்

City & Guilds
JUNE 2013

CIVIL ENGINEERING
ELECTRICAL & ELECTRONICS
QUANTITY SURVEYING
TELECOMMUNICATION

DEC 18, 19 ம் திகதிகளில் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை அனுமதிகள் வழங்கப்படும். கல்விச்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

- Diploma / Ad. Diploma சித்தியெய்தியதும் வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்
- Diploma முடித்த ஒருவருக்கு ஊதியத்தோடு Industrial Training கொடுக்கப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு: Prof.K. சந்திரபோஸ் 077 3867695

அன்னவாசா, 242, Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். தொ: 021 2241781
www.apsseducation.com
HOTLINE: 077 2306642 | 072 2306642 | 077 3867695


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புதியதோர்
உலகம்
செய்வோம்
-பாரதிதாசன்.

# வார வசந்தம்

01

உதயன் 15 டிசெம்பர் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# ஏன் இந்த மோதல் போக்கு?

**சில வலது சாரி புத்த சமயக் குழுக்கள் சிங்கள பௌத்த தேசியவாதத்தை மேலும் வலுப்படுத்தி நாட்டிலுள்ள ஏனைய சிறுபான்மை சமயங்களைப் பின்பற்றுபவர்களை அழிப்பதை நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன.**



தென்மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரகெட்டிய பிரதேசத்திலுள்ள தேவாலயத்தில் கடந்த ஞாயிறன்று காலைப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த கத்தோலிக்கர்கள் மீது 80 வரையான புத்த பிக்குகளின் தலைமையில் 1000 இற்கு மேற்பட்டவர்கள் காட்டுத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலை மேற்கொள்வதற்கு பொலிஸாரின் அதிகாரம் பயன்படுத்தப்பட்டதுடன், தேவாலய சொத்துக்கள் நாசமாக்கப்பட்டு, அங்கு பிரார்த்தனையை நடத்திக் கொண்டிருந்த போதகர் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கத்தோலிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தத் தேவாலயத்தை ஒரு நாளுக்குள் மூடுமாறு குறித்த தாக்குதலுக்கு தலைமை தாங்கிய புத்த பிக்குகள் எச்சரிக்கை விடுத்திருந்ததாகவும் அறியப்படுகிறது.

இத்தாக்குதலாளிகள் தேவாலயத்துக்குச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், வாகனங்கள் போன்றவற்றுக்கு சேதம் விளைவித்தது மட்டுமல்லாது, இந்தத் தேவாலயத்தின் போதகர் மீதும் தீவிர தாக்குதலை நடத்தியிருந்தனர்.

கற்பாறையின் மூலம் தாக்கப்பட்ட போதகரின் அடிவயிற்றுப் பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறெனினும், தாக்குதலுக்கு உள்ளான போதகரை தொடர்ந்தும் காடையர் குழு கண்காணித்துக் கொண்டிருப்பதால் இவரால் தனது காயத்துக்கு கூட மருத்துவ சிகிச்சை பெறமுடியாத நிலையிலுள்ளதாகக் குறித்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இக்காடைத்தனமான தாக்குதல் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதே. இதில் சேதமடைந்த தேவாலய சொத்துக்கள் கிட்டத்தட்ட 4000 அமெரிக்க டொலர்கள் பெறுமதி மிக்கன என தேவாலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலில் காயமடைந்த இரு பொலிஸார் தேவாலயத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கண்காணிப்பதற்காக கடமையில் நின்றிருந்தனர். இத்தாக்குதலை அடுத்து மேலும் எவ்வித தாக்குதலும் நடத்தப்படுவதைத் தடுப்பதற்காக மேலதிக பொலிஸாரும் இராணுவத்தினரும் சம்பவம் நடந்த இடத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

தாக்குதல் இடம்பெறுவதற்கு முதல்நாள் சில புத்த பிக்குகள் தேவாலய போதகரை சந்தித்து இத் தேவாலயத்தில் வழிபாடு இடம் பெறுவதற்குப் புத்த பிக்குவிடம் அனுமதி வாங்க வேண்டும் என எச்சரித்திருந்தார். இலங்கையின் அரசியல் யாப்பின் பிரகாரம் மதச்சுதந்திரம் காணப்படுவதாக போதகர், குறித்த பிக்குவிடம் பதிலளித்திருந்தார். இந்த அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது தொடர்ந்தும் தேவாலயத்தில் வழிபாடு நடக்குமாயின் தான் தேவாலயத்தை மூடுவேன் அல்லது சேதங்களை விளைவிப்பேன் என அந்த புத்தபிக்கு மீண்டும் போதகரிடம் வலியுறுத்தியிருந்தார்.

தற்போதைய இலங்கையில் கூட்டாட்சி அரசில் புத்த பிக்குகள் பிரதான அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் குற்றங்களைப் புரிகின்றனர். இது மட்டும் தனிப்பட்ட ஒரு சம்பவமல்ல. கத்தோலிக்கர்களுக்கு எதிராக புத்த பிக்குகளின் தலைமையில் 50ற்கும் மேற்பட்ட மீறல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன'' எனவும் தகவல் தந்த வட்டாரம் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாண்டு ஓகஸ்ட் மாதத்தில் தெனியாயவிலும் இவ்வாறான ஒரு. சம்பவமும் இடம்பெற்றிருந்தது. இத்தாக்குதல் சம்பவமானது அதிகாரம் மிக்க அரசியல் அதிகாரிகளின் துணையுடனேயே இடம்பெற்றது.

இலங்கையின் மொத்த சனத் தொகையான 20.4 மில்லியன் மக்களில் 70 சதவீதத்தினர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். இலங்கையில் 8.4 சதவீத கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர். இவர்களில் 40 சதவீதத்தினர் சிறுபான்மைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சில வலது சாரி புத்த சமயக் குழுக்கள் சிங்கள பௌத்த தேசியவாதத்தை மேலும் வலுப்படுத்தி நாட்டிலுள்ள ஏனைய சிறுபான்மை சமயங்களைப் பின்பற்றுபவர்களை அழிப்பதை நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன. இலங்கையின் மத்திய மாகாணத்திலுள்ள நவீன மஹரகமவிலிருக்கும் ராஜ மகா விகாரையில் கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் பௌத்த பலப் படை என்கின்ற அமைப்பால் சிங்கள பௌத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் சிறுபான்மை முஸ்லிம் மற்றும் கத்தோலிக்கர்களிடமிருந்து பௌத்தர்கள் எவ்வாறு மீளெழுச்சி கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

இலங்கையில் வாழும் கத்தோலிக்கர்களின் மத வழிபாடுகளை அழிப்பதை நோக்காகக் கொண்டு புத்த பிக்குகளால் தலைமை தாங்கப்படும் செல்வாக்கு மிக்க அரசியற் கட்சியும், அரசின் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய சட்டம் ஒன்றைப் புகுத்துவதாகக் கொண்டு வருவதற்கான முயற்சியில் கடந்த பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது.

இலங்கையில் செயற்படும் தேவாலயங்களின் செயற்பாடுகள் வரையறுக்கப்பட வேண்டும் என அண்மையில் இந்நாட்டின் மத விவகாரங்களுக்கான அமைச்சு அண்மையில் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. தேவலாயம் என்றால் என்ன என்பதைக் கூட இச்சுற்றறிக்கை வரையறுப்பதற்கான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன'' என தேசிய கத்தோலிக்க சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருநட்சத்திர வெடிப்பும் இவான்ஸின் பிரபஞ்சமும்

- கிருபானந்தம்

ஒரு மனிதர் நம்மால் ஒரு நாள்கூட செய்ய முடியாத காரியத்தை, பார்ப்பதற்கு அலுப்பூட்டுவது போன்றும் எந்தப் பயனும் இல்லாதது போன்றும் நமக்குத் தோன்றும் ஒரு காரியத்தை அவர் தனது வாழ்நாள் முழுக்கச் செய்துகொண்டிருப்பார். அப்புறம் தள்ளி நின்று வரலாற்றில் அவரைப் பற்றிப் படிக்கும்போது நமக்கு வியப்பாக இருக்கும். ஓர் அற்புதமான செயலை அவர் செய்திருக்கிறார் என்று நாம் சொல்லிக்கொள்வோம். இப்படிப்பட்ட மனிதர்களை வரலாறு நெடுகிலும் காண முடியும். ஆனால் நம் காலத்தில் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களா என்று நமக்குத் தெரியாது. உண்மை என்னவென்றால் அப்படிப்பட்டவர்கள் இன்னமும் இருக்கிறார்கள்; தன் வாழ்நாள் முழுவதும் தஸ்தாயெவ்ஸ்கியின் வாழ்க்கை வரலாற்றை எழுதி ஐந்து பாகமாக வெளியிட்ட ஜோசஃப் ஃப்ராங்க், ஒற்றை வைக்கோல் புரட்சியால் புகழ்பெற்ற மசானபு புக்காவோ மற்றும் தன் வாழ்நாளின் பெரும்பாலான இரவுகளை பெருநட்சத்திர வெடிப்புகளை (பெருநட்சத்திர வெடிப்பு -supernova) கண்டறிவதற்காகச் செலவிட்டிருக்கும் ராபர்ட் ஓவன் இவான்ஸ் போன்றோரைச் சொல்லலாம்.கடைசியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் இவான்ஸை எனக்கு பில் ப்ரைசனின் A Short History of Nearly Everything என்ற புத்தகத்தின் மூலம் தெரியும். அறிவியலின் பெரும்பாலான துறைகளைப் பற்றிய அறிமுகத்தைத் தர முயன்றிருக்கும் அந்தப் புத்தகத்தில் இவான்ஸைப் பற்றி ப்ரைசன் எழுதியிருக்கும் சிறு அத்தியாயம்தான் எனக்கு மிகவும் பிடித்த பகுதியும் அந்தப் புத்தகத்தில் இலக்கிய அம்சம் அதிகமாகக் காணக்கிடைக்கும் பகுதியும் ஆகும். இந்தப் புத்தகத்தை எழுதுவதற்காக (அறிவியலை நன்கு அறிந்துகொள்வதற்காகவும்) பில்ப்ரைசன் பல்வேறுபட்ட துறை வல்லுநர்களையும் சென்று சந்திக்கிறார். அவர்களுள் தொழில்முறை சாராத வானியலாளரான இவான்ஸும் ஒருவர். அடிப்படையில் இவான்ஸ் ஒரு பாதிரியார். ஆனால் அவரது வாழ்க்கையின் பெரும் பகுதியை ஆக்கிரமித்திருக்கும் விஷயம் என்ன தெரியுமா. இரவு நேரத்தில் பெருநட்சத்திர வெடிப்பைத் தேடி நடத்தும் வேட்டை தான்.

அது என்ன பெருநட்சத்திர வெடிப்பு? சூரியனை விட பல மடங்கு பெரிதாக உள்ள ஒரு நட்சத்திரம் தன் ஆயுளின் முடிவில் மிகமிகப் பிரமாண்டமான அளவில் வெடித்துச் சிதறி அணைந்துபோவதுதான் பெருநட்சத்திர வெடிப்பு. இந்தப் பெருநட்சத்திர வெடிப்பு நமது சூரிய குடும்பத்துக்கு அருகில் நடக்கும் விஷயமல்ல. (வானியலைப் பொறுத்தவரை அருகில் என்ற சொல்லுக்கே பல கோடி மைல்கள் தூரத்தில் என்று அர்த்தம் என்றால் தொலைவில் என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் இருக்கக்கூடும் என்று யோசித்துப் பாருங்கள்!) ஏனெனில் பெரிய அளவிலான வெடிப்பை நிகழ்த்தக்கூடிய நட்சத்திரங்கள் நமக்கு அருகில் இல்லை; அப்படி நிகழ்ந்தால் சூரியக் குடும்பத்தோடு நாம் கைலாசம்தான் (புது மரபுத்தொடர், குறித்து வைத்துக் கொள்ளுங்கள்). ஆனால் கற்பனையே செய்துபார்க்க முடியாத தூரத்தில் எவ்வளவோ பெரிய நட்சத்திரங்கள் அடிக்கடி வெடித்துக்கொண்டு இருக்கின்றன. அப்படி வெடிக்கும்போது பிரபஞ்ச வெளியில் அவை வாணவேடிக்கை நிகழ்த்துகின்றன. அப்படிப்பட்ட பெருநட்சத்திர வெடிப்புகளை (தொலைநோக்கியில்) வேடிக்கைப் பார்ப்பதுதான் இவான்ஸின் பொழுதுபோக்கு, வாழ்க்கை எல்லாம். 42 முறை பெருநட்சத்திர வெடிப்பைப் பார்த்த சாதனையை இவர் புரிந்திருப்பதாக விக்கிபீடியா சொல்கிறது. இவான்ஸ் எப்படியும் மிகப் பெரிய தொலைநோக்கியையும் நல்ல வசதியான வானியல் ஆய்வுக்கூடத்தையும் வைத்திருப்பார் என்ற கற்பனையோடு தான் பிரைசன் இவான்ஸைச் சந்திக்கப் போனார். ஆனால் அங்கு அவருக்குக் காண நேரிட்டது அதிர்ச்சியூட்டும் காட்சியையே. முதுகில் தூக்கிச் செல்லக் கூடிய அளவிலான தொலைநோக்கியைச் சுமந்துகொண்டு இவான்ஸ் பிரைசனைத் தனது பரணுக்கு அழைத்துச் செல்கிறார் (கோளரங்கங்களின் தொலைநோக்கி பொதுவாக எவ்வளவு பெரிதாக இருக்கும் என்பதை நீங்கள் இணையத்தில்--குறிப்பாக நாசா இணையதளத்தில் காணலாம்). அங்கே தட்டுமுட்டுச் சாமான்கள் கிடக்க அவற்றுக்கிடையே ஓர் ஆள் மட்டும் உட்கார்ந்து பார்க்கக்கூடிய இடம். இதைவிட அதிர்ச்சியளிக்கும் விஷயம் என்னவென்றால் அந்த இடத்திலிருந்து பார்க்கக் கிடைக்கும் வானம் மிகச் சிறிய அளவே.

ஆனால் இவான்ஸோ தனக்கு இதுவே போதும், தன்னால் இவ்வளவு சிறிய வானத்திலும் எண்ணற்ற நட்சத்திரக் கூட்டங்களைக் காண முடியும் என்கிறார். அவருக்குக் பார்க்கக் கிடைத்த அந்த சிறிய வானத்தில்தான் பெருநட்சத்திர வெடிப்பு வேட்டையில் அவர் சாதனை புரிந்திருக்கிறார். அது மட்டுமல்லாமல் நாம் நமது தெருவையும் நமது ஊரையும் ஊரிலுள்ள மனிதர்களையும் நன்கு அடையாளம் வைத்திருப்பதுபோல் இவான்ஸ் அண்ட வெளியில் உள்ள நட்சத்திரக் கூட்டங்களையும் நட்சத்திரங்களையும் எளிதில் அடையாளம் கண்டுவிடுவார். வானில் [illegible] அவருக்கு [illegible] அவ்வளவு அத்துப்படி.

42 என்ற எண்ணிக்கை நமக்கு வெகு சாதாரணமாக இருக்கலாம். ஆனால் வானியலாளர்களைப் பொறுத்தவரை இந்த எண் பல கோடிக்குச் சமம். இந்த 42ஐ இவான்ஸ் 42 நாள்களில் பார்த்துவிடவில்லை. கிட்டத்தட்ட 55 வருடங்களின் பெரும்பான்மையான இரவுகளில் நடத்திய வேட்டையின் பலன்தான் இந்த 42. அப்படியென்றால் எவ்வளவு நேரம் வானத்தை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்திருப்பார் இவான்ஸ். பெருநட்சத்திர வெடிப்பின் காட்சி என்பது அவருக்கு உறுதியளிக்கப்பட்ட ஒன்றல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மிகக் குறைந்த கால அளவில் அடுத்தடுத்து சில பெருநட்சத்திர வெடிப்புகளைப் பார்க்க நேரிட்ட அனுபவத்தைப் போலவே மாதக் கணக்கில் வானத்தைத் துழாவியும் பெருநட்சத்திர வெடிப்பு இவான்ஸின் கண்ணில் படாமல் போன அனுபவமும் நிறைய உண்டு.

இதனால் என்ன பயன், இப்போதுதான் தானியங்கி-தொழில்நுட்பக் கருவிகளை வைத்து வானில் ஏற்படும் சிறு அசைவையும் படம்பிடிக்கும் வசதி வந்துவிட்டதே என்று கேட்கும் பிரைசனிடம் இவான்ஸ், லட்சக்கணக்கான வருடங்கள் அண்ட வெளி வழியாகப் பயணம் செய்து பூமியை வந்து சேரும் ஒளியை அது பூமியை வந்தடையும் அந்தச் சரியான சமயத்தில் வானின் சரியான இடத்தில் யாரோ ஒருவர் பார்க்க நேரிடுகிறது என்பதை நினைத்துப் பார்க்கவே ஏதோ ஒரு திருப்தி ஏற்படுகிறது. இதுபோன்ற ஒரு பிரமாண்டத்தை உடைய ஒரு நிகழ்வானது யாராவது ஒருவரால் பார்க்கப்படுவதே பொருத்தமானது என்றும் தோன்றுகிறது என்கிறார். மேலும் பெருநட்சத்திர வெடிப்பைக் கண்ணால் பார்ப்பதில் உள்ள ரொமான்ஸ் சாதனங்களை வைத்துப் பதிவுசெய்வதில் இல்லை என்கிறார் இவான்ஸ்.

நம்மை நோக்கி எவ்வளவோ ஒளி வந்துகொண்டுதான் இருக்கிறது. எத்தனையோ லட்சம் ஆண்டுகளுக்குமுன் இறந்து போன (அதாவது அணைந்து போன) நட்சத்திரத்தை அது இப்போது இருப்பதாக எண்ணிக்கொண்டு நாம் எவ்வளவு அழகாக அந்த நட்சத்திரம் மின்னுகிறது பார் என்று சொல்கிறோம். அதற்கு மேல் ஒன்றும் இல்லை. ஆனால் இவான்ஸைப் பொறுத்தவரை ஒளிக்கு அர்த்தமே வேறு; அது நட்சத்திரத்தைக் குறிப்பதைவிட அதிகமாக நட்சத்திரத்தின் இறப்பைக் குறிக்கிறது.

---

# அடி மேல் அடி விழுந்தால்....

என்.கணேசன்.



நீங்கள் சாமானியர்கள் அல்ல. எல்லையற்ற பிரபஞ்சத்தின் வீரியமான ஓர் அங்கம்

துரதிர்ஷ்டம் தனியாக வருவதில்லை. சில நேரங்களில் படையாக சேர்ந்து வந்து தாக்குகின்றன. பல முனைத் தாக்குதல் வரும் போது, இதற்கெல்லாம் தீர்வு ஒன்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியாத போது மனிதன் உடைந்து போவது இயல்பே.

இந்தச் சந்தர்ப்பங்களில் 'குடி' போன்ற தற்காலிக மறதிக்கான வழிகளை சிலர் நாடி அதை நியாயப்படுத்துவதும் உண்டு. ஒருசிலர் வாழ்க்கையை முடித்துக் கொண்டு நிரந்தரத் தீர்வு காண முனைவதும் உண்டு.

அப்படி தற்கொலை முடித்தவர் தான் "பக்மினிஸ்டர் புல்லர்" என்ற மேலை நாட்டுக்காரர். 32 வயதில் திவாலாகி வாழ்வில் எல்லா நம்பிக்கையும் இழந்து, ஒரு டிசம்பர் இரவில் கொட்டும் பனியில், லேக் மிச்சிகன் என்ற பரந்த நீர்நிலையில் குதித்து தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ள எண்ணி வந்தார். அந்தத் தண்ணீரில் குதிக்க முற்பட்டவர் அதில் பிரதிபலித்த நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தைப் பார்த்தார். அந்த அழகு அவர் மனதை அசைக்க அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தார்.

கொட்டும் பனி, மின்னும் நட்சத்திரம், பரந்த வானம் எல்லாம் கண்ட போது பிரபஞ்சத்தின் எல்லையில்லாத அமைதியான பேரழகில் ஒரு கணம் அவர் மனம் லயித்தது. அந்த நேரத்தில் பிரபஞ்சம் அவருக்கு ஒரு செய்தியைச் சொன்னதாக அவர் உணர்ந்தார். உன் உயிரை மாய்த்துக் கொள்ள உனக்கு உரிமை இல்லை. நீ உன்னுடையவன் அல்ல. என்னுடையவன்.

தன்னைப் பிரபஞ்சத்தின் அங்கமாக உணர்ந்த அந்தக் கணம் அவர் வாழ்வின் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. புதிய வாழ்க்கையை ஆரம்பித்தார். வயது முதிர்ந்து அவர் இறந்த போது அவருக்கு கணித மேதை, பொறியாளர், கவிஞர், கட்டடக்கலை நிபுணர் என்ற பல அடைமொழிகளும், கண்டுபிடிப்புகளுக்கு உரிமையாளர் என்ற புகழும் இருந்தது.

32 வயதில் அவசரத்து [illegible] முற்பட்ட தாய் நினைத்து வாழ்க்கையை முடித்துக் கொள்ள முற்பட்ட மனிதர் அன்று இறந்திருப்பாரானால் இன்று அவரை யாரும் நினைவில் வைத்துக் கொண்டிருக்க சாத்தியமில்லை.

வாழ்க்கையில் பின் வாங்குபவர்கள் என்றுமே வாழ்ந்த சுவடில்லாமல் போய் விடுகிறார்கள். எனவே என்றுமே பின்வாங்காதீர்கள். அடி மேல் அடி விழும் போது, எல்லாமே முடிந்து விட்டது என்று தோன்றும் போது, இனி என்ன இருக்கிறது என்ற விரக்தி வரும் போது பக்மினிஸ்டர் புல்லருக்குப் பிரபஞ்சம் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள்.

ஓர் ஆங்கிலக் கவி அழகாய்ச் சொன்னார்.

When you get into a tight place and everything goes against you,
until it seems as though you cannot hang on a minute longer,
never give up then, for that is just the place and time that the tide will turn.

(ஓர் இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொள்ளும் போது, எல்லாமே உனக்கு எதிராக மாறும் போது, இனி ஒரு நிமிடம் கூடத் தாக்குப் பிடிக்க முடியாது என்று தோன்றும் அந்த முக்கிய தருணத்தில் கண்டிப்பாக தோல்வியை ஒப்புக் கொண்டு பின்வாங்கி விடாதே. ஏனென்றால் அந்த இடத்தில் அந்தத் தருணத்தில் தான் அலை உன் பக்கமாக திரும்பப் போகிறது)

எல்லாமே முடிந்து விட்டது என்று நினைப்பதே ஒரு தனிப்பட்ட கருத்து தான். அந்த தனிப்பட்ட கருத்தும் கூட அடிமேல் அடி வாங்கி நொந்து இருக்கும் பலவீனமான நேரத்தில் பிறக்கும் பொய்யான கருத்து. அது பிரபஞ்ச உண்மை அல்ல.

பலவீனமான நேரங்களில் தீர்மானங்களை எடுக்காதீர்கள். அவையும் பலவீனமானதாகவே இருக்கும். அப்படிப்பட்ட நேரங்களில் உள்ளே கேட்கும் சந்தேக இரைச்சல்களைக் கேட்பதை விட்டு மனதை அமைதியாக்குங்கள். பக்மினிஸ்டர் புல்லருக்குக் கூட இயற்கையின் அழகில் தன்னை மறந்து லயித்த அந்த நேரத்தில் தான் பிரபஞ்சம் பேசியது.

அப்படி இயற்கையின் அழகிலோ, மேலே குறிப்பிட்டது போல நல்ல தன்னம்பிக்கை தரும் வரிகளைக் கொண்ட நூல்களிலோ, இனிமையான இசையிலோ ஈடுபட்டு மனதை அமைதியாக்கி கவனியுங்கள். பிரபஞ்சம் உங்களுக்கும் சலிக்காமல் அந்தச் செய்தியைச் சொல்லும் நீங்கள் சாமானியர்கள் அல்ல. எல்லையற்ற பிரபஞ்சத்தின் வீரியமான ஓர் அங்கம்

எல்லையற்ற பிரபஞ்சத்தின் அங்கம் நீங்கள் என்றால் உங்களுக்கு எல்லை எப்படி இருக்க முடியும்.? எல்லைகள் நமது சிற்றறிவால் நாமாக ஏற்படுத்திக் கொள்வதே அல்லவா? நூறு வழிகள் உங்களுக்கு அடைந்திருக்கலாம். ஆனால் கோடான கோடி வழிகளைப் பிரபஞ்சம் ஏற்படுத்தி இருக்கும் போது வெறும் நூறில் அனைத்துமே முடிந்து விட்டதாக நீங்கள் எப்படி எடுத்துக் கொள்ள முடியும். இன்னும் பல கோடி வழிகள் உங்களுக்காக பிரபஞ்சத்தால் வகுக்கப்பட்டு இருக்கின்றன.

எனவே சோர்வை உதறி விட்டு உற்சாகத்தோடு நிமிருங்கள். புதிய வழிகளை ஆராயுங்கள். வெற்றி அலை உங்கள் பக்கம் திரும்பத் தான் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

★ இடியோசை கேட்டு பாம்பு நடுங்குவது ஏன்?

பாம்பின் காதான சவ்வு உடைந்தால் அது இறந்து விடும்.

★ மின்மினிப் பூச்சியின் வாலில் ஒளி தெரிவது ஏன்?

பொஸ்பரஸ் இருப்பதனால்

★ உணவு உட்கொள்ள முன் தண்ணீர் அருந்தும் மிருகம் எது?

குதிரை

★ முட்டையை நின்ற படி அடைகாக்கும் பறவை எது?

பெண்குயின்

★ சிலந்திக்கு எத்தனை கால்கள் உண்டு?

எட்டு

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

# வேண்டும் வேண்டும் - நான் வேண்டும் இவைகள் எனக்கு வேண்டும்...

தனிமை வேண்டும் – அதில்
இனிமை வேண்டும்
ஆற்றல் வேண்டும் – யாருமதை
போற்றல் வேண்டும்
நேர்மை வேண்டும் – எப்போதும்
உண்மை பேச வேண்டும்
நிம்மதி வேண்டும் – அதுவும்
நிலாவின் மடியில் வேண்டும்
கனிவு வேண்டும் – என்றும்
பணிவு யாரிடத்திலும் வேண்டும்
ஏற்றமிகு எண்ணம் வேண்டும் – அதை
எப்போதும் காத்தல் வேண்டும்
நண்பனொருவன் வேண்டும் – அவன் மேல்
நம்பிக்கை எப்போதும் – வேண்டும்
நல்லோரை எல்லோரும் காண வேண்டும் – நாம்
இல்லாரை எந்நாளும் உயர்த்த வேண்டும்
எல்லோரும் தான் யாரென்று அறிய வேண்டும் – யாரும்
மனிதன் தானென்று எல்லோரும் புரிய வேண்டும்
மொழிப்பற்று நாட்டுப்பற்று இருக்க வேண்டும் – ஆனால்
இனவெறியை மதவெறியை அறுக்க வேண்டும்
பெருங் கனவொன்று வேண்டும் அதுவும்
பொய்யாகாது நடக்க வேண்டும்

# வித்தியாசமான ஆமை

கடல் ஆமைகளில் மிகப்பெரியது, 'லெதர் பேக்டர்ட்டில்' என்பதாகும். இந்த ஆமையால் கடுங்குளிரைக்கூட தாங்கிக் கொள்ள இயலும். அதற்கேற்ப இதன் தடித்த தோல் பாதுகாப்பாக உள்ளது. இதற்கு மேல் ஓடு கிடையாது. இதன் உடல் மீது ஒரு விதமான பிசுபிசுப்பான எண்ணெய்த் தன்மை காணப்படுகிறது. இதுவும் கடுங்குளிரை தாங்கிக் கொள்ள உதவுகின்றது. இதனால் துருவப் பிரதேச கடல் பகுதிகளிலும் இந்த ஆமைகளை பார்க்கலாம். ஆறு அடி நீளத்துக்கு வளரும் இந்த ஆமைகள், அதிகபட்சமாக900 கிலோ எடை கொண்டதாக இருக்கும். கரையில் கூடு கட்டி முட்டையிடும் பெண் ஆமையை மனிதர்கள் கடத்திச் சென்று கொன்றுவிடுவதால் இதன் இனம் வேகமாக



அழிந்து வருகிறது. இப்போது உலகம் முழுவதும் ஆயிரத்து 500, லெதர் பேக்டர்ட்டில் கடல் ஆமைகள் மட்டும் இருப்பதாக சுற்றுப் புறச் சூழல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ம.ஷாலினி, தரம்-7,
யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை.



அ.சலோமி
தரம் 6, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# தர்மம் செய்



''தர்மம் தலை காக்கும்'' என்பது எமது மூத்தோர் வாக்கு. நாம் செய்யும் தான தர்மங்கள் எம்மை இன்பமாக வாழவைக்கும் என்பது இதன் பொருளாகும்.

நாம் பசியென்று வரும் ஏழைக்கு உணவு கொடுத்து உபசரிக்க வேண்டும். இன்றைய எமது சமூகத்தில் பெருஞ் செல்வந்தர்களுக்கே வாரிவாரி வழங்குகிறார்கள். இது புண்ணியமாகிவிடாது. ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பாய்'' எனும் வாக்குண்டு. ஏழைகளுக்கு உதவி செய்து அவர்கள் எம்மை வாழ்த்துவதைவிட வேறேதும் உயர்ந்த வாழ்த்தில்லை.

தனக்கு மிஞ்சித்தான் தானம் என்பர். அது சரியானது தான். ஆகையால் நாம் எமது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்த பின் மற்றவர்களுக்கு உதவ வேண்டும். நாம் எமது ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். எமது சமூகத்திலேயே அத்தியாவசிய தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாமல் பலர் துன்பப்படுகின்றனர்.

எனவே எமது தேவையற்ற செலவுகளைக் குறைத்து இயலுமான வரை மற்றவர்களுக்கு உதவ வேண்டும். நாம் செய்யும் தானதர்மங்கள் எமக்கு துன்பம் ஏற்படும் போது கூட சில வேளைகளில் வேறு ஓர் உருவெடுத்து நம்மை காக்கும். எனவே எம்மால் இயன்ற தான தர்மங்களைச் செய்வோமாக.

கலைப்பருதி இராஜகுலசிங்கம்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,6பி

# இலங்கையில் பிரசித்தி பெற்ற இடங்கள்

சீமெந்து புத்தளம், காங்கேசன்துறை
ஓட்டுப்பலகை கிந்தோட்டை
மரத்தளபாடம் மொரட்டுவை



காகிதம்
வாழைச்சேனை,
எம்பிலிப்பிட்டிய

புடவை துல்கிரிய, வியாங்கொடை



பிங்கான் பொருள்
இரத்தோட்டை,
பிலியந்தல



வெற்றிலை கம்பஹா



இறப்பர் கேகாலை



டயர் களனி



சீனி கந்தளாய்



தி.மேரி துஷ்க்கா டயஸ்
5பி, புனித சவேரியார் பெண்கள் தேசியப் பாடசாலை.



# நகரத்து எலியும் வயல் எலியும்

நகரத்து எலி ஒன்று வயல் எலி ஒன்றைச் சந்தித்தது. தான் இருக்கும் வீட்டுக்கு விருந்துண்ண அழைத்தது. அந்த வீட்டு மனிதர்கள் விருந்தை முடித்துப் போன பிறகு இரண்டு எலிகளும் மேசை மேல் சிந்தியிருந்தவற்றைத் தின்றன. விருந்து மிகப் பிரமாதமாக இருந்தது. ஆனால், சாப்பிடும் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அறை வாசலில் சத்தம் கேட்டது. உடனே நகரத்து எலி மறைவிடம் தேடி ஓடியது. வயல் எலி அதைப் பின் தொடர்ந்தது.

உள்ளே வந்த மனிதன் வெளியேறிய பிறகு, அங்கே அமைதி நிலவியது. ''வா, நாம் சாப்பிட்டு முடிக்கலாம்'' என்றது வீட்டு எலி. ''போதும்! நாளை நீ என் இருப்பிடத்திற்கு வா! இதைப் போன்ற விருந்து என்னால் தர முடியாது. ஆனால் இடையூறு இன்றி அமைதியாகச் சாப்பிடலாம். அச்சமும், மகிழ்ச்சியும் உள்ள ... நான் எளிமையும், நிறைவும் உள்ளதையே விரும்புகிறேன்''

என்று சொல்லிவிட்டுச் சென்றது வயல் எலி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வயதான பின்னர் மனிதனின் நிலை

வயதானவர்கள் விரும்புவது பணம் அல்ல, மாறாக பந்தம், அரவணைப்பு மற்றும் ஆறுதல் தேடி ஓடுபவர்கள் அனேகம். பல குழந்தைகளுக்குத் தந்தை ஆகும் பாக்கியம் பெற்றவர்கள், வாழ்வின் கடைசிக் காலத்தில், தன்னருகே ஒருவர் கூட இல்லாமல் உயிர் நீத்த துர்ப்பாக்கியத்தையும் அனுபவித்து இருக்கிறார்கள். அதேபோல, உயிரோடு இருக்கும்போது பெற்றோர்களுக்கு உதவாமல், இறந்த பிறகு ஈமக்கிரியை செய்வதில் பெருமை அடையும் சந்ததிகளையும் பார்க்கிறோம்.

■ பார்த்தசாரதி

வயதானவர்கள் விரும்புவது பணம் அல்ல, மாறாக பந்தம், அரவணைப்பு மற்றும் ஆறுதல் தேடி ஓடுபவர்கள்தான் அனேகமானோர். பல குழந்தைகளுக்குத் தந்தை ஆகும் பாக்கியம் பெற்றவர்கள், வாழ்வின் கடைசிக் காலத்தில், தன்னருகே ஒருவர் கூட இல்லாமல் உயிர் நீத்த துர்ப்பாக்கியத்தையும் அனுபவித்து இருக்கிறார்கள். அதேபோல, உயிரோடு இருக்கும்போது பெற்றோர்களுக்கு உதவாமல், இறந்த பிறகு இறுதிக்கிரியை செய்வதில் பெருமை அடையும் சந்ததிகளையும் பார்க்கிறோம். இப்படிச் செய்பவர்களுக்கு, இதே அவல நிலை வராது என்று என்ன நிச்சயம்!

வயதான காலத்தில் வரும் பிரச்சினைகளை மட்டுமே பெரிதுபடுத்திப் பார்க்காமல், இதற்குத் தீர்வு காணும் விதத்திலும் அனைவரும் சற்று யோசிக்க வேண்டும். நல்ல வசதி வாய்ப்புகள் இருந்தும், பிள்ளைகளால் சரிவரக் கவனிக்க முடியாத நிலையில், முதியோர் இல்லத்தில் வாழும் வயதான பெண்மணி ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதன் மூலம், முதியோர் இல்லத்தின் சூழ்நிலையைப் பற்றிய ஆய்வையும் அனைவரோடும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

வயதான காலத்தில், தங்களைக் கவனிப்பார் இல்லை என்ற சூழ்நிலையைச் சமாளிக்க முடியவில்லை என்றால், வெளி இல்லங்களில் வாழ்வதற்கும் மனதளவில் நாமே தயாராக்கிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் வருவது இயற்கைதானே!. தவிர்க்கமுடியாத சூழ்நிலையில், வேறு வழியில்லாமல், வெளி இல்லங்களில் வாழும் இழிந்த நிலை வரும்போது, இன்று முதியோர்கள் முகம் சுளிக்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை என்ற தகவல் சற்று நிம்மதி தருகிறது. சொந்த வீடுகளில் நாம் அனுபவிக்கின்ற அனைத்து வசதிகளும், கட்டணத்தைப் பொறுத்துத் தரமான முதியோர் இல்லங்களில் கிடைக்கின்றன. உறவினர்களாலும், பிள்ளைகளாலும் சொந்த வீட்டிலே பட்ட அவமானங்களும், அசௌகரியங்களும், உதாசீனங்களும் இங்கே இல்லை. குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குப் பொதுவான முதியோர் இல்லம் (common old age homes), வசதி உள்ளவர்களுக்கு தனிப்பட்ட முதியோர் காப்பகம் (gated community) என்று வசதி வாய்ப்புகள் இன்று பெருகிவிட்டன. வயதான காலத்தில் நல்ல முறையில் வாழ, ஆயுட் காப்பீடு, ஓய்வூதியம் போன்றவற்றில் முதலீடு செய்வது போல், இன்றைக்கு உங்களுக்கென்று தனியாக ஒரு முதியோர் இல்லம் (Gated community for old age people) கட்டித்தருகிறோம் என்ற விளம்பரங்களையும் நாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். உடல் நலத்தோடு நன்றாக உழைக்கும் போதே இம்மாதிரித் திட்டங்களில் முதலீடு செய்வதும் பிற்காலத்தில் வசதியாக, நிம்மதியாக வாழ உதவும்.

இம்மாதிரிப் பிரச்சினைகளுக்கு, இன்னொரு ஆறுதலான விடயம், வயதான முதியோர்களைப் பாதுகாக்க தமிழக அரசு புதிய திட்டம் ஒன்றைக் கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதி பொலிஸ் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளது. தனியாக வாழும் முதியோர், பெண்கள், குழந்தைகள் ஆகியோரைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நகர பொலிஸ் ஆணையாளருக்கு தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அந்தந்த இடத்தில் இருக்கும் பொலிஸ் நிலையங்களில் வரவேற்பாளராகப் பணியாற்றும் பெண் பொலிசார் இதற்கு உதவி செய்வார்.

60 வயது முதல் 100 வயது வரையிலான ஆண், பெண் முதியவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க இவர்கள் உதவி செய்வார்கள். உடனுக்குடன் முறைப்பாடுகளைத் தெரிவிக்க, பிரத்தியேகமான தொலைபேசி எண்ணையும் பொலிஸ் ஆணையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இந்தப் புதிய பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் முதியோர்கள், உறவினர் அல்லாதோர், பிள்ளைகள் வெளிநாட்டில் பணிபுரிகின்ற பட்சத்தில், தனியாக வாழும் வயது முதிர்ந்தோர் அருகிலிருக்கும் பொலிஸ் நிலையத்தை அணுகி பாதுகாப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.



இந்தக் கட்டுரையின் நோக்கமே, மனிதனாகப் பிறந்து விட்டால், அவன் கடைப்பிடிக்கவேண்டிய அனைத்துக் கடமைகளும் கூடவே வந்து விடுகின்றன. அவற்றுள் மிக முக்கியமான கடமையாக, வயதான பின் பெற்றோர்களைக் காப்பது என்பதை வலியுறுத்துவதுதான். எல்லோர் வீட்டிலும், பூஜை அறையில் பல தெய்வங்களின் படங்களுக்கு அருகில், எமது மூதாதையர் படங்களையும் இடம் பெறச்செய்கின்றோமே, அது எதற்காக?. என்று சிந்தனை செய்ய வேண்டும். அனுதினமும், பூஜை அறையைத் திறக்கும் போது, அவன் செய்ய வேண்டிய கடமைகளை, அந்தப் படங்கள் அறிவுறுத்தும். இன்று வாழ்கின்ற நல்வாழ்க்கைக்கு, நமது மூதாதையர்களே காரணம் என்பதை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு வருடமும், ஒக்டோபர் முதலாம் திகதியை, உலக முதியோர் தினம் என்று கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். அன்றைய தினம், தவிர்க்க முடியாத சூழ்நிலையால், முதியோர் இல்லங்களில் வாழும் முதியவர்களை உறவினர்களோடு குடும்பத்துடன் இணைந்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அனைவருக்கும் நினைவூட்டுவோம்.



கவியி

காயத்

புற்றுநோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையாமை

இராமஜெயபாலன்





ஆண்டுடன் உலகில் அழிவுகள் ஏற்படும் அல்லது
உலகம் அழிந்து முடிவுக்கு வரக்கூடும் என்ற
தீதியான எதிர்வு கூறல்களுடன் மிகப்பெரிய பாறை
பூமியை நோக்கி வருகிறது. அது பூமியைமோதி
போகிறது என்ற கதைகளும் பட்டி தொட்டி
பரவி விட்டிருக்கின்றது. உண்மையில்
அழியப்போகிறதா? என்ற கேள்விகளுக்கு விடை
இக்கட்டுரையின் நோக்கம்.

யாமை பற்றிய சிந்தனை கௌதம புத்தருக்கு மூப்பு,
ணம் ஏற்படுத்தியது. இது நிலையானது என்ற எண்ணங்
எதிர்மாறானது. மனிதன் உலகமும் தனது இருப்புக்
கவி அந்தஸ்துக்களும் இளமையும் நிலையானது
றியாமையில் ஆணவங்கொண்டு உலகில் பல
களைச் செய்கிறான். ஏற்றில் நிலையாமை பற்றிய
இயற்கை அவனுக்கு வழங்கி தனக்கும் பிறருக்கும்
த வாழ்க்கைக்கு இட்டுச்செல்லவே துறவறம் அல்லது
இலை நீர்போல் கடமையைச் செய்து பலனை

எதிர்பாராது வாழ்தல். பிறந்த எவரும் இறந்துதான் ஆக வேண்டும். மனித உடல் இரும்பினால் ஆனது அல்ல. அது பஞ்ச பூதங்களால் உருவாகி பஞ்ச பூதங்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தோற்றம் மாற்றத்தினூடாகவே படைப்புக்கள் எல்லாமே உருவானவை. எனவே பிறப்பு இறப்பு உயிரினங்களுக்கு இருப்பதுபோல் பூமியுட்பட இந்த ஞாயிற்றுத் தொகுதிக்கும் முடிவு இருக்கத் தான் செய்யும். ஆனால் எவ்வாறு பிறந்த உயிர்கள் மூப்பு பிணி காரணமாக இறப்பது போல் ஞாயிற்றுத் தொகுதியும் தன்னிடமுள்ள இயங்கும் வளங்கள் இருக்கும் வரை தான் இருக்கும். ஆனால் அவை படிப்படியாகவே முடிவுக்கு வரும். அவ்வாறு வரும்போது அதிக வெப்பம் அல்லது அதிக குளிர் காரணமாக உயிரினங்கள் படிப்படியாகவே அழிந்து செல்லும். ஆனால் உயிரினங்கள் விபத்துக் காரணமாக இறப்பது போல் ஞாயிற்றுத் தொகுதியும் விபத்துக் காரணமாக அழியுமா என்பதே தற்போதுள்ள கேள்வி?

சூரியனின் சீரானவெப்பம் ஞாயிற்றுத் தொகுதியின் சீரான இயக்கம் பஞ்ச பூதங்களைச் சீராக இயக்குகிறது. காலநிலை மாற்றங்கள் சீராக இடம்பெறுகிறது. உயிரினங்கள் பூமியில் தொடர்ந்து வாழ்கின்றன. பூமியும் தட்டையானது அல்ல. எல்லைகள் உள்ள கூட்பொருள் எல்லையில்லாது விரிந்து கிடப்பது வெற்றிடம். (பிரபஞ்சம்) எவ்வாறாயினும் ஞாயிற்றுத் தொகுதியின் இயக்கம் மிக இலகுவான அறிவியல் அதைப்புரிந்து கொண்டால் எல்லோராலுமே சுயமாகச் சிந்திக்க முடியும்.

பூமியை உணர்வு பூர்வமாக மன திருத்திச் சிந்தித்தால் நாம் பூமியின் மேற்பரப்பில் பூமியின் தொடுகையில் இருக்கிறோம். ஆனால் பூமி தனது தொடுகையில் இல்லாத வளி மண்டலத்தைக் கூட தனது ஈர்ப்பு சக்தியால் தன்னை விட்டு விலத்திச் செல்லாத படி தான் சுற்றும். அதே வேகத்தில் அவைகளையும் சுற்றச்செய்து ஞாயிற்றுத் தொகுதியையும் சுற்றியும் வருகிறது. எனவே நாமும் மிக வேகமாக பயணித்துக் கொண்டு இருந்தாலும் ஈர்ப்பு விசை காரணமாக நாம் இதை உணர்வதில்லை. எம்மை தடையில்லாது பயணிக்க உதவுது வெற்றி. (பிரபஞ்சம்) ஆனாலும் வேகமாக வெற்றிடத்தைக் கிளித்துக் கொண்டு நாம் பயணித்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

எவ்வாறாயினும் ஒரு குறிப்பிட்ட எல்லை வரையுள்ள பொருள்களை (திண்மம், திரவம், வாயு மட்டுமே தான் சுற்றும். அதே வேகத்தில் தன்னுடன் சேர்ந்து சுற்றச் செய்து சூரியனையும் வலம் வருகிறது. ஆனால் குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் உள்ள பொருள்களையும் சுற்றச் செய்து தன்னுடன் கவர்ந்து சென்றாலும் தான் சுற்றும் அதே வேகத்தில் சுற்ற வைக்க முடியவில்லை. இதனால் அவை வேறு வேகத்தில் சுற்றுகின்றன. ஆனால் அவைகளையும் கைவிடாது கவர்ந்து கொண்டே செல்கிறது. முக்கியமானது சந்திரன் தவிர செயற்கை கோள்கள், சிறுகற்பாறைகள், செயற்கைக் கோள்களின் கழிவுகள் எனப் பலவாறான பொருள்களையும் தன்னைச் சுற்றி வரும் விசையை பூமி கொடுத்து அவைகளையும் கவர்ந்து கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது.

எனவே பூமிக்குத் தன்னைத்தானே சுற்றிப் பிற பொருள்களையும் சுற்ற வைக்கும் சக்தி சுயமாக இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. உண்மையில் ஈர்ப்பு சக்தியைத் தவிர தன்னைத் தானே சுற்றும் சக்தி பூமிக்கு சுயமாக இல்லை. ஆனால் சூரியனுக்கு வெப்பமேற்காவுகை காரணமாக அதாவது நீராவி இயந்திரத்தின் செயற்பாடுபோல் சுயமாக இருக்கிறது. இதன் காரணமாக கோள்களின் ஈர்ப்பு விசைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு ஈர்ப்பு விசை வலைப்பின்னலாகி ஞாயிற்றுத் தொகுதியின் இயக்கம் நடக்கிறது. அதாவது சூரியன் பூமியையும் பிற கோள்களையும் இயக்க பூமியோ தனது உப கோள்களை இயக்குகிறது.

எனவே இந்த ஞாயிற்றுத் தொகுதிக்குள்ளான கோள்களின் இயக்கம் ஒரு சீராகவே நடை பெறுகிறது. இவற்றின் அடிப்படை களை அறிந்தே செயற்கைக் கோள்களும் விண்ணுக்கு ஏவப்படுகின்றன. தவிர சுயசெயல்திறன் கொண்ட றொக்கெட்டுக்கள் கூட பூமியிலிருந்து புறப்பட்டு பலமுறை பூமியை வலம் வந்து சூரியனின் பொதுவான பாதையில் பயணித்து அந்தந்தக் கோள்களின் மண்டலங்களுக்குள் பிரவேசிக்கின்றன.

## யில் களையும்
## த்தின் காயம்

ஆரோக்கியம் ஒளிரட்டும்-எம்
நலன் பேணல் மிளிரட்டும்
ஆய்வுகள் பெருகட்டும்-எம்
கடமைகள் தொடரட்டும்



ய்

து புகைத்தல்
து மதுபோதை
து வெற்றிலை பாக்கு மெல்லல்
து இரசாயன நஞ்சுக்கள்

விழிப்பில் விரைந்திடும் சிகிச்சை-புற்று
கள் எமை உயிர்க்கு
துயிர் வெற்றிட்டாங்கு
பலபேறுடன் வாழப்புற்று

புற்று நோயல்ல கேளீர்
தொற்று நோயல்ல கேளீர்
க்கங்கள் கடிதின்-யாம்
ந்திடலாம் நோயின்றியே.

### காசநோய்

இருகிழமைகளுக்குஇருமிலெனில்சளிப்பரிசோதனை சிறப்பே
இருமாதிருத்தல் எவரெதிலும் என்றென்றும் மிக நன்றே
மையப் சிகிச்சை நிலையம் நாடல் இன்றே
தேர்வுடன் நலன் பேணல் நன்றே

சளை இருமல் ஏழைகளுக்கு ஏற்படும்
வேளை உணவு இன்றேல் ஏற்படும்
மாலைக் காய்ச்சல் உடன் ஏற்படும்
தோலைச் சுருக்கி உடல்குறைவு ஏற்படும்

ஒழுங்காக மருந்துகள் ஆறு மாதங்கள்-இன்றேல் மழுங்காது
வருத்தம் கேளீர் வழுவாது மருந்துகளை உள்ளெடுத்தால்
கழுவாது மரணம் கேளீர் காசநலன் சிறக்கட்டும்-அதன்
சமூக நாணம்

### டெங்குநோய்

வாடம்பிடிப்போம்-அடங்குவது டெங்கு என
தொடங்கிடுவோம்-நுளம்பு ஒழிப்பினை இன்றே
தடமிடுவோம்-நீர் தங்கி நுளம்பு பெருகுதல்தனை
தடமிடுவோம்-எம்மிடத்தை புத்தொளிர்வுடன்
இடம்பல தேடி புல் பூண்டுகளை அழிப்போம்
இடம்கொடோம் டெங்கு இழப்பினை இங்கு.

■ மருத்துவர் யமுனானந்தா



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல்-தொடர்பாடல் ஊடகக் கற்கை மாதிரி வினாத்தாள்கள்-விடைகள் (பகுதி-1)



க.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பொதுப் பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் ம.இராஜேஸ்வரன் ''தொடர்பாடல் ஊடகக் கற்கை: வினாத்தாள்கள் விடைகள் [பகுதி 1]'' எனும் தலைப்பில் தயாரித்து வெளியிட்டுள்ளார்.

தொடர்பாடல் ஊடகக் கற்கை பாடத்தை கற்கின்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்த நூல் ஒரு கற்றல் வளமாகப் பயன்படும். தேசிய மட்டத்தில் இப் பாடத்திற்காக வெளிவருகின்ற முதலாவது தமிழ் மொழி மூல மாதிரி வினாத்தாள் தொகுப்பாகவும் இந்த நூல் அமைகின்றது.

அறிவுசார் சமூக உருவாக்கத்தின் கருத்தியல் முனைப்புப் பெற்றுள்ள சமகாலத்தில் அவற்றினை வடிவமைக்கின்ற கல்விச் செயற்பாடும், புதிய புதிய அறிமுகங்களை தன்னுள் உள்வாங்கிக் கொள்வதை உரைக்கவடியதாய் உள்ளன. கல்வி அறிவுசார் சமூக உருவாக்கத்திற்கான பிரதான கருவியாக பயன்படுத்தப்படுதல் வலியுறுத்தப்படுகின்றது. அந்த வகையில் இந்த நூல் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

## நூல்- "கலாசுரபி"




யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 12 ஆவது கலாசுரபி மலர் வெளிவந்துள்ளது. கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனின் அறிக்கையுடன் ஆரம்பிக்கும் இந்நூல் அதிபர், ஆசிரியர், மாணவர்களை ஊக்குவிப்பது தொடர்பான கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது.

மேலும் விசேட தேவையுடைய பிள்ளைகளது உரிமைகளைப் பற்றியும், இனிதாய் வாழ்வோம், இலங்கையில் கட்டாயக் கல்வி, ஆசிரியத்துவத்தின் வெற்றிக்கு பங்களிப்பு செய்வதில் முக்கியத்துவம் பெறும் பிள்ளை வளர்ச்சியும் அதன் பருவங்களும் எனும் தலைப்பில் புள்ளி விபரங்களுடனும் கட்டுரைகள் விரிவுரையாளர்களால் எழுதப்பட்டுள்ளன.

''தொடர்பாடல்'' மேடை நாடக உரை நடையும், கவிதைகளும், பீடாதிபதியுடனான நேர்காணலுடன், கல்லூரி நிகழ்வுப் படங்களையும் தாங்கி உள்ளது. பேராசான் கலாகீர்த்தி பேராசிரியர் சி.தில்லைநாதனின் பணிகளின் பயன்கள் எனும் பவளவிழா நினைவுக் கட்டுரையையும் உள்ளடக்கி 140 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

## நூல்- "அபிராமியின் காதலன்"



''அபிராமியின் காதலன்'' என்ற தலைப்பில் குறுநாவலை நீர்வை தி.மயூரகிரி எழுதி வெளியிட்டுள்ளார். அதிகம் அறியப்படாத ஒரு காலத்தையும் வம்சத்தையும் நிலைக்களனாகக் கொண்டு இந்தக் குறுநாவல் நகர்கிறது. கேரளாவின் வீர அரசனான பழசிராஜாவின் வரலாறு பேசும் திரைக்கதை புகைப்படங்கள் பக்கங்களை அலங்கரிக்கின்றன.

யாழ்ப்பாணத்தாருக்கும் மலையாளத்தாருக்கும் நிறையத் தொடர்பு உள்ளது. பேச்சு, உடை, நடை, பாவனை, உணவு, வீரமைப்பு எல்லாவற்றிலும் மலையாளச்சாயல் நிறையவே இருக்கிறது. யாழ்ப்பாணத்தாருக்காக பிரித்தானியர் காலத்தில் உருவாக்கப்பட்ட தேசவழமைச் சட்டம் கூட யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மலபார் மக்களுக்கானது.

இந்தத் தொடர்பையும் கற்பனை கலந்து இந்த நாவலில் சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்ப்பாண அரசின் முன்னைய காலத்தை மையமாக வைத்து இந்த நாவல் நகர்வது குறிப்பிடத்தக்கது.

## நூல்- கும்பாபிஷேக சிறப்பு மலர்




குப்பிளான் வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் கோவிலின் கும்பாபிஷேக சிறப்பு மலர் 2012 வெளிவந்துள்ளது. ஆலய பரிபாலன சபையால் வெளியிடப்பட்டுள்ளது.

கன்னிமார் கௌரியம்பாள் கோவிலின் மகிமையைப் பற்றிய கட்டுரைகளும், துதிப்பாடல்களும், கோவிலில் வீற்றிருக்கும் அம்பாளின் வர்ணப்படங்களுடன் வெளிவந்துள்ளது.

இந்த ஆலயத்தின் தொன்மையினையும், அற்புதங்களையும் ஆவணப்படுத்துமுகமாகவும் எதிர்காலச் சமூகத்துக்கு வரலாற்றுச் செய்தியை சுறுவதாகவும் இந்த மலர் வெளிவந்தது சிறப்புக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமை இருந்தும் தோல்வி ஏன்?



■ இணையவன்

நமது அன்றாட வாழ்க்கையில் பல துறைகளில் பல திறமையாளர்களைப் பார்க்கிறோம். நாளடைவில் அவர்களில் மிகச் சிலரே அந்தந்தத் துறைகளில் வெற்றி அடைகிறார்கள். பெரும்பாலானோர் நாம் எதிர்பார்த்த அளவு சாதனைகள் புரியாமல், இருந்த சுவடே தெரியாதபடி காணாமல் போவதையும் பார்க்கிறோம். அப்போதெல்லாம் நம்மால் வியப்படையாமல் இருக்க முடிவதில்லை.அதுவும் வெற்றியடைந்தவர்களை விட அதிக திறமை கொண்டவர்கள் என்று நாம் கணித்தவர்கள் சாதிக்காமல் போய் விடும் போது அது ஏன் என்ற ஒரு மிகப் பெரிய கேள்வி நமக்குள் எழாமல் இருப்பதில்லை. அதற்கு ''விதி'' என்ற மிக வசதியான பதிலை நமக்கு நாமே சொல்லிக் கொள்கிறோம்.

ஆனால் அபூர்வமாய் ஒருசில விதிவிலக்குகள் தவிர அந்த விதி அவரவர்களால் எழுதப்படுவது அல்லது ஏற்படுத்திக் கொள்வது என்பதே நிதர்சனமான உண்மை. ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் தோல்வி அடையும் அனைவருக்கும் பொதுவாக மூன்று குணாதிசயங்கள் இருப்பதை நம்மால் காண முடியும்.

அதில் முதலாவது, அவர்களுக்குள்ளே சாதனை புரிந்தே ஆக வேண்டும் என்ற அக்னி இருப்பதில்லை. இது இல்லாத வரை எத்தனை திறமை இருந்தாலும் அது பிரகாசிப்பதில்லை. இரண்டாவது, அவர்கள் ஈடுபாடுகள் சீராகவும், தொடர்ச்சியாகவும் ஒரே விஷயத்தில் இருப்பதில்லை.

இன்று ஒன்றில் ஈடுபாடு, நாளை வேறு ஒன்றில் தீவிர ஈடுபாடு, சில நாள்களில் புதிதாக ஒன்றில் பேராவல் என்று மாறிக் கொண்டே போகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் பல நல்ல ஆரம்பங்கள் இருக்கின்றன, திறமைக்கும் குறைவில்லை என்றாலும் எதிலும் முழுமை இருப்பதில்லை.மூன்றாவது, அவர்கள் வெற்றி வரும் வரை பொறுமையாக தாக்குப் பிடித்து நிற்பதில்லை.

தற்காலிகத் தோல்விகளிலேயே பின்வாங்கி விடுகிறார்கள். தற்காலிக தடங்கல்களும், நிராகரிப்புகளும், தோல்விகளும் முயற்சிகளைக் கைவிடப் போதுமானவையாக இருக்கின்றன. இந்த மூன்று தவறுகளையும் வெற்றியாளர்கள் செய்வதில்லை. இதை தங்கள் துறையில் சிகரத்தை எட்டிய இருவர் வாழ்க்கை அனுபவங்களைப் படித்தால் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

பாஸ்கல் (Pascal) என்கிற கணித மேதையை அறியாதவர் இருக்க முடியாது. அவர் பிற்காலத்தில் தத்துவஞானியாகவும் விளங்கினார். அவர் வாழ்ந்த காலகட்டத்தில் சட்டம் மட்டுமே மேல்நிலை மக்களின் கௌரவமான தொழிலாகக் கருதப்பட்டது. எனவே அவர் தந்தை மகன் சட்டப் பேரறிஞனாக வர வேண்டும் என்று ஆசைப்பட்டார். பாஸ்கலோ கணிதத்தில் தான் மிகுந்த ஈடுபாடுடன் இருந்தார். எத்தனை அறிவுரை கூறியும் மகன் மாறாததைக் கண்ட தந்தை கடைசியில் மகனை சட்டப் புத்தகங்கள் மட்டுமே நிறைந்த அறையில் வைத்துப் பூட்டி வைக்கத் தொடங்கினார்.

உள்ளே கணிதக் கோட்பாடுகளை மகன் எழுதிக் கொண்டு இருப்பதை பின்னர் கண்டுபிடித்த அவர் அங்கிருந்து எழுது கருவிகள், தாள்கள் அனைத்தையும் அப்புறப்படுத்திப் பார்த்தார். ஆனால் பாஸ்கலோ கரித்துண்டினால் தரையில் எழுதிப் பார்க்கத் தொடங்கினார். கடைசியில் தந்தை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. அவர் ஆவலுடன் தன் கணித ஆராய்ச்சி களில் ஈடுபட்டார். ஆரம்பத்தில் பிற கணித மேதைகள் இவருடைய வித்தியாசமான, புதிய கோட்பாடுகளை அங்கீக ரிக்கவில்லை.

(தொடரும்)

# பாவியென்று பெயரெடுக்காதே!

உலகில் மனிதன் பிறக்கும் போதே தீயவனாகப் பிறப்பதில்லை; தூயவனாகவே பிறக்கின்றான்.

யாரும் பாவியாக ஆகவேண்டும் என்று இறைவன் நினைப்பதில்லை.

நீ செய்யும் செயல்கள் நல்லவையாக இருந்தால், நல்லவன் என்று நானிலத்தோரால் போற்றப்படுவாய்.

தீமையாக இருந்தால் ''மகாபாவி'' என்று தூற்றப்படுவாய்.

நல்லவன் என்று பெயரெடுப்பது கடினம்தான். அதற்காக நீ தீய வழியில் செல்லாதே!

நீ செய்யும் நல்ல செயல்களுக்குத் தகுந்த நற்பெயர் கிடைக்கவில்லை என்றும் வருந்தாதே!

அதைத்தான் நான் முன்பே கூறினேன்.

நீ செய்யும் செயல்களுக்குரிய பலனை எதிர்பார்க்காதே என்று சிலர் தொடக்கத்தில் நல்ல செயல்களைச் செய்வர். ஆனால் அவர்களுக்கு கெட்ட பெயரே வரும்.

அதனால் அவர்கள், நல்லதைச் செய்தும் கெட்ட பெயர் எடுப்பதை விட கெட்டதையே செய்துவிடலாமே என்று தீமையின் பக்கம் சாய்ந்து விடுகின்றனர்.

ஆனால், இது மாபெரும் தவறு.

நல்ல பெயரெடுக்க வேண்டுமென்றால் சற்றுப் பொறுமையாக இருத்தல் அவசியம்.

தாமதமாக வந்தாலும் நல்ல பெயர் நிலைத்து நிற்கும்.

எக்காரணத்தைக் கொண்டும் நீ நல்ல வழியில் இருந்து தவறிவிடாதே!

நீ செய்யும் நன்மைகளை மக்கள் போற்றுகிறார்களோ இல்லையோ, இறைவன் பார்த்துக் கொண்டே இருக்கின்றான்.

அவன் அனைத்தையும் அறிவான்.

ஆதலால் மனம் வருந்தாதே!

நல்லவன் தொடக்கத்தில் சிறிது துன்புற்றாலும் நிரந்தரமான மன அமைதியையும், நிம்மதியையும் நிச்சயம் ஒரு நாள் பெறுவான்.

ஆனால் தீயவன் இன்பமாக இருப்பதாகத் தோன்றினாலும் அவன் இப்பிறவியிலேயே அதிக துன்பத்தையும் பெற்று இறைவனின் தண்டனையையும் பெறுகிறான்.

**''ஆவியொடு காயம் அழியினும் மேதினியில் பாவியென்ற நாமம் படையாதே!''**

என்றார் பட்டினத்தார்.

நீ பாவியென்று பெயரெடுத்தால் இறந்த பின் உன் சடலம் சுடுகாடு சென்றால் உன்னை எரிக்க நெருப்புக் கூட நாணமுறும்.

''இந்தப் பாவியின் உடலை நான் எரிக்க வேண்டுமா?'' என்று.

புதைத்தால் மண்ணும் வெட்கப்படும்.

''இந்தப் பாவியின் உடலை நான் வைத்திருக்க வேண்டியுள்ளதே'' என்று.

நீ ஏன் பாவியென்ற பெயரெடுக்க வேண்டும்?

மனிதர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில், எத்தனையோ, மகான்கள், ரிஷிகள், இறைவனும்கூட பல நல்ல வழிகளைக் கூறியுள்ளனர்.

அவற்றை உன் வாழ்வில் பின்பற்றச் சிறிதளவாவது முயற்சி செய்.

**பாவம் என்னும் சேற்றில் மூழ்காதே!**
**பாழ்நரகக் குழிக்குள் வீழாதே!**
**நன்மைகள் செய்திட நாணாதே!**
**தீமைகள் செய்துலகில் வாழாதே!**



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# வாசகர் திருமுகம்

## மக்கள் பாதிக்கப்படாது சேவை செய்வார்களா?

கடந்த 3.12.2012 ஆம் திகதி தென்மராட்சி கிராமஅலுவலர் பிரிவு ஒன்றில் மாதாந்த உதவிப் பணம் பெறும் 70 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கான மீளாய்வுப் பணிகள் நடைபெற்றன. மனதுக்கு வேதனைதரும் விடயம் என்னவென்றால் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மாதாந்த உதவிப் பணம் பெறும் மக்களை இன்னொரு கிராம அலுவலர் பிரிவுக்கு சுமார் ஒரு மைல் தூரம் அலைந்து மீளாய்வுப் பணிகள் இடம்பெற்றன. பெரும்பாலான வயோதிபர்கள் கால்நடையாகச் சென்று மீளாய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

வறுமைக்கு உட்பட்ட மக்களை ஒரு மைல் தூரம் நடக்க வைத்து மீளாய்வுப் பணிகள் செய்தமை கவலைக்குரிய விடயம். மீளாய்வுப் பணிக்கு வந்தவர்கள் அந்தந்தப் பிரிவில் தமது சேவையைச் செய்யாமல் விடுவது மக்களை மேலும் கஷ்டத்துக்குள் தள்ளும் செயலாகும். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து செயற்படுமாறு கேட்டு நிற்கின்றேன்.

**சந்திரன், தென்மராட்சி**

## வீதியைப் புனரமைத்து தருவார்களா?

யாழ். மீசாலைப் பகுதியில் உள்ள பிரதான வீதியையும் பச்சு வீதியையும் இணைக்கும் வடக்குத் தெற்கு முதலாவது வீதி நீண்டகாலமாக கவனிப்பார் அற்ற நிலையில் உள்ளது. இது பற்றி சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இருபது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத இந்த வீதியால் பயணங்களை மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இறுதியாக இது பற்றி பருத்தித்துறையில் இயங்கும் வீதி அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்தில் நேரில் சென்று முறையிட்டோம். அதற்கும் அவர்கள் போதிய நிதி இல்லாமல் இருக்கிறது என்று கூறுகின்றனர்.

வீதி துப்புரவுப் பணிகள் நகரசபை ஊழியர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வீதி நகர சபைக்கு எல்லையாக இருக்கும் முதல் வீதியாகும். இந்த வீதியை நல்ல முறையில் வைத்திருப்பது நகர சபையின் கடமையும் மக்களின் கடமையும் ஆகும்.

எமது நகரசபையினரின் சகல வீதிகளும் நல்ல முறையில் திருத்த வேலைகள் நடைபெற்று முடிந்து சிறந்து விளங்கும் போது எமது வீதி மட்டும் பழுதடைந்த நிலையில் இருப்பது மிகவும் வேதனையளிக்கிறது. எனவே எமது மக்களின் அன்றாடப் பிரச்சினையாக விளங்கும் போக்குவரத்துச் சிரமங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**வே.கிருஸ்ணராசா, மீசாலை வடக்கு**

## கழிவுகள் தேங்கும் விளங்கியவத்தை வீதி

அச்சுவேலி பிரதான வீதியினூடாக, செல்வச்சந்நிதி தொண்டமானாறு வீதியில் [illegible] முன்பாக அமைந்துள்ள விளங்கியவத்தை எனும் வீதியானது ஏறத்தாழ 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுகிறது. இந்த வீதியானது அச்சுவேலி பிரதான வீதியின் வல்லை வீதிக்கு தொடர்புடையது.

விளங்கியவத்தை என்னும் இடத்தில் 15 இற்கும் மேற்பட்ட நிரந்தரக் குடிமக்களும் 200 இற்கு மேற்பட்ட பாதசாரிகளும் நாளாந்தம் பயன்படுத்தும் வீதி இதுவாகும்.

பிரதான வீதி புனரமைக்கப்பட்டதால் அங்கிருந்து வரும் வெள்ளம் இந்த வீதியில் தேங்கியுள்ளது. சென்றடையும் குளமும் புனரமைக்கப்படாததால் வெள்ளக்காடாக இந்த வீதி காட்சியளிக்கிறது. வல்லை வீதியில் அமைந்துள்ள மதுபானசாலையிலிருந்து வரும் கழிவுப் பொருள்களும் இந்த வீதியில் தேங்கிக் கிடக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து கடிதம் கையளித்தும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

**பிரதேச மக்கள்**

## உணவகங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படுமா?

யாழ்.குடாநாட்டு உணவகங்களில் ஒரு சில உணவகங்களில் மட்டும் உணவுப் பண்டங்களின் விலைகள் விலைப்பட்டியல் மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. பெரும்பாலான உணவகங்களில் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படாததால் பாவனையாளர்கள் பெரும் சிரமம் அடைவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை சிற்றுண்டிச்சாலைகளில் ஒவ்வொரு கடைக்கு கடை உணவு வகைகள் (தின்பண்டங்கள்) மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. அண்மையில் இது தொடர்பான சிக்கலொன்றில் மாட்டிக் கொண்டேன். ஒரு தேநீர்ச்சாலையில் தேநீரும் ஒரு றோலும் அருந்தியதற்கு 20 ரூபா அறவிடப்பட்டது. வடமராட்சிப் பகுதி உணவகம் ஒன்றில் அதேபோல் உணவு அருந்தியபோது 35 ரூபா அறவிடப்பட்டது. உணவக உரிமையாளருடன் அது பற்றிக் கேட்ட போது, தரம், அளவு எனக் காரணம் கூறப்பட்டது. அதில் உண்மையும் உள்ளதை மறுக்கமுடியாது? சட்டைப் பையில் மேலதிகமாகப் பணம் இருந்ததால் அவமானப்படுவது தவிர்க்கப்பட்டது. ஏன் இந்தச் சிக்கல்? உணவகங்களில் தின்பண்டங்களின் விலைகளை பட்டியல் இட்டு காட்சிப்படுத்தினால் உணவருந்த வருவோர் தம்மிடம் உள்ள பணத்திற்கேற்ப சமாளித்துக் கொள்ளலாம். பலசரக்குக் கடைகளில் வாங்கிய பொருள்களை பணம் போதாது விட்டால் திருப்பிக் கொடுத்து கணக்குத் தீர்க்கலாம். ஆனால் உணவகத்தில் உண்டபின் என்ன செய்யமுடியும்? அது மட்டுமின்றி உணவுப் பொருள்களை உண்பதற்கு முன்னர் அவற்றின் விலை விபரம் கேட்பது நாகரிகமுமல்ல.

எனவே உணவக உரிமையாளர்கள் கடையில் விற்பனைக்கு வைத்திருக்கும் உணவுப் பண்டங்களுக்கான விலை விபரங்களை உணவருந்த வருவோர் தெரிந்துகொள்ளும் விதத்தில் காட்சிப்படுத்தினால் சிரமங்களைத் தவிர்க்கலாம் அல்லவா?

**மு.அருணமச்சந்திரன், வடவரணி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண்களின் அழகு இரகசியங்கள்

பெண்களுக்கு மட்டும்தான் அழகு இரகசியங்கள் இருக்கிறதா என்ன ? ஆண்களுக்கும் இருக்கின்றது. நீங்களும் உங்களை அழகுபடுத்திக் கொள்ளும் ஆண் என்றால் உங்களுக்கான அழகுக் குறிப்புகள் இதோ.

பெரும்பாலான ஆண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதே இல்லை. அவர்களை பொறுத்தவரையில் முக அலங்காரம் என்பது ஷேவ் செய்வதும் மீசையை அழகுபடுத்திக் கொள்வது மட்டுமே.

நீங்கள் முகச் சவரம் செய்து கொள்வது மட்டும் அல்லாமல் பேசியல் செய்து கொள்ளலாம். முகத்துக்கு கிரீம் தடவி உங்களை அழகுபடுத்திக் கொள்ளலாம். அவ்வாறு முகம் பளபளப்புடனும் ஜொலிப்புடனும் இருக்கும் ஆண்களைத்தான் பெரும்பாலும் பெண்கள் விரும்புகின்றனர். எனவே கொஞ்சம் முகச் சவரம் செய்து கொண்டு முகத்தை அழகுபடுத்துங்கள்.

பெண்களைப் பொறுத்தவரையில் ஆண்கள் முகத்துக்கும் சருமத்துக்கும் கவனம் செலுத்துவதே இல்லை. பெண்கள் ஆண்மை தன்மையை மட்டும் விரும்புவது இல்லை. அழகுக்குத்தான் அதிக முக்கியத்துவம் தருவார்கள். சில ஆண்களுக்கு முக சுருக்கங்களும் பருக்களும் அவர்கள் அழகையே கெடுத்து விடும். நீங்கள் உங்களுக்கான கிரீம்களை தடவி உங்கள் சருமத்தை அழகுபடுத்திடுங்கள். நீங்கள் சருமத்தின் மீது கவனம் செலுத்துங்கள் பின்பு பெண்கள் உங்கள் மீது கவனம் செலுத்த ஆரம்பிப்பார்கள்.

நெயில் பொலிஸ், லிப்ஸ்டிக், வாசனை திரவியங்கள் என அனைத்து பொருள்கள் இருந்தாலும் ஆண்கள் அதன் மீது ஆர்வம் கொள்வது இல்லை. ஆண்கள் அளவோடு அழகு சாதனப் பொருள்களை பயன்படுத்துவது ஆண்களை அழகோடு வைத்திருக்கும்

முகத்துக்குப் புன்னகை சேர்க்கும் விதமாக விளங்குவது பற்கள். அந்தப் பற்களை எவ்வளவு சுத்தமாக பாதுகாத்து கொள்ள வேண்டும். ஆனால் புகை பிடித்து பற்களின் நிறத்தை கெடுத்து கொள்கிறார்கள்.

பற்களின் நிறத்தை பளிச்சிற வெண்மைக்குக் கொண்டுவர பல சிகிச்சை முறைகள் வந்து விட்டன. தினமும் இரு முறை பல் துலக்குவதே பற்களின் பாதுகாப்புக்குப் போதுமானது.

ஆண்களும் தலைமுடியைப் பராமரிப்பதில் நல்ல ஆர்வம் காட்டுகிறார்கள். கவர்ச்சிகரமாக முடிவெட்டிக் கொள்வது, அவ்வப்போது ஸ்டைலை மாற்றிக் கொள்வது இளைஞர்களின் வாடிக்கையாக இருக்கிறது. இதுமட்டும் கேசப் பராமரிப்புக்குப் போதுமானதல்ல. முடிகள் உடைந்து, உதிர்ந்து போகாமல் பார்த்துக் கொள்வது அவசியம். தலையில் பொடுகுகள் பெருகுவது இதுபோன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும்.

எனவே சீயக்காய், ஷாம்பு போன்ற ஏதாவது ஒன்றைத் தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் தலைமுடியைப் பராமரிக்கலாம்.

ஆடை அலங்காரம் என்பது மற்ற அலங்காரங்களைவிட முக்கியமானது. விலைஅதிகமான கோட், சூட், டை என்று அணிவதுதான் ஆடை அலங்காரம் என்று எண்ணிவிடாதீர்கள். சாதாரண உடைகளையும் நன்கு சலவை செய்து அணிந்தால் போதுமானது. அழுக்கு இல்லாமலும், பட்டன்கள் அறுந்து போகாமலும் உள்ள உடைகளை அணியுங்கள்.

எல்லோரிடமும் கலகலப்பாக பேசுங்கள். நல்ல பேச்சாளன் என்ற பெயரை வாங்குங்கள். அப்போதுதான் நீங்கள் ஓர் இடத்தைவிட்டு நகர்ந்தாலும் அங்கு உங்களின் நினைவை நீங்காமல் இடம்பெறச் செய்வது உங்களது கனிவான பேச்சுதான். இப்படி அத்தனையும் இருக்கும் ஆண்களைத்தான் பெண்கள் விரும்புகிறார்களாம்.

## பழுப்பு கண்களா? அழகாக்க டிப்ஸ் இதோ

முகத்தின் அழகை அதிகரித்துக் காட்டுவது கண்கள். கண்ணின் கருவிழிகள் கருப்பாக இருப்பது அனைவருக்கும் இயல்பானது. சிலரது கண்கள் பழுப்பாகவும், சிலரது கண்கள் நீலமாகவும் இருக்கும். கண்களின் நிறம் கருவிழியின் மெலனோசைட்டுகளால் உற்பத்தி செய்யப்படும்

மெலனின் என்ற நிறப்பொருளின் வேறுபடும் விகிதாசாரத்தால் ஏற்படுகின்றன

பழுப்பு கண்களை உடையவர்கள் அதற்கேற்ப மேக் அப் போட்டால் கண்களை கவர்ச்சியாகக் காட்ட முடியும் என்கின்றனர் அழகியல் நிபுணர்கள்.

பழுப்பு நிறக் கண்களுக்கு ஏற்ற ஐ ஷேடோவை வாங்கி பயன்படுத்தலாம். அடர் நிற ஷேடோக்கள் பழுப்பு நிற கண்ணுக்கு ஏற்றது. கருப்பு, நீலம், ப்ளு க்ரே, பேர்பிள் போன்றவை பழுப்பு நிற கண்களுக்கு ஏற்றது.

ஐ லைனர், மஸ்காரா போன்றவை கருப்பு அல்லது சில்வர் ஷேடோவில் இருக்கவேண்டும். கீழே உள்ள கண் இமைக்கு திக்காக போடுவதன் மூலம் கண்களின் அழகை அதிகரித்துக் காட்டும். மெட்டாலிக் நிறங்களான கோல்ட், காப்பர், சில்வர் ஐ ஷேடோக்கள் பழுப்பு நிற கண்களுக்கு ஏற்றது.

லைட் கலர் ஐ லைனர் பயன் படுத்துவதன் மூலம் கண்களை எடுப்பாக காட்டலாம். லைட் ப்ளு ஐ லைனர் பென்சில் கொண்டு கீழ் இமைகளில் லேசாக வரைய வேண்டும்.

நமக்கு சரும நிறத்துக்கு ஏற்ற ஐ ஷேடோ பயன்படுத்துவது ஹைலைட் ஆகும். அதே சமயம் உதட்டுக்கு டார்க் கலர் லிப் கிளாஸ் பயன்படுத் தலாம். அழகியல் நிபுணர்கள் கூறியுள்ள இந்த ஐ மேக் அப் போட்டால் பழுப்பு நிறக் கண்கள் பக்காவாக இருக்கும் என்கின்றனர் அழகியல் நிபுணர்கள்.



## கோடை கால சருமப் பராமரிப்பு



கோடை காலத்தில் சருமத்தில் உள்ள நுண் துளைகளில் அதிக அளவு கழிவுகள் அடைத்துக் கொள்கின்றன. இதனால் சருமத்தின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதோடு தொற்று நோய்களும் ஏற்படுகின்றன.

கண்ணுக்குத் தெரியாத வகையில் காணப்படும் தோலின் நுண் துளைகள், பருக்கள் மற்றும் கொப்புளங்கள் ஆகியவற்றால், கண்ணுக்குத் தெரியும் அளவுக்கு பெரிதாகி, அழகைக் கெடுக்கும் வகையில் காணப்படுகிறது.

எண்ணெய் வகை சருமத்தினருக்கே, இந்தப் பிரச்சினை அதிகம் ஏற்படுகிறது என் கின்றனர் அழகியல் நிபுணர்கள். தரம் குறைந்த அழகு சாதனப் பொருள்களைப் பயன்படுத்தினாலும் சருமம் பாதிக்கப்படுகிறது என்கின்றனர் நிபுணர்கள். சருமத்தை பாதுகாக்க அவர்கள் கூறும் ஆலோசனைகள்.

முதலில் தோலை சுத்தப்படுத்தும் விதிமுறைகளை கையாள வேண்டும். அதன் பின் 5 நிமிடங்கள் ஆவி பிடித்த பின், தோலில் விரிவடைந்த நுண் துளைகளை சரி செய்வதற்கான பராமரிப்புகளை மேற்கொள்ளலாம்.

காய்கறிகள், பழங்கள் அல்லது மூலிகைகள் அடங்கிய பேஸ் பக்குகள் தோலில் விரிவடைந்த துளைகளை சரி செய்ய உதவுகிறது.

ஓட்மீலுடன் வெள்ளரிச்சாறை கலந்து முகத்தில் பூசி 2 நிமிடங்கள் முதல் 3 நிமிடங்கள்வரை வைத்திருந்து பின் கழுவலாம்.

நன்கு மசிக்கப்பட்ட தக்காளியுடன் சில துளி எலுமிச்சை சாறை கலந்து முகத்தில் தேய்த்து கழுவினால், சிறப்பான பலன் கிடைக்கும்.

ஆரஞ்சு தோல் பவுடர், ஓட்மீல் மற்றும் பாதாம் எண்ணெய் ஆகியவற்றை சம அளவில் எடுத்துக் கொண்டு, அதற்கு இரண்டு பங்கு தேன் மற்றும் ஒன்றரை பங்கு அளவிற்கு தயிர் சேர்த்து நன்கு கலக்க வேண்டும்.

இந்த கலவையை முகத்தில் பூசி, 5 நிமிடங்கள் முதல் 7 நிமிடங்கள்வரை வட்ட இயக்கத்தில் நன்கு தேய்த்து வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org